
# ஸ்ரீ குருப்யோ நம:



**‘திராவிடாசாரியார்’** என்று அறியப்படும் **ஸ்ரீ இராமகிருஷ்ணன் ஸ்வாமிஜி** அவர்கள் 1972 ம் ஆண்டு தமிழ்நாட்டில் திண்டுக்கலில் அவதரித்தார். ஸ்ரீ ஸ்வாமிஜீ வளர்ந்தது, படித்தது கணிப்பொறி நிறுவனத்தினை நடத்தியதும் சென்னையில் என்று இருந்த நிலையில் ஆன்மீக நாட்டத்தால் 1997 ம் ஆண்டு மார்ச் மாதம் இமாலயத்திற்க்கு வந்தார். அதன்பின்னர் வேறு எங்கும் செல்லாது முழு மூச்சாக யோகீஷ்வரரான **ஸ்ரீ சாந்தி தர்மானந்த சரஸ்வதி** ஸ்வாமிகளிடம் சமஸ்கிருத வியாகரணம், சாங்கியம், யோகம், நியாயம், வைசேஷிகம், பூர்வ மீமாம்ஸை, காஷ்மீர சைவ சித்தாந்தம் மற்றும் வேதாந்தத்தின் பிருகத் பிரஸ்தான த்ரயத்தையும் (சித்சுகி , அத்வைதசித்தி, கண்டனகண்டகாத்யம் ) , அன்னாரது சிஷ்யர் விரக்த சிரோமணி **ஸ்ரீ சர்வேஷானந்த சரஸ்வதி** ஸ்வாமிகளிடம் பிரஸ்தான த்ரயத்தையும் (பகவத் கீதை, உபநிஷத், பிரம்ம சூத்திரம்) கசடற கற்றார். ஸ்ரீ ஸ்வாமிஜீ பல மொழிகளில் தேர்ச்சி பெற்றவரும் ஆவார். கற்று தருவதில் எந்த நாட்டமும் இல்லாத ஸ்ரீ ஸ்வாமிஜீ குருவின் ஆணைக்கிணங்கி சாஸ்திரங்களை, தமிழ் நாட்டிலும் கூட முறையாக இல்லாத நிலையில், ரிஷிகேசத்தில் கிரமமாக தமிழில் போதிக்கின்றார். அதுமட்டுமல்லாது , எளிய தமிழில் எல்லா சாஸ்திரத்திற்க்கும் உண்டான அடிப்படையான நூலினை தெளிவாக விளக்கியருளியிருக்கிறார். குருந்தட்டிலும் படிப்பிக்கும் முறையில் பதிவாக்கி வெளியிட்டுள்ளார்.

# ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீ ஸ்வாமிஜீ தமிழில் இயற்றிய நூல்கள் -

1. **வியாகரணம்** (இலக்கணம்) - ஸ்ரீ வரதராஜரின் லகுசித்தாந்த கௌமுதி லகுலஹரி விளக்கவுரையுடன்

2. **சாங்கியம்** - ஸ்ரீ ஈஷ்வர கிருஷ்ணரின் காரிகைகளும் கௌடபாத பாஷ்யமும், சாங்கிய லஹரி விளக்கவுரையுடன்

3. **யோகம்** - ஸ்ரீ பதஞ்சலி முனிவரின் சூத்திரங்களும் வியாச பாஷ்யமும் யோக லஹரி விளக்கவுரையுடன்

4. **தர்க்கம்** - ஸ்ரீ அன்னம்பட்டரின் தருக்க சங்கிரகமும் ஸ்ரீ சந்திரஜ சிங்கரின் பதகிருத்யமும், தர்க்க லஹரி விளக்கவுரையுடன்

5. **பூர்வமீமாம்ஸை** - ஸ்ரீ லௌகாக்ஷி பாஸ்கரரின் அர்த்த சங்கிரகம் அர்த்த லஹரி விளக்கவுரையுடன்

6. **சிவ பஞ்சாக்ஷரி பாஷ்யம்** - ஸ்ரீ சுரேஷ்வராச்சாரியாரின் பாஷ்யம்

7. **வேதாந்தம்**

- ஸ்ரீ சுரேஷ்வராசாரியாரின் நைஷ்கர்ம்யசித்தி சித்தி லஹரி உரையுடன்
- ஸ்ரீ கங்காதரேந்திர சரஸ்வதிகளின் சுவாராஜ்யசித்தி த்விதீய சித்தி லஹரி உரையுடன்
- ஸ்ரீ தர்மராஜ அத்வரீந்திரரின் வேதாந்த பரிபாஷை வேதாந்த லஹரி விளக்கத்துடன்.
- ஸ்ரீ சங்கராசாரியாரின் சாதனா பஞ்சகம் சாதனோபதேஷ லஹரி விளக்கத்துடன்.
- ஸ்ரீ சங்கராசாரியாரின் சாந்தோகிய உபநிஷத் பாஷ்யம் முதல் அத்யாயம்

.

ஸ்ரீ குருப்யோ நம:

பதிப்பு - 2006

கிடைக்குமிடம்

**ஷாஸ்திர நேத்திராலயா**
நெ 1. ஆத்ம விஞ்ஞான பவன்
பாபா காளி கம்பளி
ராம் நகர்
பசுலோக் போஸ்ட்
ரிஷிகேஷ், இமயமலை

**Shasthra Nethralaya**
No 1. Atma Vigyana Bhavan
Baba Kali Kambli
Ram Nagar
Pasulok Post
Rishikesh, Himalayas

ஸ்ரீ குருப்யோ நம:

( ஆச்சாரியவான் புருஷோ வேத –
குருவை உடையவர் ஞானத்தை அடைகின்றார் )

# அர்த்த சங்கிரஹம்


| | | |
|---|---|---|
| 1 | மங்களாசரணம் | 1 |
| 2 | தர்ம லக்ஷணத்தை பற்றிய கேள்வி | 7 |
| 3 | வேதஸ்ய தர்ம பிரதிபாதகம் | 9 |
| 4 | பாவனா விசாரம் | 11 |
| 5 | ஷாப்தி பாவனா | 12 |
| 6 | ஷாப்தீ பாவனையின் மூன்றம்சங்கள் | 13 |
| 7 | ஆர்த்தி பாவனை லக்ஷணம் | 16 |
| 8 | ஆர்த்தி பாவனையின் மூன்றம்சங்கள் | 17 |
| 9 | வேத லக்ஷண விசாரம் | 18 |
| 10 | விதி | 19 |
| 11 | உத்பத்தி விதி | 22 |
| 12 | வினியோக விதி | 24 |
| 13 | விதியின் ஷ்ருதி முதலிய ஆறு பிரமாணங்கள் | 25 |
| 14 | ஷ்ருதி | 26 |
| 15 | பாவனாவின் ஆக்யாக வாச்சய தன்மை | 31 |
| 16 | லிங்கப் பிரமாணம் | 33 |
| 17 | வாக்கிய லக்ஷணம் | 34 |
| 18 | பிரகரண நிரூபனம் | 37 |
| 19 | சந்தம்ஷ லக்ஷணம் | 40 |
| 20 | ஸ்தானம் பிரமாணம் | 44 |
| 21 | சமாக்யா நிரூபணம் | 47 |
| 22 | அங்கங்களின் பேதம் | 48 |
| 23 | சன்னிபத்யோபகாரகம் | 49 |
| 24 | ஆராதுபகாரகம் | 50 |
| 25 | பிரயோக விதி | 51 |
| 26 | கிரம நிரூபணம் | 52 |
| 27 | ஷ்ருதி பிரமாணம் | 53 |
| 28 | அர்த்த கிரமம் | 54 |
| 29 | பாட கிரமம் | 55 |
| 30 | ஸ்தான கிரம நிரூபணம் | 57 |
| 31 | முக்கிய கிரம நிரூபணம் | 59 |
| 32 | பிரவிருத்தி கிரம நிரூபணம் | 61 |
| 33 | அதிகார விதி நிரூபணம் | 63 |
| 34 | மந்த்ர நிரூபணம் | 66 |
| 35 | நியம விதி நிரூபணம் | 67 |
| 36 | ஷ்ரௌதீ பரிசங்க்யா | 70 |
| 37 | லாக்ஷணகீ பரிசங்க்யா | 71 |
| 38 | நாம தேயம் | 72 |

| | | |
|---|---|---|
| 39 | மத்வர்த்த பயத்தினால் நாமதேயத் தன்மை | 73 |
| 40 | வாக்கியபேத பயத்தினால் நாமதேயத் தன்மை | 74 |
| 41 | தத்பிரக்யா சாஸ்திரத்தினால் நாமதேயத் தன்மை | 75 |
| 42 | அக்னி தேவதையை குறிப்பிடும் சாஸ்திரத்தை குறித்த கேள்விகள் | 76 |
| 43 | தத்வியபதேஷத்தினால் நாமதேயத் தன்மை | 77 |
| 44 | ஐந்தாவது வகையான நாமதேயம் பற்றிய விசாரம் | 78 |
| 45 | நிஷேதம் | 80 |
| 46 | நஞ்ஜின் ஸ்வபாம் | 82 |
| 47 | விகல்பப்ரசக்தி - இரண்டாம் தடை | 84 |
| 48 | பர்யுதாசம் மற்றும் உபசம்ஹாரத்தின் வேறுபாடு | 87 |
| 49 | விகல்பத்தில் நிஷேதத்தினால் தோஷம் உண்டாவதில்லை | 88 |
| 50 | அர்த்தவாத நிரூபணம் | 90 |
| 51 | அர்த்த வாதத்தின் மூன்று வகை | 92 |
| 52 | முடிவுரை | 93 |

# அர்த்த ச*ங்*கிரஹம்

**அருணாசலம் உமாகாந்தம் நத்வா ராமகிருஷ்ணாத்மகோஅஹம் /**
**கரிஷ்யாமி ஜைமினினயே ப்ரவேஷாயார்ததலஹரி //**

உமாவிற்க்கு பிரியமானவரான அருணாசலனை இராமகிருஷ்ணனான நான் வண*ங்*கி ஜைமினியின் ( பூர்வ மீமாம்ஸை ) சித்தாந்தத்தை அறிய **அர்ததலஹரி** என்ற இந்த கிரந்தத்தை செய்கிறேன்.

ஆசாரியார் ஜைமினியின் பூர்வ மீமாம்ஸை சூத்திர*ங்*களை எளிதில் புரிந்து கொள்ள இந்த அர்த்த ச*ங்*கிரகம் என்ற நூலை லௌகாக்ஷி பாஸ்கரர் என்பவர் எழுதியுள்ளார். சூத்திர*ங்*கள் பன்னிரெண்டு அத்தியா*ங்*களாக தர்மத்தையும் அதர்மத்தையும் அறிந்து கொள்ள மிகவும் நேர்த்தியாக விசாரம் செய்யப்பட்டுள்ளது. மீமாம்ஸை என்றால் பூஜித விசாரம். அதாவது., மேன்மையான விசாரம் என்று பொருள். அப்படிப்பட்ட நூலை சாமானியரும் புரிந்து கொள்ளும் பொருட்டு எழுதுப்பட்டது.

அப்படிப்பட்ட இந்த நூலை துவ*ங்*கும் முன் பெரியோர்களால் கூறப்பட்ட முறைப்படி, அதை சிஷ்யர்களும், படிப்பவர்களும் அறியும் பொருட்டு ம*ங்*களாசரணம் என்கிற வாழ்த்து பாடலை எழுதுகிறார்.

**वासुदेवं रमाकान्तं नत्वा लौगाक्षिभास्करः।**
**कुरुते जैमिनिनये प्रवेशायार्थसंग्रहम्।।१।।**

வாசுதேவம் ரமாகாந்தம் நத்வா லௌககக்ஷிபாஸ்கர: /
குருதே ஜைமிநிநயே ப்ரவேஷாயார்தஸ*ங்*க்ரஹம் //

வாசுதேவம் – வாசுதேவம், வசுதேவனின் குமாரன் ஆகிய சாக்ஷாத் நாராயணனை, ரமாவின் அதாவது லக்ஷ்மியின் பிரியமானவரை வண*ங்*கி, ஆனால், மீமாம்ஸை சித்தாந்திகள் ஈஷ்வரனை ஏற்பதில்லை என்றால், அப்படியில்லை.. யாகத்திற்கு திரவியம், தேவதை என்ற அ*ங்*க*ங்*கள் உடையதாக ஏற்பதினாலும், வைதிக கர்ம*ங்*களை விடுத்து மற்ற இட*ங்*களில் ஷபர சுவாமி போன்றவர்களும் விக்ரகம் முதலியவற்றை நிந்திக்காததாலும் இ*ங்*கு தேவதையை ( நாராயணனை ) வண*ங்*குவதான வாழ்த்து பாடலில் எந்த தவறும் இல்லை.

ஜைமினிநயே – ஆசாரியர் ஜைமினி எழுதிய பன்னிரெண்டு அத்தியாயம் உடைய வேதத்தின் கர்ம பாகமான பூர்வ பாகத்தை விசாரம் செய்யும் கிரந்தம்.

அர்த்த ச***ங்***கிரஹம் – அர்த்த***ங்***களின் அதாவது பன்னிரெண்டு அத்தியாய***ங்***களில் கூறப்பட்ட, முடிவு செய்யப்பட்ட பிரமாணம் முதலிய பதார்த்த***ங்***களின் ( விஷய***ங்***களின் ) சுருக்கம், அவைகளின் லக்ஷண***ங்***களை கூறுதல், தர்மத்திற்கான விசாரத்தில் உள்ள பன்னிரெண்டு அத்தியாய***ங்***களில் மூன்று, ஆறு மற்றும் பத்தாம் அத்தியாய***ங்***களில் எட்டு பாத***ங்***களும் மற்றவைகளில் ஒவ்வொன்றிலும் நான்கு பாத***ங்***களும் பல அதிகரண***ங்***கள் (தலைப்புகள்) உள்ளது. இப்படி மொத்தம் 907 அதிகரண***ங்***கள். இந்த ஒவ்வொரு அதிகரணத்திலும் உள்ள சூத்திர***ங்***கள் பல என்று மொத்தம் இரண்டாயிரத்து அறுநூற்றி நாற்பத்தி நான்கு சூத்திர***ங்***கள்.

**அதாதோ தர்ம ஜிஞ்ஞாஸா** – என்பது முதல் சூத்திரம் – **அன்வாஹார்யே ச தர்ஷணாத்** – என்பது கடைசி சூத்திரம். தர்மத்தை பற்றிய விசாரம் இவைகளில் விசேஷமாகவும், விளக்கமாகவும் செய்யப்பட்டுள்ளது . அவைகளின் முறை பின்வருமாறு,

1. தர்மத்தின் லக்ஷணமும், பிரமாணமும் – இதில் **சோதனா லக்ஷணோऽர்தோ தர்ம:** என்று தர்மத்தின் லக்ஷணமும் இதன் மூலம் வேதம் பிரமாணம் என்பது நிரூபிக்கப்படுகின்றது. பிரமாண***ங்***களான விதி . அர்த்தவாதம், மந்தரம், ஸ்மிருதி , ஆசாரம், நாமநேயம், சாமர்த்யம் மற்றும் வாக்கியசேஷம் ஆகிய எட்டும் விளக்கப்படுகின்றது.

2. தர்மத்தின் பிரிவுகள் – முதல் அத்தியாயத்தில் தர்மத்தினை அறிந்தாலும் அவைகளின் பிரிவுகளை தெரிந்துகொள்வது அவசியமாகின்றது. பல வாக்கிய***ங்***களால் கூறப்பட்ட யாகம், தானம் முதலிய கர்ம***ங்***களை ஒன்றாக செய்வது தர்மம் ஆகாது. அதனால் இவைகளில் உள்ள பிரிவுகளை அறிய பிரமாண***ங்***கள் தேவைபடுவதால் அவை கூறப்படுகிறது, அவை முறையே – சப்தான்தரம், அப்யாசம், ச***ங்***க்யா, ச***ஞ்ஞா***, குணம் மற்றும் பிரகரணாந்தரம் ஆகும்,

3, விதிக்கப்பட்ட கர்ம***ங்***களில் சேஷ – சேஷிபாவம் ( அல்லது )அ***ங்***க – அ***ங்***கி பாவம், அதாவது, ஒரு கர்மத்தின் அ***ங்***கமும் அதை உடைய அ***ங்***கியும் அறியவேண்டி ஸ்ருதி, லி***ங்***கம், வாக்யம், பிரகரணம், ஸ்தானம் மற்றும் சமாக்யா என்ற ஆறு பிரமாணம் எற்கப்பட்டுள்ளது. இவைகளின் உதவியால் அ***ங்***கத்தையும் அ***ங்***கியையும் பிரித்தரிய வேண்டும்.

4, கர்ம***ங்***களின் பிரயோஜ்ய - பிரயோஜக பாவம். உபயோகமான பிரயோஜகமும், உபயோகப்படுத்தபடுவதான பிரயோஜ்யமும் எப்பொழுதும் அ***ங்***கி - அ***ங்***கமாகவே இருக்கும். இவைகளில் மாற்றம் உண்டானால் தர்மம் கெடும் என்பதால் அது அறியவேண்டியதாகின்றது. புரோடாஷகபாலேன துஷானுவபதி என்கிற வாக்கியத்தில் புரோடாஷத்தை சமைக்க (நெல்லை உமிநீக்கி இடித்து வேகவைப்பது ) கபாலம் ( மண் கலசம் ) உபயோகிக்க கூறப்பட்டுள்ளது. அதனால், அ***ங்***கி புரோடாஷ பிரயோஜகத்திற்கு அ***ங்***கமான கபாலம் பிரயோஜ்யமாகிறது, ஆனால், நெல்லில் உள்ள உமி நீக்குவதற்கும் கபாலம் பிரயோஜ்யமாகின்றதால் பிரயோஜகம் புரோடாஷமா இல்லை. உமி நீக்கமா என்கிற கேள்வி உண்டாகின்றது. புரோடாஷம் மாத்திரமே பிரயோஜகம் என்பது சித்தாந்தம் உமி நீக்குவது இல்லை. இதை போல பிரயோஜ்ய-பிரயோஜக பாவ***ங்***களை விளக்குவது இந்த அத்தியாயம்.

5. செய்ய வேண்டிய கர்ம***ங்***களில் உள்ள பொருட்களை உபயோகிக்கும் கிரமத்தினை கூறுகின்றது. ஒரு கர்மத்தினை ஆரம்பிக்கும் பொழுது பல அ***ங்***க***ங்***கள் ஒன்றாக வந்து சேர்ந்து விடுகின்றது. அதனை அனுஷ்டிக்கும் கிரமத்தினை அறிய ஸ்ருதி , அர்த்த, பாட, ஸ்தான, முக்கிய, பிரவிருத்தி என்கிற ஆறு பிரமாண***ங்***கள் ஏற்கப்படுகின்றது . இதன் மூலம் கிரமம் அறியப்படுகின்றது. அக்கிரமமாக (கிரமமில்லாமல்) செய்யப்படும் கர்மம் அதர்மமாவதால் கிரமம் அறியப்பட வேண்டியுள்ளது

6. விதிக்கப்பட்ட கர்ம***ங்***களை அனுஷ்டித்து அதன் பலனை அனுபவிக்கும் அதிகாரத்தை பற்றியது ஒரு கர்மத்தினை செய்ய தகுதி உள்ளவர் யார், தகுதி இல்லாதவர் யார் என்பது விளக்கப்பட்டுள்ளது.

7. பிரகிருதியில் கூறப்பட்ட அ***ங்***க***ங்***களை விகிருதியில் செய்யும் சாமான்யமான அதிதேசம் (ஏற்றிக்கூறுதல்) ஒரு கர்மத்தில் பிரகிருதி எது, விகிருதி எது என்பதை தீர்மானித்து அவையில் பிரகிருதியிலிருந்து விகிருத்திக்கு கொண்டு செல்லப்படும் அ***ங்***க***ங்***களினை பற்றி சாதாரணமாக விசாரம் செய்யப்படுகின்றது.

8. பிரகிருதியிலிருந்து விகிருத்திக்கு செய்யப்படும் விசேஷ அதிதேசத்தின் விசேஷ விசாரம்.

9. பிரகிருதியிலிருந்து விகிருத்திக்கு கொண்டு செல்லப்படும் அ***ங்***க***ங்***களில் உள்ள மந்த்ரம், சாமம் மற்றும் சம்ஸ்கார***ங்***களில் பிரகிருத்தியிலும் விகிருத்தியிலும் உள்ள அக்னி சூரியன் முதலிய தேவதைகளின் வேறுபாடு அனுசரித்து பிரகிருத்தியில் உள்ள பத***ங்***களை நீக்கி விகிருத்தியில் வரும் பத***ங்***களை சேர்த்து செய்யப்படும் ஊஹம் (அனுமானம்) இ***ங்***கு விளக்கப்படுகின்றது.

10. பிரகிருத்தியிலிருந்து விகிருத்திற்கு வந்த அ***ங்***க***ங்***களின் நீக்கத்தினை பற்றி கூறும் பாதம் (பாதனை) விளக்கப்படுகின்றது. பிரகிருத்தியிலிருந்து விகிருத்திற்கு அதிதேசமான பர்ஹி, **ஷரமயம் பர்ஹி** என்கிற விதிப்படி விகிருத்தியில் ஷரமயம் பர்ஹி என்கிற பாதனை.

11. பல பிரதான***ங்***களுக்கான அ***ங்***க***ங்***களை ஒரே நேரத்தில் செய்வது தந்த்ரம். அது விளக்கப்பட்டுள்ளது. **ஆக்னேயோSஷ்டகபாலம், உபாம்ஷுயாஜமன்தரா யஜதி** , **அக்னி ஷோமீய மேகாதஷகபாலம்** ஆகிய பௌர்ணமாசி அ***ங்***க***ங்***களில் உள்ள பிரயாஜம், ஆஜ்யபாகம், ஆதாரம்,அனுயாஜம், பத்னீசன்யாஜம் முதலிய அ***ங்***க***ங்***களை ஒரே நேரத்தில் செய்வது .

12. ஒரு அ***ங்***கிக்காக செய்யப்பட்ட அ***ங்***க அனுஷ்டானத்தினால் மற்ற அ***ங்***கிக்காகவும் எ***ங்***கு உதவி ஆகிறதோ அப்படிப்பட்ட பிரச***ங்***கம் விளக்கப்பட்டுள்ளது. **அக்னிஷோமீயம் பஷீமாலபேத்** என்ற பசுவின் விதியில் செய்யப்படும் பிரயாஜம் முதலிய அ***ங்***க***ங்***கள் பஷீபுரோடாஷத்திற்கம் ஆகின்றது.

இ***ங்***கு முன்பு பிரதி***ஞ்ஞ***ா செய்யப்பட்ட அர்த்த ச***ங்***கிரக் நூலின் ஆரம்பம் தர்ம சூத்திரத்தின் ஆரம்பமாகவும் இருப்பதால் அதில் ஆரம்பிக்கப்பட்ட முறையிலேயே ஆரம்பிக்கின்றார்.

*अथ परमकारुणिको भगवाञ्जैमिनिर्धर्मविवेकाय द्वादशलक्षणीं प्रणिनीय तत्रादौ धर्मजिज्ञासां सूत्रयामास–'अथातो धर्मजिज्ञासा' इति। अत्र 'अथ' शब्दो वेदाध्ययनानन्तर्यवचनः। 'अतः' शब्दो हि वेदाध्ययनस्य दृष्टार्थत्वं ब्रूते।*

அத - இ***ங்***கும் அத என்கிற சொல் சூத்திரத்தில் கூறப்பட்ட அத சொல்லின் பொருள் உள்ளது. அதாவது, வேதம் படித்து முடித்த பின்பு அதன் பொருள் அறிய வேண்டியது ஆகிறதால் இந்த சூத்திர***ங்***களை எழுதுகின்றோம் என்பது.

**பரமகாருனிக:** - காரணம் இல்லாமல் கருணை செய்பவர்.

**பகவான்** - அமரகோஷத்தில் **பகம் ,காம,மாஹாத்ம்ய, வீர்ய, யத்ன, அர்ககீர்த்திஷு** என்று கூறப்பட்டுள்ளது. இந்த ஆறு ஐஸ்வர்ய***ங்***களும் உடையவர் பகவான். அப்படிப்பட்ட ஜைமினி எல்லோரும் தர்மத்தினை அறியும் பொருட்டு பன்னிரண்டு அத்தியாய***ங்***கள் கொண்ட சூத்திர***ங்***களை மனதில் ( அதன் வடிவை ) நிருத்தி முதலில் **அதாதோ தர்மஜி*ஞ்ஞ*ாஸா** என்று எழுதினார். இ***ங்***கு தர்மம் என்பது அதர்மத்தையும் குறிப்பதாக உள்ளது.

*'स्वाध्यायोऽध्येतव्य' इत्यध्ययनविधौ तदध्ययनस्यार्थज्ञानरूपदृष्टार्थकं तदध्ययनमतो हेतोर्धर्मस्य वेदार्थस्य जिज्ञासा कर्तव्येति शेषः। जिज्ञासापदस्य विचारे लक्षणा। अतो धर्मविचाराशास्त्रमिदमारम्भणीयमिति शास्त्ररम्भसूत्रार्थः।*

இ***ங்***கு பூர்வபக்ஷிக்கு ஒரு சந்தேகம் **ஸ்வாத்யாயோ அத்யேதவ்ய** என்கிற அத்யயன விதி இந்த தர்ம சம்பந்தமான விசாரம் ஆரம்பிக்க உபயோகப்படுமா இல்லை உபயோகப்படாதா? இ***ங்***கு ஸ்வாத்யாய விதியினாலேயே அதன் பொருளையும் அறியும் த்ருஷ்டப் பிரயோஜனத்திற்காக வேதத்தை படிக்க வேண்டும் என்று விதி கூறுவதானால் அப்பொழுது அந்த சாஸ்திரத்தை ஆரம்பிக்க பிரயோஜனமாகக்கூடும். ஆனால், அப்படி பார்க்கபடுவதில்லை. பொருள் தெரியாமல் வேத மந்திர***ங்***களை படிப்பது பார்க்கப்படுவதால். அதனால், எ***ங்***கும் அறியப்படாததான (அபூர்வவிதி) அர்த்தத்தை அறிய கூறும் படனமான அந்த விதி கூறுகின்றதா இல்லை எல்லோரும் அறியும், நெல்லில் இருந்து உமியை நீக்கும் விதியை போலவா என்றால் முதல் காரணம் இல்லை, விவாதத்திற்கு காரணமான வேதபடனம் பொருளை அறிய காரணம், படிப்பானபடியால், மஹாபாரதம் முதலானதை படிப்பது போல என்கிற அனுமானத்தினாலேயே படிப்பது பொருள் அறிய காரணமாக இருக்கின்றபடியால். பின்பு இரண்டாவது என்றால் அதுவும் இல்லை. உமியை நீக்குவதில் பலபமுறை இருப்பதினால், உமியை நீக்குவது என்பது தர்ஷபூர்ணமாசி யாகத்தில் உபயோகப்படுத்தப்படும் அரிசிக்காக என்பதால், அந்த உமியை நீக்கும் முறையானது அ***ங்***க அபூர்வம் ( புண்ணியம் ) உண்டு செய்வதின் மூலம் பரம அபூர்வத்தை உண்டு செய்கின்றது என்பதால் , அந்த அபூர்வமே உமி நீக்கும் நியமத்திற்கு காரணம். அதனால். புத்தகத்திலிருந்து தானே படித்தாலும், குரு மூலமாக படித்தாலும் பொருளின் அறிவு உண்டாவது முடியும் என்பதால் குரு மூலமாக படிப்பதில் மட்டும் அத்யயன விதி ஏற்கப்படவேண்டும், அது அவ்வாறு இல்லை, தானேபடித்தலால் உண்டாகும் அறிவு கொண்டு கர்மத்தை செய்ய காரணமின்னையால். அதனால் எந்த ஒரு உபயோகத்திற்கும் இல்லை என்பது தெளிவாகின்றது.

இப்படியாக பூர்வபக்ஷி கூறினால், சித்தாந்தி மறுபடி கூறும் வகையில் --

படிப்பதாலேயே அதன் பொருளும் அறியப்படுகிறது என்பது அனுமானத்தினாலேயே தெளிவாகின்றது. அதற்கு நாம் அறியாததை தெரிவிக்கும் விதி ஒன்று வேண்டாம் என்று எதை கூறப்பட்டதோ அது சரியே. அபூர்வ விதியானது இ***ங்***கு ஏற்கப்படாவிட்டாலும் நியமவிதி என்பது உண்டாகும். அதற்கு காரணமில்லாமல் இல்லை. எப்படி நெல்லில் இருந்து உமியை நீக்குவது என்பது ஒரு அ***ங்***காபூர்வத்தை உண்டு செய்கிறதோ அதுபோலவே, எல்லா கர்ம***ங்***களும் ஒரு ஆபூர்வத்தை உண்டு பண்ணவே செய்யப்படுவதால் குருமுகமாக படித்து தெரிந்து கொண்ட பொருளிலும் அது போலவே ஆவதாலும், தானே படிப்பதால்

உண்டான அறிவை கொண்டு செய்யப்படும் கர்மத்தில் அந்த அபூர்வம் உண்டாவதில்லை என்ற நியதியாலும் இ***ங்***கு குருமுகமாக பொருளை அறிவது என்பது கூறப்பட்டுள்ளது இல்லாவிட்டால் அப்படி ஒரு விதி உபயோகமற்றதாக ஆகிவிடும்.

கர்மண்டத்திலேயே குமாரிலபட்டர் மதம் மற்றும் பிரபாகரர் மதம் (குமாரிலரின் சிஷ்யர்) உள்ளது. இ***ங்***கு பிரபாகரரின் மதப்படி (விசாரப்படி) வேதத்தினை படிப்பது என்பது சுவர்கம் முதலிய பலனுக்காக, தர்மத்தை அறிய அல்ல என்பது . ஆனால், குமாரிலரின் சித்தாந்தபடி வேதம் படிப்பதற்கு இரண்டு பலன்கள் உள்ளது. திருஷ்டம் எனப்படுகின்ற காணக்கூடிய பலனும், அதிருஷ்டம் எனப்படுகின்ற காணப்படமுடியாத பலனும். திருஷ்டம் என்பது தர்ஷபூர்ணமாசி போன்ற யாக***ங்***களை பற்றி அறிவதும் செய்வதும். அதிருஷ்டம் சுவர்கம் முதலியன. சுவர்கம் முதலியவையே முக்கியமான பலனாக வேதத்தில் கூறப்பட்டதால். அதை மட்டுமே பிரபாகரர் எடுத்துக் கொண்டது தவறல்லவே என்றால் **லப்யமானே பலே திருஷ்டே நாதிருஷ்ட பரிகல்பனா** என்று கூறப்படுவது போல கண்கூடாக அறியப்படும் பலன் உண்டென்னும்போது, காணமுடியாத பலனை கற்பனை செய்வது என்பது சரியல்ல.

**ஸ்வாத்யாயோ அத்யேதவ்ய,** என்ற விதி வேதத்தின் சொற்களை மனப்பாடம் செய்வது மட்டுமில்லாமல், வேதத்தின் பொருளையும் அறிய வேண்டும் என்று சொல்கிறதாக கொள்ளவேண்டும். இப்படி **அத** என்ற சொல் வேதத்தினை படித்த பின்பு **அத :** என்ற சொல் அதன்பொருளை அறிய வேண்டும் என்பதை கூறுகின்றது என்று அறியவேண்டும்.

இப்படி வேதத்தினை படித்த பின்பு அதன் பொருளை அறியும் திருஷ்டமான பலனை கொடுக்கிறதோ அந்த காரணத்தினால் வேதத்தின் பொருளை அறிய ஆவல் கொள்ளவேண்டும். என்று ஆகின்றது. ( **ஸ்வாத்யாய:** என்னும் சொல் இ***ங்***கு தன்னுடைய குலத்தில் அவரவர் பரம்பரையில் ஒருவருக்கு கிடைத்த வேத ஷாக்கையை அதாவது வேதத்தின் பாகத்தை குறிக்கிறது, ஒருவர் எந்த பிரிவை சேர்ந்தவரோ அதையே அவர் படிக்க வேண்டும், தன்னுடைய பிரிவை முழுவதும் படித்த பின்னரே மற்ற பிரிவினை அவர் படிக்க தகுதியானவராகிறார்.)

இ***ங்***கு ஜி***ஞ்ஞா***ஸா என்ற சொல்லின் பொருள் அறியும் ஆவல் என்றாலும் ஒரு சொல்லிற்கு நேரடியான சொற்பொருளும், குறிப்பு பொருளும் இருக்கிறது என்பதால், இ***ங்***கு நேரடியான பொருளை எடுக்காமல் குறிப்பு பொருளான விசாரம் என்பதயே எடுத்துக்கொள்ளவேண்டும். இப்படி எடுத்த காரணத்தால் இனி தர்ம விசாரம் செய்யும் இந்த சாஸ்திரம் ஆரம்பிக்கப்படவேண்டும் என்று பொருள் கிடைக்கின்றது. இ***ங்***கு சொற்பொருளை எடுக்காமல் குறிப்பு பொருளை எடுக்க

காரணம், (ஞானத்தை) அறிய ஆவல் என்பதே சொற்பொருள் அப்படி ஆவல் உண்டாக முடியாது, அது ஒருசெயல் இல்லாத காரணத்தினால், ஆவல்தானே ஏற்படுவதால், மற்றொருவரால் உண்டாக்க கூடியது இல்லாததால், இப்படி அதன் சொற்பொருளும் நீக்கப்பட்ட பிறகு பொருளற்ற சொல்லாக ஆகிறது. அதனால், அப்படி ஆவதிலிருந்து அந்த சொல்லை காப்பற்ற **விசாரம்** என்ற பொருள் குறிப்பதாக எடுக்கப்படுகின்றது.

## தர்ம லக்ஷணத்தை பற்றிய கேள்வி

*अथ को धर्मः, किं तस्य लक्षणमिति चेत्, उच्यते– यागादिरेव धर्मः। तल्लक्षणं च वेदप्रतिपाद्यः प्रयोजनवदर्थो धर्म इति। प्रयोजनेऽतिव्याप्तिवारणाय प्रयोजनवदिति। भोजनादावतिव्याप्तिवाराणाय वेदप्रतिपाद्य इति। अनर्थफलकत्वादनर्थभूते श्येनादावतिव्याप्तिवारणाय अर्थ इति।*

தர்மம் என்பது என்ன அதன் லக்ஷணம் யாது என்ற கேள்வி இங்கு எழுகிறது. **மானாதீனா மேயசித்திர் மானசித்திஸ்ச லக்ஷணாத்,** என்ற கூற்றின்படி ஒரு பொருளை நிரூபிக்க பிரமானம் அதாவது சரியான அறிவை அடைய உள்ள வழி அவசியமாகிறது. இந்த பிரமாணமும் ஒரு லக்ஷணையின் மூலமே நிரூபணமாகிறது என்கிற நிலையில், அந்த லக்ஷணமும் மூன்று தோஷங்களான அவ்வியாப்தி, அதிவியாப்தி மற்றும் அசம்பவம் ஆகியவை இல்லாமல் இருத்தல் அவசியம்.

**அவ்வியாப்தி** என்பது லக்ஷனையால் குறிக்கப்பட்ட விஷயம் முழுவதும் அதனை குறிக்காமலிருந்தால் உண்டாவது.

**அதிவியாப்தி** என்பது லக்ஷனையால் குறிக்கப்படவேண்டியதை காட்டிலும் கூடுதலான மற்றவைகளையும் அது குறிப்பது.

**அசம்பவம்** என்பது லக்ஷனை குறிக்கப்படவேண்டியதை குறிக்காமல் வேறு எதையோ சம்பந்தமில்லாமல் குறிப்பது.

இதற்கு விளக்கம் என்ன என்ற கேள்விக்கு சந்தர்பத்திற்கு ஏற்றார்போல பல பதில்கள் உண்டாகின்றது. பொய்கூறாமை தர்மம் என்றால், கல்யாணம் முதலியவற்றிற்காக பொய் கூறுவதும் தர்மமாகின்றது. சில மதங்களின் உருவ வழிபாட்டையே தர்மம் என்று கூறுகின்றது. இப்படி ஒரு தர்மசங்கடமான கேள்விக்கு அர்த்த சங்கிரகத்தில் யாகாதிகளே தர்மம் என்று பதில் கூறப்பட்டுள்ளது.

இ**ங்**கு யாகாதிகள் தர்மம் என்று கூறாமல் யாகாதிகள் மட்டுமே என்று கூறியிருப்பது உருவத்தை பூஜை செய்வதை நீக்கவே ( அதாவது, சைத்யன், யக்**ஞ**ன் முதல்யவரின் பூஜனை) அது எப்படி தர்மமாகாது என்றால் அது தர்மம் என்று நிச்சியிக்க எந்த பிரமாணமும் இல்லாததால்., சரி, தர்மம் என்பது என்ன என்று கூறிய பின்பு அதன் லக்ஷணத்தையும் கூறும் பொருட்டு **வேதபிரதிபாத்ய பிரயோஜனவதர்த:** என்று கூறுகிறது. அதாவது, வேதத்தினால் நிச்சயிக்கப்பட்ட பிரயோஜனமான ( நன்மை தரக்கூடிய ) விரும்பியதை தருவது தர்மம் என்று கூறப்பட்டுள்ளது. தர்மலக்ஷணத்தில் கூறப்பட்ட விசேஷண**ங்**கள் வேதத்தினால் நிச்சயிக்கப்பட்ட,பிரயோஜனமான, விரும்பியதை தருவது என்ற ஒவ்வொன்றும் ஒரு தோஷத்தை நீக்கும் பொருட்டு கூறப்பட்டுள்ளது.

**வேபிரதிபாத்ய** - வேதத்தினால் நிச்சயிக்கப்பட்ட என்ற விசேஷணம் உணவு முதலியவைகளிலிருந்து அதிவியாப்தி தோஷம் உண்டாகாதிருக்க தரப்பட்டது. உணவு என்பது நாம் விரும்பும் விஷயம் மட்டுமல்லாமல் நமக்கு பசியை நீக்கும் பிரயோஜனத்தையும் உடையது என்ற காரணத்தினால் வேதத்தினால் விதிக்கப்பட்டது என்ற விசேஷணம் தராவிட்டால் அதுவும் தர்மம் ஆகிவிடும். யாகாதிகளை தவிர உணவும் லக்ஷணத்தில் வருவதால் அது அதிவியாப்தி தோஷம் உடையதாகின்றது. உணவு வேதத்தினால் நிச்சயிக்கப்பட்டது அல்ல. அது நம்முடைய ஆசையினால் தானே அடையப்பட்டது. அப்படி தானே பிராப்தமானதை விதிக்க முடியாது. முனிவர் எட்டு பிடியும், பதினாறு பிடியளவு வானபிரஸ்திகளும் முதலிய நியமம் அளவை குறித்தவையே ஆகும்.

**பிரயோஜனவத்** - பிரயோஜனத்தையுடைய என்ற விசேஷணம் சுவர்கம் முதலிய பலன்களை மனதில் கொண்டு அவைகளை நீக்கும் பொருட்டு கூறப்பட்டது. சுவர்கம் முதலிய பலன்கள் வேதத்தினால் நிச்சயிக்கப்பட்டதும். நமக்கு நன்மை தரக்கூடியதும் ஆவதால் அதுவும் தர்மமாகின்றது. அதில், அதிவியாப்தி தோஷம் உண்டாகின்றது. அதனை நீக்கும் பொருட்டு பிரயோஜனத்தையுடைய என்று கூறப்பட்டுள்ளது. சுவர்கம் முதலியவை தானே ஒரு பிரயோஜனமானதால் அவை வேறு பலனை தர இயலாததாலும் இந்த விசேஷனம்.

**அர்த்த** - நன்மை தரக்கூடிய, வேதத்தில் ஷ்யேன யாகம் என்ற ஒரு ஆபிசாரிகமான கர்மம் கூறப்பட்டுள்ளது. அழிக்கும் ஆவல் உடையவர் இந்த கர்மத்தின் மூலம் சக்தியை அடைந்து ஷ்யேன பக்ஷியை (பருந்தை) போன்ற வேகத்துடன் கொள்வானாக என்று கூறியிருக்கிறது. எதிரியை அழிக்க வேண்டும் என்ற விருப்பம் உள்ளவனுக்கு பிரயோஜனமான எதிரி அழிதலை செய்து தரும் யாகமானது என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது. என்பதால் இதுவும் தர்மமாகும். ஷ்யேன யாகம் எதிரியை அழித்தாலும் அதன் பலமானது நரகத்தை உண்டு செய்வதாலும், நரகம் பலமாக ஒருவருக்கும் நன்மை தரக்கூடியது இல்லை

என்பதாலும், தர்மத்தின் லக்ஷணம் அதிவியாப்தி தோஷத்தை அடையாமல் காக்கும் பொருட்டு அர்த்த என்கிற பதம் தரப்பட்டது.

ஆனால், **ந ஹிமஸ்யாத் ஸர்வா பூதானி** (ஒரு உயிரையும் துன்புருத்தாதீர்) என்ற வேத வாக்கியம் துன்புருத்தலை நிந்தித்திருப்பதால் அர்த்தம் என்ற சொல் தேவையற்றது என்றால், நம்முடைய ஆசையின் பொருட்டு செய்யப்படும் துன்பத்தையே அது நிந்திக்கிறது என்பதாலும், ஜ்யோதிஷ்டோமம் முதலிய யாகத்தில் செய்யப்படும் பசுவை கொள்ளுதல் முதலியவை சுவர்கம் முதலிய பலனை அளிப்பதாலும், வேதத்தில் விதிக்கப்பட்டதாலும் அனர்த்தமானது இல்லை.

**யாகாதி** என்ற சொல்லில் ஆதிபதம் ( முதலிய என்ற பொருள்) ஹோமம், தானம், திரவியம், குணம், ஜாதி ஆகியவைகளை குறிக்கும், இ**ங்**கு **யஜேத ஸ்வர்ககாம:** என்ற விதி சுவர்கத்தை பிரயோஜனமாக கொண்டு யாகம் செய்ய கூறுவது. இது போல ஹோமமும், தானமும் செய்ய கூறும் வாக்கிய**ங்**கள் உள்ளது. **விரீஹிபிர் யஜேத** என்று விரீஹி என்ற திரவியம் கொண்டு யாகம் செய்ய கூறுவது. **அருணயா க்ரீணாதி** என்பது சிவப்பு நிற பசு கொண்டு சோமகொடியை வா**ங்**க கூறும் குணவிதி. **யஸ்ய பர்ணமயி ஜுஹூ :** என்ற வாக்கியம் ஜாதி விதி..

## வேதஸ்ய தர்ம பிரதிபாதகம்

இ**ங்**கு தர்மத்தின் லக்ஷணம் இப்படியாக நிரூபிக்கப்பட்ட பின்னர், பூர்வபக்ஷி தன்னுடைய விரோதத்தை எழுப்புகிறார்.

*न च 'चोदनालक्षणोऽर्थो धर्मः इति सौत्रतल्लविरोधः चोदनापदस्य विधिरूपवेदैकदेशपरत्वदिति वाच्यम्। तत्रापि चोदनाशब्दस्य वेदमात्रपरत्वात्। वेदस्य सर्वस्य धर्मतात्पर्यवत्त्वेन धर्मप्रतिपादकत्वात्।*

இ**ங்**கு கூறப்பட்ட லக்ஷணமும் மஹர்ஷிஜைமினி தன்னுடைய சூத்திரத்திரல் **சோதனா லக்ஷணோSர்தோ தர்ம :** ( 1.1.2 ) கூறிய லக்ஷணத்திற்கும் வேறுபாடு உள்ளது. சோதனா என்றால் விதியினால் ( கட்டளை ) தூண்டப்பட்ட என்று பொருள் என்பதால், என்றால், சித்தாந்தி ஆக்ஷேபிக்கிறார், அப்படி கூறுவது சரியல்ல இ**ங்**கு சோதனா என்ற சொல் விதி வாக்கிய**ங்**களை மாத்திரம் குறிப்பதாக இல்லாமல் வேதத்தை முழுவதும் உணர்த்தும் சொல்லாக இருக்கும் காரணத்தினால். காரணம், வேதம் முழுவதும் தர்மத்தை நிச்சயிப்பதிலேயே குறிப்பாக இருப்பதால் அது முழுவதும் தர்மத்தை நிரூபிப்பதாகவே ஏற்கபடுகிறது. வேதம் முழுதும் என்றால் விதி, மந்தரம், நாமநேயம், நிஷேதம், அர்த்தவாதம் என்று பின்னால் கூறப்படும். . **ஆம்னாயஸ்ய க்ரியார்த்தத்வாத் ஆனர்தக்யம் அததர்தானாம்** ( வேதம்

கர்மத்தை (செயலினை) குறிப்பதால் அப்படியில்லாதவை உபயோக மற்றவை) என்ற ஜைமினி சூத்திரம் செயலினை குறிக்காத வேத பாகத்தினை நிஷேதிக்கிறது என்று கொள்ளவேண்டும். மீமாம்ஸை சித்தாந்தத்தில் வேதத்தின் ஒரு பாகத்தையும் பொருளற்றது என்று ஏற்பதில்லை மாறாக எல்லாவற்றிர்க்கும் ஒரு செயல் நிரூபிக்கபடுகிறது.

இந்த யாகம் முதலியவைகளும் **யஜேத ஸ்வர்ககாம :** (சுவர்க்கத்தில் ஆசையுள்ளவன் யஜனம் செய்வராக ) முதலிய சுவர்கத்தில் ஆசையுள்ளவர்களுக்காக விதியாக கூறப்பட்டது. இ***ங்***கு ஒரு விஷயம், இது ஆடு, மாடு, முதலிய நேரடியாக காணும் விஷய***ங்***களில் ஆடு, மாடு முதலியவை நமக்கு பிரத்யக்ஷமாக ( நேரடியாக ) பிரமாணமாக உள்ளது. ஆனால், தர்மம் அதுபோல நேரடியாக காணகூடிய விஷயமாக இல்லாததால் அது எப்படி பிரமாணமாக ஆகக்கூடும் என்றால், கூறியது சரியே என்றாலும், ஒரு வாக்கியத்தில் உள்ள ஒரு சொல் நமக்கு புரியாமல் இருந்தாலும் அந்த வாக்கியத்தின் பொருளைக்கொண்டு அந்த ஒரு சொல்லையும் நாம் யூகித்து அறிவது போல வேதத்தில் கூறப்பட்ட வாக்கிய***ங்***களிலும் லோக பிரசித்தமான சொற்களின் பொருள்கொண்டு மற்ற புரியாத பத***ங்***களின் பாவ***ங்***களை கொண்டு அதனுடைய ச***ங்***கதியை நாம் புரிந்துகொள்வது வேண்டும். தர்மம் நமக்கு நேரடியாக காணக்கூடிய ஒன்றாக இல்லாவிட்டாலும், வேதமானது ஸ்வயம் பிரமாணமாக ஏற்கப்பட்டதால் , அதனை ஏற்காமல் அதில் கூறப்பட்ட விஷய***ங்***கள் வேறு பிரமாணத்தின் மூலம் நிரூபிக்கபடமுடியாததால் அதில் கூறப்பட்டது தர்மம் என்பது நிரூபணமாகின்றது.

*स च यागादिः 'यजेत स्वर्गकाम' इत्यादिवाक्येन स्वर्गमुद्दिश्य पुरुषं प्रति विधीयते। तथा हि– यजेतेत्यत्रास्त्यंशद्वयं यजिधातुः प्रत्ययश्च। प्रत्ययेऽप्यस्त्यंशद्वयं आख्यातत्वं लिङ्त्वं च। तत्राख्यातत्वं दशलकारसाधारनं लिङ्त्वं पुनर्लिङ्मात्रे। उभाभ्यामप्यंशाभ्यां भावनैवोच्यते। भावना नाम भवितुर्भवनानुकूलभावयिता व्यापारविशेषः। सा द्विविधा शाब्दीभावना आर्थी भावना चेति। तत्र पुरुषप्रवृत्त्यनुकूलो भावयितुर्व्यापारविशेषः शाब्दीभावना। सा च लिङ्शेनोच्यते। लिङ्श्रवणेऽयं मां प्रव्रत्तयति मत्प्रवृत्त्यनुकूलयापारवानयमिति नियमेन प्रतीतेः। यद्यस्मात्शब्दान्नियमतः प्रतीयते तत्तस्य वाच्यम् । यथा गामानय इत्यस्मिन्वाक्ये गोशब्दस्य गोत्वम्।।*

இ***ங்***கு கூறப்பட்ட வேத விதியான **யஜேத ஸ்வர்ககாம**: என்ற வாக்கியத்தில் சுவர்க காம-சுவர்கத்தில் ஆசையுள்ளவன் என்பது புரிகிறது, ஆனால் **யஜேத** என்ற சொல்லின் பொருள் உலக விவகாரத்தில் உபயோகிக்கப்படாத வைதிக சொல் என்பதால் இது வேதத்தினை பிரமாணமாக ஏற்று புரிந்துகொள்ள வேண்டியதாகிறது .**யஜேத** என்ற சொல் மூல சொல்லான **யஜி** என்பதில் இருந்து உண்டானது இதற்கு **யஜன, தான, தேவ பூஜை** முதலிய

அர்த***ங்***கள் உள்ளது. யஜனம் என்றால் யாகம், அதாவது, தேவதையை உத்தேசித்து திரவியத்தை தியாகம் செய்தல் என்பது. யாகமும், ஹோமமும் ஒன்றல்ல. ஹோமம் என்பது தேவதையை உத்தேசித்து திரவியத்தை இடுதல் ஆகும். இதை மனதில் நிருத்தவேண்டும். அந்த யஜி என்ற மூல சொல்லுடன் வினை விகுதியான **த** என்பது சேர்ந்தால் உண்டாவது **யஜேத** என்ற சொல் அதனால் **யஜேத** என்ற சொல் இரண்டு உருபு கொண்டது **யஜி** என்ற மூல சொல் மற்றும் **த** என்ற வினைவிகுதி. (வினையெச்சம்).

இந்த வினை எச்சம் இரண்டு உருபு கொண்டது ஒன்று லி***ங்***கதன்மை மற்றொன்று ஆக்யாததன்மை. சமஸ்கிருதத்தில் வினை எச்சம் பத்து வகைப்படுகின்றது. இதில் ஒவ்வொன்றும் தனக்காகவும், பிறருக்காகவும் பலன் உண்டாவதை கொண்டு இரண்டு வகையாகின்றது. இதில் ஒவ்வொன்றும் தன்மை, முன்னிலை, படர்க்கைகளாக மூன்றாகவும். அவை ஒவ்வொன்றும் ஒருமை, இருமை, ( சமஸ்கிருதத்தில் மாத்திரம் உள்ள விசேஷம் ) பன்மை என மூவகை ஆகவும் உள்ளது.

இவைககளில் ஆக்கியாத தன்மையானது எல்லாவற்றிலும் உள்ள ஒரு பொதுவான விஷயமாகும். ஆனால் லி***ங்***க தன்மையானது 'லி***ங்*** என்று சொல்லப்படுகின்ற வினை எச்சம் மாத்திரம் உள்ளது. இந்த 'லி***ங்*** வினைஎச்சம்யானது **விதி, நிமன்தரம், ஆமன்தரம், அதீஷ்டம், சம்பிரஷ்ணம், பிரார்த்தனை** இவைகளில் உபயோகிக்கப்படுவது. **விதி** - விதி அதாவது, செய் என்பது போன்ற கட்டளை. **நிமன்தரனம்** - தேவையான செயலில் நம்மை ஒத்தவருடன் கேட்கும் உதவி. **ஆமன்தரனம்** - ஒரு செயலினை வேண்டி மற்றவரை கூப்பிடுவது, ஏற்பதும், நிராகரிப்பதும் அவருடைய விருப்பம். **அதீஷ்டம்** - மரியாதையோடு தன்னோடு மூத்தவரை செய்யும் அழைப்பு. **சம்பிரஷ்ணம்** - உதவி செய்ய கேட்பது (புத்திமதி) **பிரார்த்தனை** - பெரியவர்களுடன் செய்யும் யாஜன முதலிய இட***ங்***களில் உபயோகிக்கப்படுவது. 'லி***ங்*** என்ற வினை எச்சம், யஜ + லி***ங்*** இ***ங்***கு லி***ங்*** இடத்தில் **ஈத** என்கின்ற எச்சம் வரும் **யஜ + ஈத** என்று ஆகி அது **யஜேத** என்றாகிறது. இ***ங்***கு லி***ங்*** என்ற இடத்தில் லி***ங்***கத்தன்மையும், அதற்கு வந்த **ஈத** என்கிற எச்சத்திற்கு ஆக்கியாத தன்மையும் உண்டு. இந்த இரண்டு தன்மைகளும் வேறு வேறு பொருள்களை குறிப்பதாகும்.

## பாவனா விசாரம்

இப்படி இவை இரண்டு பகுதிகளாக இருந்தாலும் இந்த இரண்டுமே (லி***ங்***கதன்மை மற்றும் ஆக்கியாத தன்மை ) பாவனா என்ற பெயரிலேயே அறியப்படுகின்றது. இந்த பாவனா என்பது என்னவென்றால் அதற்கு மூலத்திலேயே விளக்கம் தரப்பட்டுள்ளது.

**பவித்து : பவனானுகூலோ பாவயிதுர்வியாபார :** என்று. ஒவ்வொன்றாக காண்போம்.

**பவித்து :** என்றால் உண்டாகக்கூடிய ஒன்று ( பலனோ அல்லது செயலோ )

**பவனானுகூல :** உண்டாக உதவி புரியும்.

**பாவயிதுர் வியாபார :** காரணமாக இருக்கும் ஒரு செயல்.

பாவனா என்றால் உண்டாகக்கூடிய ஒன்று உண்டாக உதவி புரியும் காரணமாக இருக்கும் ஒரு செயலே என்பதாகிறது.

உதாரணத்திற்கு **மாட்டை கொண்டு வா** என்ற வாக்கியத்தில் சொல்லில் மாட்டை கொண்டு வரும் செயலில் ஒருவரை பிரவிருத்திக்கும் ( ஈடுபடுத்தும் ) முதலாளி முதலியவர் ஆகும். இந்த முதலாளி முதலியவரின் செயலே பாவனா என்றழைக்கப்படுகிறது.

இதை போல வேதத்தில் கூறப்பட்ட **சுவர்க்காமோ யஜேத** என்ற வாக்கியத்தில். இ***ங்***கு பவித்து : - ய***ஞ்ஞ***ம் செய்யும் புருஷன் (செய்பவர்) அவர் செய்யப்படும் செயல் பாவயிதா. சுவர்கத்தை அடைய விரும்பும் மனிதன் அதை செய்ய அல்லது அடைய அவர் செய்யவேண்டியது ய***ஞ்ஞ***ம். அதை செய்ய பிரேரனை செய்வது ( தூண்டுவது ) வைதிக வாக்கியம். ஆதலால் , இ***ங்***கு அந்த வாக்கியமே பாவனா ஆகும்.

இந்த பாவனாவானது இரண்டு வகைப்படுகின்றது ஷாப்தீ பாவனா என்றும், ஆர்த்தி பாவனா என்றும் ஆகும்.

## ஷாப்தி பாவனா

*स च व्यापारविशेषो लौकिकवाक्ये पुरुषनिष्ठोऽभिप्रायविशेष। वैदिकवाक्ये तु पुरुषाभावाल्लिङदिशब्दनिष्ठ एव। अत एव शाब्दी भावनेति व्यवह्रियते।*

புருஷனின் பிரவிருத்திக்கு காரணமாக இருக்கும் செயல் ஷாப்தீ பாவனா என்பதாகும். இந்த வியாபாரமானது ஒரு வாக்கியத்தில் உள்ள வினைச்சொல்லின் லி***ங்*** எனப்படுகின்ற வினைஎச்சமாக இருப்பது அதாவது **யஜேத** என்பதில் உள்ள **த** என்னும் வினை எச்சம் இதனை குறிக்கிறது. லி***ங்*** வினைஎச்சம் மட்டும் தான் இந்த ஷாப்தீ பாவனையை குறிக்கும் என்பதில்லை **லேட்** , **லோட்** மற்றும் **தவ்ய** விகுதிகளினாலும் இது குறிக்கப்படும். லி***ங்*** என்று கூறப்பட்டது. ஒரு

சுட்டிகாட்டலே. **யஜேத்** என்பதற்கு பதிலாக **யஜாதே ,யஜதாம்** மற்றும் **யஷ்டபயம்** என்பதிலும் ஷாப்தீ பாவனையை குறிப்பதாகவே அதன் வினை எச்சம் இருக்கும். இப்படிபட்ட வினைசொற்களை கேட்டதும் (லி***ங்*** முதலிய) இது என்னை தூண்டுகிறது , இது என்னுடைய பிரவிருத்திக்கு ஏற்ற ஒரு செயலையுடையது என்று ஒருவன் அந்த வாக்கியத்தை புரிந்து கொண்டதும் அறிகிறான். இப்படி ஒரு சொல்லை கேட்டதும் நமக்கு அதனால் என்ன தெலிவாகின்றதோ அதுவே அந்த சொல்லின் பொருளாகும் என்பதாகிறது. அதாவது மாடு என்ற சொல்லை கேட்டதும் மாட்டின் தன்மை நமக்கு தோன்றுகிறது. அதனால், மாடு என்ற சொல்லின் பொருள் மாட்டுத்தன்மை என்றாகின்றது. மீமாம்ஸையில் கொடுக்கப்படும் விஷேசனத்தில் உள்ள சொற்களில் சக்தி ஏற்கபடுகின்றது. லி***ங்*** முதலியவைகளில் சக்தி நம்மை பிரவர்தனை செய்வதில் உள்ளது. அப்படிபட்ட இந்த பிரவிருத்தியை உண்டாக்கும் வியாபாரமானது உலகத்தில் உபயோகப்படுத்தும் வாக்கிய***ங்***களில் ஒரு புருஷனில் இருப்பதாக ஏற்கபடுகின்றது. எப்படியென்றால் உலகத்தில் ஒருவன் தன்னுடைய சீடனுக்கோ அல்லது தொழிலாளிக்கோ மாட்டை கொண்டு வா என்று கூறும்போது அந்த சீடன் அல்லது தொழிலாளியின் பிரவிருத்தி மாட்டைக்கொண்டு வருதலில் என்று எண்ணியே அவர்களை தூண்டுகிறான். அப்படி இல்லையென்றால் இ***ங்***கு லோட் முதலான வினையெச்சம் கூடிய சொல்லினை பிரயோகிக்க வேண்டியதில்லை, அதனால் இ***ங்***கு லி***ங்*** முதலிய விகுதிகளின் பிரவிருத்தி செய்யும் பொருளில், உலகத்தில் பிரவிருத்தி செய்பவனை குறிக்கின்றது. ஆனால் வேதத்தில் புருஷன் இல்லாததால், அப்படியென்றால் வேதம் புருஷனால் உண்டாக்கபடாததால், மீமாம்ஸையில் வேதத்தினை புருஷனால் உண்டாக்கபட்டதில்லை அபௌருஷேயாம் என்று ஏற்பதினால் அ***ங்***கு லி***ங்*** முதலிய சொல்லிலேயே அதன் பிரவிருத்தி செய்ய தூண்டும் சக்தி இருப்பதாக ஏற்கபடுகிறது. அப்படி சொல்லிலேயே அதன் சக்தியை ஏற்பதினாலேயே இது ஷாப்தீ பாவனா என்று கூறப்படுகின்றது.

உண்மையில் உலகத்திலும், வேதத்திலும் லி***ங்*** முதலிய சொற்களிலேயே அதன் சக்தியை ஏற்கவேண்டும். உலகத்தில் ( உலக வியவகாரத்தில் ) லி***ங்*** முதலியன உபயோகபடுத்தாத சொல்லினால் அதன் அபிப்பிராயத்தை நிச்சயமாக கூறமுடியாது. என்பதால் உலகத்தில் லி***ங்*** முதலியவையிலும் அதை உபயோகிக்கும் புருஷனில் சக்தி ஏற்கபடும். வேதத்தில் புருஷன் ஒருவன் இல்லாததினால் லி***ங்*** முதலியவைகளில் மாத்திரமே ஏற்கபடவேண்டும் என்பதாகும்.

## ஷாப்தீ பாவனையின் மூன்றம்ச***ங்***கள்

*सा च भावनांशत्रयमपेक्षते साध्यं साधनमितिकर्तव्यतां च किं भावयेत् केन भावयेत्, कथं भावयेदिति। तत्र साध्याकांक्षायां वक्ष्यमाणांशत्रयोपेता आर्थीभावना*

*साध्यत्वेनान्वेति एकप्रत्ययगम्यत्वेन समानाभिधानश्रुतेः। संख्यादीनामेकप्रत्ययगम्यत्वेऽप्ययोगयत्वान्न साध्यत्वेनान्वयः। साधनाकांक्षायां लिङादिज्ञानं करणत्वेनानवेति।तस्य च करणत्वं न भावनोत्पादकत्वेन, तत्वपूर्वमपि तस्याः शब्दे सत्त्वात्। किंतु भावनाज्ञापकत्वेन शब्दभावनाभाव्यनिर्वर्तकत्वेन वा। इतिकर्तव्यताकांक्षायामर्थवादज्ञाप्यप्राशस्त्यमितिक र्तवयतात्वेनान्वेति।*

பாவனையின் சக்தி சொல்லில் என்பதை நிரூபித்து பின் அந்த ஷாப்தீ பாவனையின் மூன்று அம்ச***ங்***கள் விளக்கப்படுகின்றது. இந்த ஷாப்தீபாவனை மூன்று அம்ச***ங்***கள். எதிர்பார்புகளை உடையது அவை முறையே சாத்யம், சாதனை, இதிகர்தவ்யதா ஆகும்.

**சாத்யம்** - ஒரு செயலினை குறித்து கூறப்படும்போது முதலில் நமக்கு அந்த செயலால் உண்டாகும் பிரயோஜனம் என்ன, அதனால் நாம் அடைவது என்ன என்ற எதிர்பார்ப்பு உண்டாகின்றது.

**சாதனம்** - நாம் அடையும் சாத்யத்தை எதனால், என்ன மார்க்கத்தினால் (வழி) அடைவது என்பது.

**இதி கர்தவ்யதா** - என்றால் என்று செய்யவேண்டியது என்று பொருள். அதாவது எப்படி செய்யவேண்டும். ஒரு சாத்தியத்தை அடையும் சாதனத்தை எப்படி செய்ய வேண்டும். என்பது. இவை ஒவ்வொன்றையும் விளக்கமாக காண்போம்.

சாத்தியமானது விளக்கப்படும்போது **கிம் பாவயேத்** அதாவது எதை பாவனை செய்வது என்று கூறப்பட்டது. இந்த சாத்யமானது எதிர்பார்பாக உண்டாகும் போது, அந்த நமக்கு அனுகூலமான பிரவிருத்தியை உண்டாக்கும் செயலே ஆரம்பிக்ககூடியதாகிறது என்பதால் இ***ங்***கு சாத்யமானது ஆரம்பிப்பதையே, பிரவிருத்தியே என்றாகின்றது. அந்த பிரவிருத்தியையே **ஆர்த்தி பாவனை** என்று கூறப்பட்டுள்ளது. அதாவது, ஆர்த்தீ பாவனையே ஷாப்தீ பாவனையின் சாத்யமாகின்றது, எப்படி ஷாப்தீ பாவனை மூன்று அம்ச***ங்***கள் உடையதோ , அப்படியே ஆர்த்தீ பாவனையும் மூன்று அம்ச***ங்***கள் உடையதாகின்றது. அந்த மூன்று அம்ச***ங்***கள் கூடிய ஆர்த்தீ பாவனை ஷாப்தீ பாவனையின் சாத்யமாகின்றது என்றால், அவை இரண்டும் ஒரே வேற்றுமை உருபினால் (பிரத்யயம்) அறியப்படுகின்றது. அதாவது, யஜேத வினில் உள்ள த என்பது இரண்டு அம்ச***ங்***களை உடையது என்று கண்டோம். லி***ங்*** மற்றும் ஆக்யாதம். அதில் லி***ங்*** அம்சத்தினால் ஷாப்தீ பாவனையும் ஆக்யாத அம்சத்தினால் ஆர்த்தீ பாவனையும் ஆகிறது.

ஒரே வேற்றுமை உருபினால் இரண்டுமே அறியபடுகின்ற காரணத்தினால் அவை இரண்டிற்கும் ஒரே அபிதானம் அதாவது பெயர் உடையது. என்பதாகின்றது. இரண்டுமே ஒரே பெயரினால் அறியபடுவதால் அருகாமையுடையதும், மூல சொல்லின் பொருளினிலும், வேற்றுமையுருபின் பொருளிலும் உள்ள வேற்றுமையால் இவை வேறும் ஆகின்றது. ஒரே பெயரினில் அறியப்படுவதால், சமானாபிதான ஷ்ருதி என்ற பிரமாணத்தின் படி , யஜேத என்பதில் உள்ள த வும் வேதத்தின் பாகமானதால் ஷ்ருதியாக ஏற்கபடுவதால் அவை லி***ங்*** அம்சமாகவும், ஆக்யாத அம்சமாகவும் ஷாப்தீ மற்றும் ஆர்த்தீ பாவனையினை குறிப்பதாக உள்ளதால் சமானாபிதான ஷ்ருதி பிரமானமாகின்றது. ஆனால், இந்த த என்னும் வேற்றுமை உருபானது ஷாப்தீ மற்றும் ஆர்த்தீ பாவனையை மட்டும் குறிப்பதாகாது சமஸ்கிருத இலக்கணத்தின்படி இந்த த வானது, எண்ணிக்கை ( ஒருமை, இருமை, பன்மை ),காலம் (கடந்த, நிகழ், எதிர்) மற்றும் புருஷன் (தன்மை, முன்னிலை, படர்கை) ஆகியவைகளையும் குறிப்பதாகின்றது. அதன்படி த என்பது ஒருமை முதலியவைகளையும் சாத்யமாக சம்பந்தப்படுத்துவதாக ஏன் ஏற்ககூடாது. என்றால், அவையினில் யோக்யத்தன்மை இல்லாததினால், அதாவது எண்ணிக்கை முதலானது சாத்யமாக எந்த சாதனையினாலும் அடைய முடியாததால், ஒரு மனிதனுக்கு செயலானது செய்யகூடியதாகிறது, ஆனால் எண்ணிக்கை முதலானது இல்லை. முன்பே அடையப்பட்டதாலோ ( சித்தமான ) ஒன்றை ஒரு சாதனையினால் அடைய முடியாது. என்பதால் எண்ணிக்கை, காலம், புருஷன் முதலியவைகளை சாத்யமாக சம்பந்தபடுத்த முடியாது.

சாத்யமானது என்ன என்று விளக்கிய பிறகு சாதனமானது என்ன என்று விளக்கபடுகின்றது. நம்முடைய பிரவிருத்திக்கு அனுகூலமானதை எதன் மூலமாக எந்த வழியாக நாம் அடைவது என்ற கேள்வி எழுகின்றது. லி***ங்*** முதலியவைகளில் அறிவே இ***ங்***கு காரணமாக அதாவது மேன்மையான காரணமாக ஏற்கபடுகின்றது. லி***ங்*** முதலிய என்றால் முன்பு கூறப்பட்ட லி***ங்***, லேட்,லோட்,தவ்ய முதலிய வேற்றுமை உருபுகளே. இப்படிபட்ட லி***ங்*** முதலியவை கூடிய ஒரு வாக்கியமானது உபயோகிக்கபட்டால், ஒருவன் அந்த லி***ங்*** முதலியவைகளின் சக்தியை புரிந்து கொண்டு செயல்படுகிறான். அதனால் செயல்பட லி***ங்*** முதலியவைகளில் சக்தியின் ***ஞா***னம் அவசியமாகின்றது. அப்படி அதன் சக்தியின் ***ஞா***னம் ஒருவனுக்கு உண்டாகவில்லையென்றால் , அவன் வாக்கியம் கேட்ட பின்பும் செயல் ஒன்றும் புரியாமல் இருப்பான். மீமாம்ஸையில் லி***ங்*** முதலியவையின் ***ஞா***னமான காரணம் ஷாப்தீ பாவனையினை நினைவுபடுத்தும் (***ஞா***பக) காரணமாக மட்டும் உள்ளது. உண்டாக்கும் ( உத்பாதக ) காரணமாக இல்லை. அதாவது பானையினை அறிவதற்கு கண் இந்திரியமும், பொருளான பானையின் சேர்க்கை உண்டாக வேண்டும் அப்படி உண்டாகும் போது பானை என்ற அறிவு உதயமாகிறது. இது உத்பாதக காரணம் என்று கூறப்படுகின்றது. ஆனால் இருட்டில் உள்ள பானையை காண உபயோகிக்கும் விளக்கு முதலியவை ***ஞா***பக காரணம். உத்பாத்ய – உத்பாதக சம்பந்தம் இருக்கும் அ***ங்***கு காரியம் ஏற்கனவே இருப்பதில்லை. ஆனால் ***ஞா***ப்ய –

ஞாபக சம்பந்தத்தினில் கார்யம் முன்பே இருக்கின்றது மாத்திரம் அது அறியபடுகின்றது. இப்படி ஏற்பதற்கு காரணம், உத்பாதக காரணமாக ஏற்றால், லி***ங்*** முதலியவற்றில் ஷாப்தீ பாவனை முதலிலேயே இல்லாமல் உண்டாகியது ஆகின்றது. ஆனால் வேதமானது நித்தியமாக ஏற்கபடுவதால், அதில் உள்ள எல்லா சொற்களும் நித்தியமாகின்றது. அதனால், நமக்கு அதன் பொருள் விள***ங்***காவிட்டாலும் அதில் ஷாப்தீ பாவனை எப்பொழுதும் உள்ளதாக இருக்கின்றது. அதனால் லி***ங்*** முதலியவைகளில் ஷாப்தீ பாவனை ஞாபக காரணமாக மாத்திரமே இருக்கின்றது.

இப்பொழுது ஷாப்தீபாவனையின் மூன்றாவது அமசமான **இதி கர்தவ்யதா** விற்கு வருவோம் , இதி என்றால் இப்படி, கர்தவ்யதா என்றால் செய்ய வேண்டும் என்று பொருள். இப்படி செய்யவேண்டும் என்றால் அது சாதனமாகின்றது, வழிமுறையாகின்றது, சாதனத்திற்கும் இதற்கும் என்ன வித்தியாசம் என்றால், சாதனம் ஒரு செயலினை செய்யும் சாமானிய வழியை கூறியது, இது அந்த செயலினை செய்ய விஷேஷ வழிகளை, காரண***ங்***களை கூறுகின்றது.

உதாரணத்திற்கு, **வாயவ்யம் ஷ்வேதமாலபேத் பூதிகாம:** (வாயுதேவதைக்காக வெள்ளை பசுவினை கொண்டு யாகம் செய்ய வேண்டும், பூமியை அடைய ஆசையுள்ளவன் ) என்ற விதி வாக்கியம் பூமி அடைய ஆசையுள்ளவனை யாகம் செய்ய தூண்டுகிறது. ஆனால் சோம்பேரிதனம் முதலியவைகளால் ஒருவன் இதை கேட்காமல்விட்டால் வேதத்தின் ஒரு பாகமான அர்த்தவாதம் என்ற பகுதி மூலம் (உயர்த்தி, போற்றி சொல்லுதல் ) **வாயுர்வை க்ஷேபிஷ்டா தேவதா** (வாயு மிகவும் சீக்கிரம் செய்யும் தேவதை ) என்று வாயு மூலம் பலனை சீக்கிரம் அடையலாம் என்ற அர்த்த வாதத்தில் கூறப்பட்ட விசேஷ அறிவைக்கொண்டு, சோம்பேரி, உதாசீனன் முதலியவரும் அந்த யாகத்தை செய்ய முயலுவார்கள். அதனால், அர்த்த வாதத்தினால் அடையப்பட்ட விசேஷ அறிவும் ஒருவனை விதி வாக்கியத்தினால் கூறப்பட்ட செயலின் சக்திக்கு துணையாக இருந்து இதிகர்தவ்யதாவாக அந்த முயர்ச்சியில் ஏற்கபடுகின்றது.

## ஆர்த்தி பாவனை லக்ஷணம்

*प्रयोजनेच्छाजनितक्रियाविषयव्यापार आर्थी भावना। सा चाख्यातात्वांशेनोच्यते आख्यातसामान्यस्य व्यापारवाचित्वात्।*

ஒரு புருஷனின் பிரவிருத்திக்கு காரணமாக இருக்கும் செயல் ஷாப்தீ பாவனா என்று கண்டோம். ஆர்த்தி பாவனையானது ஒரு புருஷனின் பிரயோஜனமானதின் (சுவர்கம் முதலிய) ஆசையினால் உண்டாகும் செயலோடு ( யாகம் முதலிய ) சம்பந்தம் உடைய ஒரு வியாபாரம். லி***ங்*** தன்மையினால் ஷாப்தீ

பாவனையானது நிரூபணம் ஆவது போல ஆர்த்தி பாவனை வேற்றுமை உருபின் ஆக்யாயதன்மையினால் அறியபடுகின்றது, ஏனெனில் எல்லா ஆக்யாதமும் ஒரு வியாபாரத்தையே (செயலையே) குறிப்பதாக இருக்கின்றது. இ***ங்***கு ஆக்யாத சாமான்யம் என்றால் ஆக்யாதம் மட்டும் என்ற பொருள்படும். ஒரு வினைசொல்லில் அதன் செயலை குறித்த அறிவு ஆக்யாயத்தினால் மட்டும் அறியப்படுவது. லி***ங்***கினால் செய்யபடும் விதத்தை குறிக்கும். யஜேதவில் **த** வின் ஆக்யாதம் செய்ய என்பதையும், லி***ங்*** வேண்டும் என்பதையும் குறிக்கிறது ஆக்யாதம் ஒரு செயலை குறிப்பதாக இருப்பதால்.

## ஆர்த்தி பாவனையின் மூன்றம்ச***ங்***கள்

*साप्यंशत्रयमपेक्षते साध्यं साधनमितिकर्तवयतां च 'किं भावयेत् केन भावयेत् कथंभावयेत्' इति। तत्र सायाकांक्षायांस्वर्गादिफलं साध्यत्वेनान्वेति। साधनाकांक्षायां यागादिः करणत्वेनान्वेति। इतिकर्तव्यताकांक्षायां प्रयाजाद्यङ्जातमितिकर्तव्यतात्वेनान्वेति।*

ஷாப்தீ பாவனையை போல ஆர்த்தி பாவனையும் மூன்றம்ச***ங்***கள் உடையது. சாத்யம், சாதனம், இதிகர்தவ்யதா இவை அதே கிரமத்தில் கிம் பாவயேத் ( எதை பாவனை செய்ய வேண்டும்.), கேன பாவயேத் ( எதன் மூலம் பாவனை செய்ய வேண்டும் ), கதம் பாவயேத் ( எதை கொண்டு பாவனை செய்ய வேண்டும் ) என்று பொருள்படும்படியாக உள்ளது.

இவையினில் சாத்யத்தினை பற்றிய சந்தேகத்தில் சுவர்கம் முதலிய பலன்களையே பொருளாக ஏற்கபடுகின்றது. ஆனால், சுவர்கம் முதலிய என்று கூற என்ன அவசியம் என்றால் வேதத்தினால் கூறப்பட்ட கர்ம***ங்***களுகெல்லாம் சுவர்கம் மாத்திரம் பலன் இல்லை. **<u>தத்னேந்திரிய காமஸ்ய ஜீஷீயாத்</u>** (இந்திரிய வலிமை வேண்டுபவன் தயிரினால் யாகம் செய்க). **<u>வாயவ்யாம் பஷும் ஆலபேத் பூதிகாம:</u>** (வாயுவிற்கு பசுவினை கொண்டு யாகம் செய்யவேண்டும் நிலம் (பொருள்) அடைய விருப்பமுள்ளவர்), புத்ரேஷ்டீ யாகம் புத்ரன் அடைய வேண்டி முதலான பலவித கர்ம***ங்***கள் பலவித பலன்களை தருவதாக இருப்பதால்.

இ***ங்***கு ஒரு கேள்வி எழ வாய்ப்புள்ளது. சாத்யமாக சுவர்கம் முதலியவைகளை ஏன் கொள்ளவேண்டும். யாகத்தையே சாதனமாக ஏற்பதற்கு பதிலாக சாத்யமாக ஏன் ஏற்ககூடாது என்று. இதற்கு பதில், யாகம் முதலியவை நம்முடைய ஆசைக்குண்டான விஷயம் இல்லை. அதில் (யாகத்தில்) பலவிதமான கஷ்ட***ங்***களும், திரவிய (பொருள்) நஷ்ட***ங்***களும் உண்டாவதால். இப்படிபட்ட கஷ்ட***ங்***களை தரும் யாகத்தை இஷ்டமாக ஒருவருமே ஏற்பதற்கு இல்லை. ஆனால். ஆனந்தத்தை தரும் சுவர்கம் முதலானவை இஷ்டமாக ஏற்பது

எல்லோருக்கும் விருப்பமே. அதுமட்டுமல்லாமல் வேத வாக்கியத்தில் (வேதத்தில்) சுவர்கம் முதலான பலன் குறிப்பிடபட்டது உபயோகமற்றதாக ஆகும். ( அப்படி அதை பலனாக ஏற்காவிட்டால்). அப்படிபட்ட சாதனமான யாக***ங்***கள் நேடடியாக எப்பொழுதும் பலனை தருவதில்லை, அவை ஒரு ஆபூர்வத்தை (கண்களால் காணமுடியாக புண்ணியம் போன்ற) உணடு செய்து யாகத்தினை செய்பவரின் ( யஜமானர் ) மரணத்திற்கு பிறகு பலனை ( சுவர்கம் போன்ற) தரும். இதி கர்தவியத்தாவாக ( இப்படி செய்யவேண்டும் ) பிரயாஜம் முதலான அ***ங்***க***ங்***கள் ஏற்கபடுகின்றது. பிரயாஜம் முதலான என்றால், பிரயாஜம், அனுயாஜம் ஆகியவை. (இதில் அக்னி அன்வாதானமும், அவகாதமும் கூட உண்டு) பிரயாஜம் என்றால் தர்ஷபூர்ணமாச என்ற யாகத்தில் சமிதோ யஜதி, தனீனபாதம் யஜதி, இடோ யஜதி, பர்ஹிர் யஜதி மற்றும் ஸ்வாஹாகாரம் யஜதி என்ற ஐந்து யாக***ங்***கள் குறிப்பிடபடுகின்றது. இவை தர்ஷ பூர்ணமாசம் என்ற யாகத்தின் அ***ங்***க***ங்***கள்.

## வேத லக்ஷண விசாரம்

*अथ को वेद इति चेत् – उच्यते– अपौरुषेयं वाक्यं वेदः। स च विधि–मंत्र–नामधेय–निषेधा–र्थवादभेदात् पञ्चविधः।*

பாவனாவின் இரண்டு வகைகளான ஷாப்தீ மற்றும் ஆர்த்தீ பாவனைகளை விசாரித்தபின்பு, வேதத்தினால் பிரதி பாத்யம் (நிச்சயம்) செய்யபட்ட பிரயோஜனத்தையுடைய ஒரு செயலுக்கு தர்மம் என்று லக்ஷணம் கூறப்பட்டது. இதில் வேதம் என்றால் என்ன என்ற கேள்வி எழுகிறது. **லக்ஷண பிரமாணாப்யாம் வஸ்து ஸித்தி** (லக்ஷணமும் பிரமாணமும் கொண்டு ஒரு விஷயம் நிச்சயிக்கபடுகிறது ) என்ற நியாயத்திற்கேற்ப. **அபௌருஷேயம் வாக்யம் வேத:** என்று வேதத்திற்கு லக்ஷணம் கூறபடுகிறது.

இ***ங்***கு இந்த லக்ஷணத்தில் கூறப்பட்ட ஒவ்வொரு பதமாக பார்போம். அபௌருஷேயம் என்று கூறியது மூலம் மஹாபாரதம் முதலிய கிரந்த***ங்***கள் விளக்கப்பட்டதாகிறது. அது எப்படி என்றால்., பௌருஷேயம் அதாவது ஒரு புருஷனால் ( மனிதனால் ) செய்யப்பட்டது. என்று பொருள். இப்படி எடுத்துக் கொண்டால், மனிதனால் உச்சரிக்கப்பட்டதெல்லாம் பௌருஷேயம் என்றாகியால் நாம் மஹாபாரதத்தையோ, இராமாயனத்தையோ படித்தால் அந்த கிரந்த***ங்***களை எழுதியவர்களாக ( செய்தவர் ) ஆகிவிடுவோம். அதனால் முதல் முதல் வேறு யாரும் உச்சாரனை செய்யாத ஒன்றை கூறுவது என்று பௌருஷேயத்திற்கு லக்ஷணம் உண்டாகும். வேதம் முழுவதும் (எல்லா ஷாக்கை, பிரிவு ) குரு உச்சரித்த பின்பு அதை அனுசரித்து உச்சாரனை செய்யபடுவது என்பதால், முதலில் அதை உச்சரித்தவரின் பெயர் ***ஞா***பகத்தில் கொள்ளமுடியும் என்றாலும் அறிய படாததால் அது அபௌருஷேயம் ஆகின்றது.

சரி, வேதத்தை எழுதியவரின் பெயர் அறியபடாத பொழுது அதை ஈஷ்வரன் எழுதினார் என்று கூறலாமே, அதில் கடல், மலை, முதலியவற்றின் வர்ணனையும், பெயர்களும் உண்டு. என்பதால் யரோ ஒருவர் எழுதியது என்று ஆக வேண்டும் என்பதால் என்றால், ஈஷ்வரனும் **தாதா யதா-பூர்வம் அகல்பயன்** (ஈஷ்வரன் முன்பு உள்ளது போன்று உண்டாகினார்) என்றும், **ய: கல்ப: ஸ கல்பபூர்வ:** என்ற நியாய படியும் இந்த சம்சாரமானது அநாதி என்று ஆவதாலும் ஈஷ்வரன் முன்பு உள்ளது போலவே ஈஷ்வரன் நினைவு கூர்ந்து வேதத்தை மற்றவருக்கு போதித்தான் என்பதாலும் ஈஷ்வரன் எழுதியது என்று ஆகாது என்றாகிறது. அதனால் அபௌருஷேயம் என்பதால் புருஷனால் செய்யப்பட்ட கிரந்த***ங்***கள் எல்லாம் நீக்கபட்டதாகிறது. இரண்டாவது பதமான வாக்யம் என்பது கொடுக்கப்படாமல் இருந்தால் வேதத்தின் லக்ஷணம் **அபௌருஷேயம் வேத:** என்றாகும், இதனால் புருஷனால் செய்யபடாத ஆத்மா முதலான தத்வ***ங்***களில் வேதத்தின் லக்ஷணம் போகும், அதுவும் வேதமாகும் என்பது பொருள்.

இந்த வேதமானது ஐந்து வகைகளாக பிரிக்கபடுகிறது. அவை விதி, மந்தரம், நாமதேயம், நிஷேதம் மற்றும் அர்த்தவாதம் இவற்றை ஒவ்வொன்றாக விளக்கமாக காண்போம்.

## விதி

*तत्राज्ञातार्थज्ञापको वेदभागो विधिः। स च तादृशप्रयोजनवदर्थविधानेनार्थवान् यादृशं चार्थ प्रमाणान्तरेणाप्राप्तं विधत्ते – यथा 'अग्निहोत्रं जुहुयात् स्वर्गकामः' इति विधिर्मानान्तरेणाप्राप्तं स्वर्गप्रयोजनवद्धोमं विधत्ते। अग्निहोत्रहोमेन स्वर्ग भावयेदिति वाक्यार्थबोधः। यत्र कर्म मानान्तरेण प्राप्तं तत्र तदुद्देशेन गुणमात्रं विधत्ते– यथा 'दध्ना जुहोति' इत्यत्र होमस्याग्निहोत्रं जुहुयादित्यनेन प्राप्तत्वाद्धोमोद्देशेन दधिमात्रविधानं दध्ना होमंभावयेदिति। यत्र तूभयमप्राप्तं तत्र विशिष्टं विधत्ते– यथा 'सोमेन यजेत' इत्यत्र सोमयागयोरप्राप्तत्वात्सोमविशिष्टयागाविधानम्। सोमपदे मत्ववर्थलक्षणया सोमवता यागनेष्टं भावयेदिति वाक्यार्थबोधः।*

விதியின் லக்ஷணம் **அஞ்ஞாதார்தஞாபகோ வேதபாக: விதி:** என்பது. அதாவது, அ***ஞ்ஞ***ாத- நாம் அறியாத, என்றால், மற்ற பிரமாண***ங்***களால் அறியாத. பிரத்தியக்ஷம், அனுமானம், உபமானம், அர்த்தாபத்தி மற்றும் அனுபலப்தி என்ற ஆறு பிரமாணம் மீமாஸகர்கள் ஏற்பது இப்படிபட்ட எந்த பிரமாணத்தினாலும் நாம் அறியாதது, அர்த்த - விஷயம் என்றால் முன்பி கூறியது போல ( தர்மத்தின் லக்ஷணத்தில் ) நமக்கு பிரயோஜனமான, விருப்பமுள்ள, நன்மை கொடுக்கும் விஷயம், ***ஞ***ாபகோ - நினைவுபடுத்துவது. வேதபாகத்தில் உள்ள நாம் அறியாத

நன்மையான பலனை கொடுக்கும் விஷயத்தை நமக்கு நினைவுபடுத்தும், வாக்கியத்திற்கு விதி என்று பொருள்.

உதாரணத்திற்கு, **அக்னிஹோத்ரம் ஜுஹுயாத் ஸ்வர்ககாம:** (அகினிஹோத்திரம் செய்ய வேண்டும் சுவர்க்கத்தில் விருப்பமுள்ளவர் ) என்று நாம் வேறு எந்த வகையிலும் அறியமுடியாத சுவர்கத்தையும் அதை அடையும் வழியான அக்னிஹோத்ரம் என்ற ஹோமத்தையும் நமக்கு போதனையாக விதிக்கின்றது.

**அக்னிஹோத்ரம் ஜுஹுயாத் ஸ்வர்ககாம:** என்பதற்கு **அக்னிஹோத்ர ஹோமேன ஸ்வர்கம் பாவயேத்** என்ற பொருள் என்று மீமாம்ஸையில் நிச்சயிக்கப்பட்டுள்ளது. இப்படி கொள்வதனால் நமக்கு சாத்யமான சுவர்கமும் அதை அடையும் சாதனமான அக்னிஹோத்ரம் என்ற ஹோமத்தை பற்றியும் தெளிவாக அறியலாம்.

அக்னிஹோத்ரம் என்பது காலையில் சூரியனுக்கும் , மாலையில் அக்னிக்கும் தினமும் செய்யவேண்டிய ஹோமம் ஆகும். **அக்னி ஹோத்ரம் ஜுஹுயாத் ஸ்வர்ககாம:** என்பது உத்பத்திவிதி எனப்படும். **அக்னி ஹோத்ரம் ஜுஹோதி** என்பதே உத்பத்தி விதியாக இருந்தாலும், அக்னிஹோத்ர கர்மத்திற்கு அ*ங்*கு பலன் கூறப்படாததால், இந்த வாக்கியம் எடுக்கபட்டது.

கர்மமானது வேறு ஒரு பிரமானத்தினால், என்றால், வேத வாக்கியத்தினால் அறியபட்டதாகிறதோ, அந்த கர்மத்திற்கு குணத்தை அதாவது, அ*ங்*கத்தை மட்டும் போதித்து விதிக்கிறதோ அப்படிபட்ட வாக்கிய*ங்*கள் குணவிதி என்றழைக்கபடுகின்றது. **தத்னா ஜுஹோதி** (தயிரினால் ஹோமத்தினை செய்யவேண்டும்) என்ற வாக்கியத்தில் ஜுஹோதி என்பதின் மூலம் ஹோமத்தினை விதி செய்யவில்லை மாறாக, **அக்னிஹோத்ர ஜுஹுயாத்** என்பதின் மூலம் அடையப்பட்ட ஹோமத்தினை இ*ங்*கு கொண்டு அந்த ஹோமத்தில் தயிர் உபயோகப்படுத்தவேண்டும் என்று குணத்தை மாத்திரம் விதிக்கின்றது. அதனால், தயிரைக் கொண்டு நாம் ஹோமத்தினை பாவனை செய்யவேண்டும் என்பது பொருளாகின்றது. குணத்தை மட்டும் கூறுவதால் இது குணவிதி ஆகின்றது. உத்பத்தி விதி, குணவிதி. இவற்றை தொடர்ந்து விஷிஷ்டவிதி கூறபடுகின்றது. எ*ங்*கு எந்த வாக்கியத்தினால், கர்மமும் அதற்கு உபயோகிக்கும் திரவியமும் ஒரே இடத்தில் சொல்லபடுகின்றதோ அப்படிபட்ட வாக்கிய*ங்*கள் விஷிஷ்டவிதி எனபடுகின்றது. **ஸோமேன யஜேத** என்ற வாக்கியத்தில் சோமம் என்பது ஒரு கொடி, யஜேத என்பது யாகத்தை குறிக்கிறது. அதாவது, சோமம் என்றகொடி கொண்டு யாகத்தை செய்து பலனை அடைய வேண்டும் என்பது சோமத்தினால் கூடிய யாகம் என்பதற்கு பொருள். இ*ங்*கு கூறபட்டது மத்வர்தம் என்ற சமஸ்கிருத இலக்கணத்தில் கூறப்படும் மதுப் என்ற

விகுதியினை கொண்டு செய்யபடும் பொருள் ( அர்த்தம் ). இலக்கண நியமப்படி ஒரு காரகமானது ஒரு கிரியா (செயல்) உடன் மட்டுமே சேர்ந்து பொருள்தரும். இ***ங்***கு சோமோ மற்றும் யஜேத இரண்டுமே காரகமானதால் இந்த மத்வர்த லக்ஷணா செய்ய வேண்டியதாகின்றது.

*न चोभयविधाने वाक्यभेदः, प्रत्येकमुभयस्याविधानात्,किंतु विशिष्टस्यैव विधानात् । न च 'ज्योतिष्टोमेन स्वर्गकामो यजेत' इति विधिप्राप्तयागोद्देशेन सोमरूपगुणविधानमेवास्तु, सोमेन यागं भावयेदिति किं मत्वर्थलक्षणयेति वाच्यम्, तस्याधिकारविधित्वेनोत्पत्तिविधित्वासंभवात् ।*

இ***ங்***கு சோமம் யாகத்திற்கு விஷேஷணமாக (குறிப்பு) உபயோகிக்கப்பட்டுள்ளது. யாகம் சோமத்திற்கு அல்ல. சோமமே இ***ங்***கு விஷேஷணம் அது விஷிஷ்ட (கூடிய) யாகம் என்பதால். இ***ங்***கு வாக்கியபேதம் என்கிற தோஷம் வருவதில்லை. வாக்கியபேதம் என்ற தோஷம் என்ன என்று பார்ப்போம். ஒரு இடத்தில் இருக்கும் இரண்டு வாக்கிய***ங்***கள் வேறுவேறு பொருளை தருவதாக இருந்தால் அ***ங்***கு ஏதாவது ஒன்றை ஏற்பது ( என்ற விகல்பத்தை ) நாம் கையாலவேண்டி உள்ளது. அதனால் அ***ங்***கு வாக்யபேதம் என்கிற தோஷம் உண்டாகின்றது. இதற்கு ஒரு உதாரணம் **வ்ரீஹீர்பிர் யஜேத யவைர்வா** என்ற வாக்கியத்தில் கோதுமையோ அல்லது நெல்லை கொண்டோ யாகம் செய்யலாம் என்று ஆகிறபோது அவரவர் இஷ்டம் போல செய்ய அனுமதிக்க வேண்டியுள்ளது. அப்பொழுது வாக்கிய பேத தோஷம் உண்டாகின்றது. ஆனால் **ஸோமேன யஜேத** ( சோமத்தினால் யாகம் செய்யவும்) என்ற உள்ள வாக்கியம் இரண்டு பொருள் படும்படியாக இல்லை. சோமம் என்கிற திரவிய விஷேஷம் கொண்டு யாகம் என்கிற விஷேஷ்யமுள்ள கர்மத்தை செய்யவும் என்று பொருளாவதால் சோமம் கூடிய (விஷிஷ்ட) யாகம் என்று பொருளாகிறது.

*ननु 'उद्भिदा यजेत पशुकामः इत्यस्येव ज्योतिष्टोमेनेत्यस्याप्युत्पत्त्यधिकारविधित्वमस्तित्वति चेत् –न, दृष्टान्ते उत्पत्तिवाक्यान्तराभावेनान्यथानुपत्त्या तथा त्वाश्रयणात् । किंच ज्योतिष्टोमेनेत्यस्योभय विधित्वेऽनेनैव यागस्तस्य फलसंबन्धोऽपि बोधनीय इति सुदृढो वाक्यभेदः। तद्वरं सोमपदे मत्वर्थ लक्षणया विशिष्टविधानम् ।*

சரி, ஆனால் ( ஆனால் என்று சாஸ்திரத்தில் பார்க்கபடும் இடமெல்லாம் , நநு அல்லது நச என்கிற சொற்கள் கொண்டு, பூர்வபக்ஷி என்றழைக்கப்படும் எதிராளியின் சொற்களாகவே எடுக்கவேண்டும்), பூர்வபக்ஷி வாதாடுகின்றான்,

இ***ங்***கு சோமத்தினால் யாகம் செய்ய வேண்டும் என்று ஏன் மத்வர்தம் செய்யவேண்டும், **ஜ்யோதிஷ்டோமேன யஜேத ஸ்வர்ககாம:** என்பது கொண்டு யாகத்தை விதிப்பதாகவும், **ஸோமேன யஜேத** என்பது கொண்டு சோமம் என்கிற திரவியத்தை குறிக்கும் குணவிதியாகவே ஏன் எடுக்க கூடாது என்று கேட்டால், இ***ங்***கு ஜ்யோதிஷ்டோமேன என்கிற விதி உத்பத்தி விதியாக ஏற்கபடாததாலும் அது அதிகாரவிதியாக ஏற்கபட்டதாலும், அதிகார விதியினால் யாகம் முதலிய கர்ம***ங்***களால் உண்டாகும் சுவர்கம் முதலிய பலன்களும் அதனை அனுபவிக்க கூடிய அதிகாரிக்கு நினைவூட்டுவதாக இருக்கிறது. அதனால் இ***ங்***கு யாகத்தின் சுவரூபத்தை மட்டும் கூறுகின்ற உத்பத்தி விதியாக ஏற்கமுடியாது. அதனால் சோமேன என்பதை குணவிதியாகவும் ஏற்கமுடியாது. பூர்வபக்ஷி மீண்டும் கூறுகிறான். சரி ஆனால், **உத்பிதா யஜேத பஷீகாம:** என்பதில் ஏற்கபட்டது போல ஜ்யோதிஷ்டோமேன முதலியதிலும் ஏன் உத்பத்தி மற்றும் அதிகார விதி இரண்டையும் ஏற்ககூடாது என்றால்,

இ***ங்***கு இப்படி கூறுவது சரியாக இல்லை, காரணம் உத்பிதா முதலிய வாக்கியத்தில் உத்பத்தி விதி வாக்கியம் என்று ஒன்று தனியாக இல்லாதாலும் , ஜ்யோதிஷ்டோமேன என்கிற வாக்கியத்தில் கர்மத்தினோடும், அதன் அதிகாரியோடும் சம்பந்தம் உடையதாக ஒரே வாக்கியத்தில் இரண்டு வேறு பொருள்படியான வகையில் ஏற்றால் முன்பு கூறிய வாக்கியபேதம் என்னும் தோஷம் தவறாது வந்து தீரும்.

சில ஆசாரியர்கள் மத்வர்தத்தினை பத தோஷமாகவும் வாக்கியபேதத்தினை வாக்கிய தோஷமாகவும் கொள்கின்றனர். வாக்கிய தோஷத்தை காட்டிலும் பததோஷம் ஏற்க கூடியது என்பதால் சோமம் என்கிற பதத்தினில் மத்வர்த லக்ஷண கூடிய விஷிஷ்ட விதி ஏற்கப்பட்டது. நாம் வேறு பிரமாண***ங்***களினால் அறியமுடியாத விஷயத்தை நமக்கு போதிப்பது விதி என்றாகிறது. அந்த விதி நான்கு வகைபடுகின்றது. உத்பத்தி, வினியோகம், அதிகாரம் மற்றும் பிரயோகம் என்று, உத்பத்தி விதியின் மூலம் ஒரு கர்மத்தைபற்றிய அறிவு உண்டானபின் அதன் அ***ங்***க***ங்***களை பற்றிய விவரத்தை வினியோக விதி கூறுகின்றது. இந்த அ***ங்***க***ங்***களை எந்த கிரமத்தில் நாம் செய்யவேண்டும் என்பதை பிரயோகவிதியும். இந்த கர்மத்தை செய்ய தகுதியானவன் யார் என்பதை அதிகார விதியும் கூறும். அதனால், இவை எல்லாவற்றிற்கும் உத்பத்தி விதியே மூலமாக இருப்பதால் கிரபிராப்தமான உத்பத்தி விதியையும் மற்றவையளையும் கிரமமாக விளக்கமாக காண்போம்.

*विधिश्चतुर्विधः– उत्पत्तिविधि–विंनियोगविधि–रधिकारविधिः– प्रयोगविधिश्रेति ।*

## **உத்பத்தி விதி**

*तत्र कर्मस्वरूपमात्रबोधको विधिरूत्पत्तिविधिः। यथा 'अग्निहोत्रं जुहोति' इति। अत्र च विधौ कर्मणः करणत्वेनान्वयः, अग्निहोत्रहोमेनेष्टं भावेदिति। ननु यागस्य द्वे रूपे द्रव्यं देवता च। तथा च रूपाश्रवणेऽग्निहोत्रं जुहोतीति कथमुत्पत्तिविधिः? अग्निहोत्रशब्दस्य तु तत्प्रख्यान्यायेन नामधेयत्वादिति चेत्। न। रूपाश्रणेऽप्यस्योत्पत्तिविधित्वात्। अन्यथा रूपश्रवणात् 'दघ्राजुहोति' इत्ययमेवोत्पत्तिविधिः स्यात्। तथा च 'अग्निहोत्रं जुहोति' इति वाक्यमनर्थकं स्यात्।*

எந்த வாக்கியத்தினால் கர்மத்தின் (யாகம் முதலிய) சுவரூபம் மாத்திரம் போதிக்கபடுகின்றதோ அது உத்பத்தி விதி எனப்படும். கர்மத்தின் சுவரூபமாத்திரமே என்று கூறுவது அதன் குணம், பலன் மற்றும் கிரமத்தினையும் போதிக்கும் வாக்கியங்களில் இருந்து விளக்கவே. உத்பத்தி விதிக்கு உதாரணம் முன்பே நாம் கண்ட **அக்னிஹோத்ரம் ஜுஹோதி** என்கிற வாக்கியம் இங்கு அக்னிஹோத்ரம் என்று பெயருள்ள ஒரு யாகம் நமக்கு விதிக்கப்படுகின்றது. ஆனால் இதைபோல உள்ள **தத்னா ஜுஹோதி** என்பதிலும் யாகம் விதிக்கபட்டாலும் குணமான தயிர் என்கிற திரவியத்தையும் அது விதிக்கிறதால் இது உத்பத்தி விதி ஆகமுடியாது.

ஆனால் முன்பு கூறப்பட்ட (உபயவிதி பிரகரணத்தில்) **உத்பிதா யஜேத பஷுகாம:** என்கிற பலனையும் கூறியிருப்பதால் இது அதிகார விதியாக கருதபடுகின்றது. வேறு எங்கும் இந்த கர்மத்தின் உத்பத்தி கூறப்பட்டததால் யஜேத என்கிற பதத்தினால் கர்மத்தின் சுவரூபமும் போதிக்கிறதாக ஏற்பதால் இது உத்பத்தி விதியும் ஆகிறது. உத்பத்தி விதியில் கர்மம் என்பது கரணம் என்கிற பொருளில் எடுக்கப்படுகின்றது. பிரகிருஷ்ட காரணத்தை கரணம் என்கிறோம். இதை கூறவதற்கு காரணம், சாதாரணமாக இலக்கணம் அறிந்தவர்கள் **கர்துரீப்ஸிதமம் கர்ம** என்கிற சூத்திரப்படி எது கர்தாவினால் ஆசைபட யோக்யமானதாக இருக்கிறதோ அது கர்மம் என்று அறிவார்கள். அதன் காரணமாக அக்னிஹோத்ரம் இங்கு கர்தாவினால் ஆசைப்பட்டதாக இருக்கும் காரணத்தினால் அது சாத்யம் அதாவது பலன் ஆகிறது. ஆனால் அக்னிஹோத்ரம் பலமாக ஏற்பதில்லை மீமாம்ஸையில் அது ஒரு சாதனமே அதனால் அக்னிஹோத்ரம் என்கிற ஹோமத்தினால் இஷ்டத்தை அடைவீர்களாக என்று பொருள் கொடுக்கப்படுகின்றது. நமது இஷ்டமானதிற்கு சாதனமாக அக்னிஹோத்ரம் ஏற்கபடுகின்றது. இஷ்டம் என்ன என்பது அதிகார விதியின் விஷயமாகின்றது.

யாகத்திற்கு உண்டான இரண்டு ரூபம் திரவியம் மற்றும் தேவதை என்பன. இவைகளில் திரவியம் என்பது யாகத்தில் உபயோகிக்கப்படும் பொருட்களான ஹவிஸ் முதலியவை. தேவதை யாருக்காக இந்த திரவியம் பொடுக்கப்படுகின்றதோ அக்னி முதலியவை. அதில் எதுவுமே **அக்னிஹோத்ரம் ஜுஹோதி** என்னும் வாக்கியத்தில் காணப்படாததால் ( திரவியமோ,. தேவதையோ)

இது உத்பத்தி விதியாக எப்படி கொள்வது என்று எந்தேகம் வரக்கூடும். அதனால் அப்படிபட்டதோஷத்தை நீக்கும் பொருட்டு தத்பிரக்யா நியாயம் எனப்படுகின்ற அதாவது, தத்-தேவதை, பிரக்யா-(க்யா- கதனே என்னும் மூல சொல்லில்லிருந்து) கூறுதல் என்று தேவதையை பற்றி கூறுதலாக அக்னிஹோத்ரம் என்னும் வாக்கியத்தினை பொருள் கொண்டு அக்னி எதற்கு ( எந்த ஹோமத்திற்கு) தேவதையோ அப்படிபட்ட அக்னிஹோத்ரம் என்கிற ஹோமம் என்று பொருள் கொள்ளலாம் என்றால் இது மீமாம்ஸை சிந்தாந்திக்கு சம்மதமில்லாதது. காரணம். **தத்னா ஜுஹோதி** என்னும் வாக்கியத்தில் தயிர் என்கிற ஹோம திரவியம் கூறபட்டதால் அதை உத்பத்தி விதியாக ஏற்கவேண்டியதாயிருக்கும். அது மட்டும் அல்லாமல் **அக்னி ஹோத்ரம் ஜுஹோதி** என்கிற வாக்கியமும் வீணான வாக்கியமாக, பொருளற்றதாக ஆகிவிடும். எந்த வாக்கியமும் பொருளற்றது என்று சித்தாந்திகள் ( மீமாம்ஸை ) ஏற்பதில்லை. தத்பிரக்யா நியாயமும் இ***ங்***கு ஏற்புடையது இல்லை காரணம் ஜைமினியின் சூத்திரம் **தத் பிரக்யம் சான்யஷாஸ்த்ரம்** என்பதின் பிரகாரம் தேவதையை பற்றி கூறும் வாக்கியமானது வேறு மந்திரமாக இருக்க வேண்டும் . அக்னிஹோத்ரம் என்கிற யாகத்திற்கு அக்னியும், சூரியனும் தேவதைகள் என்று முன்பே கூறியுள்ளோம்.

## வினியோக விதி

*अंगप्रधानसंबन्धबोधको विधिर्विनियोगविधिः। यथा 'दघ्ना जुहोति' इति। स हि तृतीयया प्रतिपन्नाङगभावस्य दघ्नो होमसंबन्ध विधत्ते दघ्ना होमं भावयेदिति।*
*गुणविधौ च घात्वर्थस्य साध्यत्वेनान्वयः। क्वचिदाश्रयत्वेनापि यथा 'दघ्नेन्द्रियकामस्य जुहुयात्' इत्यत्र दधिकरणत्वेनेन्दियं भावयेत्। तच्च किंनिष्ठमित्याकाङ्क्षायां संनिधिप्राप्तहोम आश्रमयत्वेनान्वेति।*

அ***ங்***கமான திரவியம் மற்றும் தேவதை முதலியவைகளும் பிரதானமான ஹோமம் முதலியவைகளும் உள்ள சம்பந்தத்தை போதிக்கும் விதிக்கு வினியோக விதி என்பது பெயர். உதாரணம் **தத்னா ஜுஹோதி** என்கிற வாக்கியம் இ***ங்***கு தயிர் என்கிற திரவியம் கொண்டு ஹோமம் செய்யவும் என்பது பொருள். இ***ங்***கு தத்னா என்கிற பதம் மூன்றாம் பெயர் வேற்றுமையில் குறிபிடப்பட்டுள்ளது. இந்த வேற்றுமை பற்றிய விளக்கம் கூறபடுவதற்கு காரணம் இலக்கணத்தில், முதல் வேற்றுமையினால் குறிக்கபடும் கர்த்தாவானவனுக்கு கிரியையோடு (செயல்) நேரடியான சம்பந்தமுள்ளது, மற்ற வேற்றுமைகளுக்கு அப்படி நேரடியான சம்பந்தம் எற்கபடவில்லை. அதனால் கர்த்தாவே ( முதல் வேற்றுமை) முக்கியமாக ஏற்கபடவில்லை. ஆனால் , மீமாம்ஸையில் கிரியையே முக்கியமாகவும் அதனோடு சம்பந்தமுடைய காரணத்தினால் மட்டும் கர்த்தாவுக்கு பிரதான தன்மையும், மற்ற வேற்றுமைக்கு பிரதானமின்மையும் ஏற்கபடுகின்றது. அதனால் முதல் வேற்றுமையை தவிர மற்ற வேற்றுமைகள் பிரதானமில்லாது கௌனமாகவே

ஏற்கபடுகின்றது. அதனால் மூன்றாம் வேற்றுமையில் தரப்பட்ட தத்னாவும் கௌனமாகவே இருக்கின்றது. அதனால், அது அ***ங்***கதன்மையை அடைந்து தயிருக்கு ஹோமத்துடன் உள்ள சம்பந்தத்தை விதிக்கின்றது. என்பதால் தயிரினால் ஹோமத்தை பாவனை செய்யவேண்டும் என்ற பொருள் உண்டாகிறது. கௌனமானதால் குணவிதி என்கிற பெயர் உண்டாகின்றது என்றும் கூறலாம்.

குணவிதியில் மூலசொல்லின் ( தாது) பொருள் சாத்யம் என்றாகின்றது. ஏனென்றால் ஜீஹோதி அல்லது யஜதே முதலிய சொற்கள் ஹீ மற்றும் யஜ ஆகிய மூல சொல்லின் வினைசொற்கள் மற்ற இடத்தில் சாத்யமாக சுவர்கமும் சாதனமாக யாகமும் இருந்தது. இ***ங்***கு வினியோகவிதியில் சாத்யம் யாகமும் அதற்கு சாதனமான அ***ங்***க***ங்***கள் அதில் உபயோகிக்கபடும் பொருட்களும் ஆகும். வினியோக விதியில் அதனால் அ***ங்***கத்தை நிச்சயிக்க வேறு வாக்கிய***ங்***களின் உதவி தேவையில்லை.

சில இட***ங்***களில் மூலச்சொல்லின் பொருள் ஆசிரயமாகவும் ஆகிறது. **தத்னேந்திரிய காமாய ஜுஹுயாத்** என்கிற வாக்கியத்தில் தயிர் கொண்டு இந்திரிய***ங்***களின் பலத்தை அடைய வேண்டும் என்கிற இடத்தில் சாத்யம் இந்திரிய பலமே ஆகிறது. அந்த இந்திரிய பலத்தை அடைய ஹோமமே சாதனமாகிறது, உணவாக உட்கொள்ளவேண்டும் என்பது தர்மமும் அல்ல, அது தானே அறியப்படுவதால் வேதம் அதனை கூறுவதும் முறையில்லை என்பதால். தயிர் கொண்டு யாகம் செய்து அதன் ஆஸ்ரயித்தினால் (அதன் மூலம்) இந்திரிய பலம் என்ற பலனை அடையவேண்டும் என்பது பொருளாகின்றது. தயிர் என்கிற கரணத்தன்மை எதில் உள்ளது என்கிற கேள்வி எழும்போது அது மூலசொல்லான ஹோமத்திலேயே ஆச்ரயமாக உள்ளது என்று ஆவதால், இ***ங்***கு சாத்யமாக இல்லாமல் ஆச்ரயமாக பொருள்படுகின்றது.

## விதியின் ஷ்ருதி முதலிய ஆறு பிரமாண***ங்***கள்

*एतस्य विधेः सहकारिभूतानि षट्प्रमाणानि–श्रुति–लिङ्ग–वाक्य–प्रकरण–स्थान समाख्यारूपाणि। एतत्सहकृतेनानेन विधिनाङ्त्वं परोदेशप्रवृत्तकृतिसाध्यत्वरूपं पारार्थ्यापरपर्यायं ज्ञाप्यते।*

இந்த வினியோக விதியானது ஒரு கார்யத்தின் அ***ங்***கத்தினை பற்றிய போதத்தினை தருவது என்பது தெளிவாக்கப்பட்ட பின்பு, ஒரு வாக்கியத்தில் குணம், திரவியம் முதலியவை ஹோமம் முதலியவைக்கு அ***ங்***கமாவது அந்த வாக்கியத்தினாலேயே தானே நிரூபனமாகும் ஒரு விஷயமாக உள்ளது. இந்த நிலையில் அது எந்த ஹோமத்திற்கு அ***ங்***கம் என்பதை தீர்மானிக்க ஷ்ருதி முதலிய பிரமாணம் தேவைப்படுகின்றது. வினியோக விதிக்கு உதவியாக இருக்கும் இந்த பிரமாண***ங்***கள் ஆறு வகைப்படும். அவை ஷ்ருதி, லி***ங்***கம்,

வாக்யம், பிரகரணம், ஸ்தானம் மற்றும் சமாக்யம் ஆகும். இவைகளின் உதவியினால் வினியோக விதியின் அ***ங்***கதன்மையின் ***ஞா***னம் உண்டாகின்றது.

இந்த அ***ங்***கத்வம் அதாவது அ***ங்***கதன்மை என்றால் என்ன என்பது மூலத்திலேயே விளக்கப்பட்டுள்ளது. **பரோத்தேஷ ப்ரவ்ருத்த க்ருதி வ்யாப்யரூபம்** என்பது இதன் லக்ஷணம். பர என்றால் மேன்மையான அதாவது சுவர்கம் முதலிய பலன்கள், என்றோ அல்லது தர்ஷபூர்ணமாசம் போன்ற யாகமான சாதனமோ இல்லை, தன்னைவிட வேறான ஒன்றை அடையவேண்டும் என்ற உத்தேசத்துடன் முயற்ச்சியில் ஈடுபடும் ஒரு புருஷனின் செயலினால் (வியாபாரம்) உண்டாகக்கூடியது. தயிர், பால் முதலிய திரவிய அ***ங்***கம், வ்ரிஹி முதலியவைகளில் திரவிய சம்ஸ்காரத்தினை வேண்டி கூறப்பட்ட ப்ரோக்ஷணம் முதலிய அ***ங்***கம். இந்த அ***ங்***கம் என்பது மற்றவைகளின் பொருட்டு உள்ளவை என்பதை குறிக்கிறதாக உள்ளது. அதாவது, இவை தானே முக்கியமாக இல்லாமல் எதற்கு வேண்டி கூறபட்டதோ அது முக்கியமாக இருப்பது. இனி இந்த அ***ங்***கத்தினை பற்றிய அறிவை நமக்கு உண்டாக உதவியாக இருக்கும் பிரமாண***ங்***களை ஒவ்வொன்றாக காண்போம்.

## ஷ்ருதி

*तत्र निरपेक्षो रवः श्रुतिः। सा च त्रिविधा–विधात्री, अभिधात्री, विनियोगक्री च। तत्राद्या लिङाद्यात्मिका। द्वितीया ब्रीह्यादिश्रुतिः। यस्य च शब्दस्य श्रवणादेव संबन्धः प्रतीयते सा विनियोक्री।*

ஷ்ருதியின் லக்ஷணம் **நிரபேக்ஷோ ரவ:** என்பது நிரபேக்ஷா - வேறு எதையும் எதிர் பார்க்காது உள்ள ரவ: - சப்தம். எந்த சப்தம் ( சொல் ) வேறு மற்றொன்றையும் எதிர்பார்க்மல் அ***ங்***கத்தன்மையை போதிக்கின்றதோ அது ஷ்ருதி எனப்படுகிறது. வேறு மற்றொன்று என்று இ***ங்***கு கூறப்பட்டது வேறு பிரமாண***ங்***கள் குறிக்கும் இந்த ஷ்ருதி வேறு பிரமாண***ங்***களை எதிர் நோக்கத்தால் அது பலமுள்ளதாகவும், லி***ங்***கம் முதலியவை துர்பலமானதாகவும் உள்ளது. இந்த ஷ்ருதி பிதமாணமானது மூன்று வகைப்படுகிறது. விதாத்ரீ, அபிதாத்ரீ மற்றும் வினியோக்த்ரீ என்று விதியினை செய்யும்
சொல் விதாத்ரீ ஷ்ருதியாகும். யஜேத, ஜுஹோதி முதலியவைகளில் உள்ள லி***ங்*** முதலிய வினைவேற்றுமையே இந்த விதாத்ரீ ஷ்ருதியாகும். இவை மூலம் நமக்கு ஜ்யோதிஷ்டோமம், அக்னிஹோத்ரம் முதலிய கர்ம***ங்***களுக்குள்ள சம்பந்தம் நேரடியாகவே அறியப்படுகின்றது. லி***ங்*** முதலிய என்று கூறப்பட்டது. லேட் முதலிய வேற்றுமைகளையும் குறிக்கும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். பெயரை மட்டும் குறிக்கும் சொல்லானது அபிதாத்ரீ ஷ்ருதி எனப்படுகின்றது. **வ்ரீஹீன் ஆவஹந்தீ** , **வ்ரீஹீன் ப்ரோக்ஷதி** முதலிய வாக்கிய***ங்***களில் வரும்

விரீஹி (நெல்) என்னும் சொல். எந்த விதானமும் செய்யாமல் வெறும் பெயர் மாத்திரம் கூறுவது.

*सापि त्रिविधा– विभक्तिरूपा, एकाभिधानरूपा, एकपदरूपा चेति। तत्र विभक्तिश्रुत्या अङत्वं यथा–व्रीहिभिर्यजेत' इति तृतीयाश्रुत्या व्रीहीणां यागाङगत्वम्। तदपि पुरोडाशप्रकृति तया। यथा पशोर्हदयादिरूपहविः प्रकृतितया यागाङगत्वम्।*

எந்த சொல்லை கேட்கும் மாத்திரத்திலேயே அ***ங்***கம் – அ***ங்***கி இவற்றின் தன்மையின் சம்பந்தம் நமக்கு புரிகிறதோ அது வினியோக்திரீ ஷ்ருதி ஆகும். இந்த வினியோக்திரீ ஷ்ருதியும் மூன்று வகைப்படுகின்றது. அவை விபக்தி ரூபம் , ஏகாபிதானரூபம் மற்றும் ஏகபத ரூபம்.

முதலில் விபக்திபேத்திற்கு விளக்கம் தரும் வாயிலாக **<u>வ்ரிஹிபிர் யஜேத</u>** (நெல்லை கொண்டு யாகம் செய்க) என்கிற மூன்றாம் வேற்றுமையுள்ள ஒரு வாக்கியத்தை கொண்டு அ***ங்***கத்தன்மை விளக்கபடுகிறது. இந்த வாக்கியம் தர்ஷபூர்ணமாசம் என்கிற யாகத்தின் பிரகரணத்தில் வருகிறது. **<u>வ்ரீஹிபி:</u>** என்பது மூன்றாம் வேற்றுமையானதால் ( விரீஹீ என்பதுடன் பிஸ் என்கிற மூன்றாம் வேற்றுமை சேர்வதால்), அதன் மூலம் நமக்கு வ்ரிஹீயை கொண்டு யாகத்தை பாவனை செய்ய வேண்டும் என்கிற பொருள் விளக்குவதாலும், யாகம் **<u>யஜதி</u>** என்கிற வாக்கியத்தினால் நமக்கு கிடைப்பதால் (தர்ஷபூர்ணமாஸோ முதலிய) எந்த திரவியத்தை கொண்டு செய்யவேண்டும் என்கிற கேள்வி உண்டாகும் போது வ்ரீஹி என்கிற பதில் இந்த வாக்கியத்தினால் கிடைப்பதால் இதன் அ***ங்***கத்தன்மை அறியப்படுகின்றது.

ஆனால், தர்ஷபூர்ணமாசத்தின் உத்பத்தி வாக்கியத்தில் **<u>அஷ்டகபாலம், ஏகாதஷகபாலம்</u>** (8, 11, கபாலம் என்பது மண் பாத்திரம்) புரோடாஷம் என்கிற திரவியம் உபயோகிக்க கூறுகிறது. அதனால் அதற்கு வ்ரீஹி அ***ங்***கமாக ஆக முடியாது என்கிற சந்தேகம் உண்டாகக்கூடும். புரோடாஷம் என்பது மாவு கொண்டு உண்டாக்கும் களி போன்றது. மாவு உண்டாக்க ஏதேனும் ஒரு தானியம் உபயோகிக்கவேண்டும் என்பதால் இ***ங்***கு நெல்லையே ( விரீஹி) உபயோகிக்க கூறுகின்றது. நெல்லை முதலில் நீர் தெளித்து சம்ஸ்காரம் செய்து, இடித்து உமி நீக்கி அந்த அரிசியை கொண்டு செய்கிற மாவு கொண்டு கபாலத்தில் உள்ள கொதிக்கும் நீரில் இட்டு களி போன்று செய்ய வேண்டும். நேரடியான அ***ங்***கமாக இல்லாமல் புரோடாஷம் என்கிற திரவியத்தை உண்டாக்குவதற்கு உபயோகிக்கப்படுவதால், இதுவும் அ***ங்***கத்தன்மையை அடைகிறது. புரோடாஷம் என்றால் புரம் – தேவதையின் முன்பு தாஷ்யம் – கொடுக்கப்படுகிறது. சமர்பிக்கப்படுகிறது என்று பொருள் சோமதேவதைக்காக செய்யப்படும் யாகத்தில் பசு திரவியமாக **<u>அக்னீஷோமீயம் பஷீமாலபேத்</u>** (அக்னீஷோம யாகத்தில் பசுவை திலவியமாகவும் ) என்பதில் பசு நேரடியாக அ***ங்***கமாகின்றது. ஆனால்

இ*ங்*கோ **ஹ்ருதயஸ்யாக்ரே அவத்யதி அந ஜிஹ்வாயா அத வக்ஷஸ:** (இதயத்தை அருக்கிறார்கள் பிறகு நாக்கினை பிறகு....) என்கிற வாக்கியத்தில் பசுவின் பாக*ங்*களே குறிப்பிடபட்டுள்ளது. அதனால் அவை யாகத்தின் அ*ங்*கமாகிறது என்பதாலேயே பசுவும் அ*ங்*கமாகிறது. அது போல இ*ங்*கும் புரோடாஷமே அ*ங்*கமாக ஆனால் அதை உண்டாக்க உபயோகமாகும் நெல்லும் அ*ங்*கமாகிறது.

இ*ங்*கு ஒரு விசாரம். அக்னிஷோம தேவதைக்கு பசு, அக்னி தேவதைக்கு புரோடாஷம் என்று நேரடியாக திரவியம் தேவதையோடு சம்பந்தம் உள்ளபோது பசு நேரடியாக திரவியம் ஆகாமல் அதன் பாக*ங்*களை திரவியம் ஆக்க வேண்டியது என்ன அவசியம் என்றால், புரோடாஷத்தில் நடுவில் துண்டிக்க, மேல்பகுதியை துண்டிக்க என்று நடு, மேல் முதலிய பகுதிகளே யாகத்தில் உபயோகிக்கபடும் ஹவியாக உள்ளதோ அதுபோல இதயம் முதலிய பாக*ங்*கள் பசுவின் ஹவியாக உள்ளதால் பசு மூலமாகவும் அவற்றின பாகம் யாகத்தின் அ*ங்*கமாக ஏற்கபடுகின்றது.

*'अरूणया एकहायन्या गवा सोमं क्रीणाति' इत्यस्मिन्वाक्ये अरूण्यस्यापि तृतीयाश्रुत्या क्रयाङत्वम्। तदपि गोरूपद्रव्यपरिच्छेदद्वारा न तु साक्षात्, अमूर्तत्वात्।*

விபக்தி ஷ்ருதி கொண்டு திரவியத்தை யாகத்தின் அ*ங்*கமாக நிரூபிக்கபட்டது. அதுபோல, திரவியத்தில் உண்டாகும் குண*ங்*களும் யாகத்தின் அ*ங்*கம் எப்படி ஆகிறது என்பதைகாட்ட **அருணயா பி*ங்*காக்ஷியா ஏகாஹன்யா கவா சோமம் க்ரீணாதி** ( சிவப்பு நிறமுடைய ம*ங்*சள் கண்சார்புடைய ஒரு வயதான மாடு கொண்டு சோமம் வா*ங்*க வேண்டும்.) என்கிற வாக்கியத்தில் மூன்றாம் வேற்றுமையிலுள்ள சிவப்பு (அருணயா) என்பது அ*ங்*கமாகிறது. திடமான பொருளாக இல்லாத சிவப்பு முதலிய எப்படி சோமத்தை ( சோம கொடியை ) வா*ங்*க அ*ங்*கமாக கூடும் என்ற சந்தேகம் வரலாம், இ*ங்*கு சிவப்பு என்பது ஒருவயதுடைய மாட்டிற்கு விசேஷனமாக உள்ளது. சோமத்தை வா*ங்*க சிவப்பு நேரடியாக உதவாமல் போனாலும் சிவப்பு நிறமுடைய மாடு என்பதின் மூலம் உபயோகமாக இருக்கிறது.

*व्रीहीन्प्रोक्षति इति प्रोक्षणस्य व्रीह्यङत्वं द्वितीयाश्रुत्या। तच्च प्रोक्षणं न व्रीहिस्वरूपार्थं, तस्य तेन विनापि उपपत्तेः । किंतु पूर्वसाधनत्वपयुक्तम्। व्रीहिनप्रोक्ष्य यागानुष्ठानेऽपूर्वानुपपत्तेः। एवं सूर्वेष्वपूर्वप्रयुक्तमङत्वं बोध्यम्।*

திரவியம் மற்றும் குணம் அ*ங்*கமாக எப்படி எடுக்கப்படுகிறது என்பதை மூன்றாம் வேற்றுமை கொண்டு நிரூபித்தபின்பு, இரண்டாம் வேற்றுமை கொண்டு கிரியா ( செயல் ) அ*ங்*கமாவதை உதாரணத்தோடு காட்டபடுகிறது. **வ்ரீஹீன் ப்ரோக்ஷதி** ப்ரோக்ஷணம் என்றால் மந்திரத்தினை உச்சரித்து தண்ணீர் தெளிப்பது.

அப்படி விரீஹியின் மேல் செய்வதால் அது சம்ஸ்கரிக்கபடுகிறது. நெல்லின் மேல் தெளித்தல் என்கிற கிரியா செய்யபடுவதால் அந்த தெளித்தல் என்கிற செயல் நெல்லின் அ***ங்***கமாகின்றது. தண்ணீர் தெளிப்பதால் நெல்லில் எந்த மாற்றமும் உண்டாகபோவதில்லை, நெல் முன்பு போலவே நெல்லாகவே இருப்பதால் தெளித்தல் (ப்ரோக்ஷணம்) எதற்காக நெல்தன்மை அடைய என்றால் அது முன்பே நெல்லில் உள்ளதால் அப்படி ஏற்பது சரியல்ல, அதனால் நெல் தன்மை அடைய பிரோக்ஷணத்தில் பிரயோஜனம் இல்லை ஆனால் அது அபூர்வத்தை உண்டு செய்யவே என்று ஏற்கபடுகிறது. அப்படி ப்ரோக்ஷ்ணம் செய்யாத நெல் (சம்ஸ்கரிக்கபடாத) யாகத்தில் உபயோகிக்க உகந்ததல்ல. எ***ங்***கெல்லாம் கூறபட்ட அ***ங்***கத்தில் எந்த புதுமையும் இல்லையோ அ***ங்***கு அவை அபூர்வத்திற்காக என்று எடுக்க வேண்டும் நெல்லில் ப்ரோக்ஷணம் செய்வது, உமி நீக்க இடிப்பது போன்ற எல்லாம் அபூர்வத்திற்காக மட்டுமே கூறபட்டது.

*एवं 'इमामगृभ्णन्रशनामृतस्येत्यश्वाभिधानीमाधत्त' इत्यत्र द्वितीयाश्रुत्या मन्त्रस्याश्वाभिधान्यङंत्वम् ।*

**விரீஹின் ப்ரோக்ஷதி** போன்ற இரண்டாம் வேற்றுமை உதாரணம் மற்றொன்று, **இமாம் க்ருபணன் ரஷனாம்ருதஸ்ய இத்யஷ்வாபிதானீமாதத்த** (பலனுடன் சம்பந்முடைய இந்த சத்யமாகிய கயிரினை பிடித்து, இந்த மந்திரத்தினால் குதிரையின் மூக்கு கயிரினை பிடிக்கின்றார்) இ***ங்***கு அக்னிசயனம் செய்யவும் ( யாக நெருப்பை மற்றவரிடம் இருந்து ஏற்று அதை பாதுகாப்பது. ) ஒருவர் ஒருவருடம் வரை உகா என்னும் மணகலயத்தில் வைக்கப்பட்ட நெருப்பை ஒரு மு***ஞ்***சம் புல்லினால் செய்த கயிரினைக் கொண்டு கழுத்தில் தொ***ங்***க விட்டு, பின்பு யாகத்தை செய்ய விதிக்கப்பட்டுள்ளது. இ***ங்***கு இந்த பானை செய்ய மண் கொண்டு வர குதிரையை மண் எடுக்கும் இடத்தில் விட்டு அந்த இடத்தை சம்ஸ்காரம் செய்து, கழுதையின் மேல் மண்ணை வைத்து கொண்டு வரும்பொழுது **இமாம் அக்குப்ணன் ரஷணாம்** என்ற மந்திரத்தை படித்து குதிரையின் கழுத்தில் உள்ள மூக்கு கயிரினை பிடிப்பதால் எந்த ஒரு கண்கூடான மாற்றமும் இல்லாததால் அது ஆபூர்வம் உண்டாக்கும் பொருட்டு என்று கூறபடுகிறது. இல்லையென்றால் அது வியர்த்மாக போகும் ( எந்த வாக்கியமும் வியர்தமானது என்று மீமாம்ஸா சித்தாந்திகள் ஏற்பதில்லை என்று முன்பே கூறபட்டுள்ளது.) குதிரையின் மூக்கு கயிரை பிடிப்பதில் இந்த மந்தரம் அ***ங்***கமாகிறது. ஏனென்றால் அபிதானி (மூக்கு கயிறு) என்பது இரண்டாம் வேற்றுமையில் உள்ளது.

*'यदाहवनीये जुहोति' इत्याहवनीयस्य होमाङंगत्वं सप्तमीश्रुत्या। एमवमन्योऽपि विभक्तिश्रुत्या विनियोगो ज्ञेयः।*

இரண்டாம் மற்றும் மூன்றாம் வேற்றுமைக்கு உதாரணம் தந்த பின்பு நான்கு, ஐந்து மற்றும் ஆறாம் வேற்றுமைவிட்டு ஏழாம் வேற்றுமைக்கு உதாரணம் தரப்படுகின்றது. **யதாவஹனீயே ஜிஹோதி** (எவர் ஆவஹனீய அக்னியில் ஹோமம் செய்கிறாரோ) என்ற வாக்கியத்தில் ஆவஹனீயே என்பது ஏழாம் வேற்றுமை குறிக்கும் ஆதாரத்தை அதாவது கர்மம் நடக்கும் இடத்தை குறிக்கிறது. இ***ங்***கு ஹோமத்திற்கு ஏழாம் வேற்றுமையில் உள்ள ஆவஹனீயம் என்பது அ***ங்***கத்தன்மையை போதிக்கின்றது.

ஆவஹனீயம் என்பது மூன்றக்னிகளான தக்ஷிணம், ஆவஹனீயம், மற்றும் கார்ஹபத்யம் இவற்றில் ஒன்றாகும். வைக்கப்படும் இடத்தினாலும் செய்யபடும் கர்மத்தினாலும் இவற்றின் பெயர் உண்டாகின்றது. **மைத்ராவருணாய தண்டம் ப்ரயச்சதி** என்று மைத்ரா வருணனுக்காக என்ற நாலாம் வேற்றுமை கொண்டு தண்டம் தருவது என்பது அ***ங்***கம் ஆகிறது.

**யஜமானஸ்ய யாஜ்யா** என்பதில் ஆறாம் வேற்றுமையான யஜமானஸ்ய (யஜமானனின்) என்பது யாஜ்யாவின் அ***ங்***கத்தன்மையை போதிக்கின்றது.

விபக்தி ஷ்ருதியினை இதுபோல எல்லா இட***ங்***களிலும் அறிய வேண்டும்.

விபக்திரூபமான ஷ்ருதியை விளக்கிய பின்பு இப்பொழுது ஏகாபிதானரூப ஷ்ருதி விளக்கப்படுகின்றது. மூலத்தில் சமானாபிதானம் என்று கூறப்பட்டது ஏகாபிதானத்தையே இவை இரண்டும் ஒரு பொருள் தரும் பலசொல் வகை. ஏகம் என்றால் ஒன்று, சமானம் என்றால் பலதில் ஒன்றுபோல இருப்பது, அபிதானம் என்றால் எதனால் குறிக்கபடுகிறதோ, அதாவது சொல் என்று பொருள். இந்த வகை ஷ்ருதியை விளக்க **பஷுனா யஜேத** ( பசுவை கொண்டு யாகம் செய்க) என்கிற வாக்கியம் உபயோகிக்கப்பட்டுள்ளது. பஷுனா என்பது மூன்றாம் வேற்றுமையை குறிக்கும் சொல். இதனால் பசு என்பதுடன் சேர்ந்த மூன்றாம் வேற்றுமையான **டா** என்பது கொண்டு அது கரணகாரகம் அதாவது ஒரு கிரியையோடு அதற்கு உள்ள சம்பந்தம் போதிக்கப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் அது ஒருமை மற்றும் ஆண்பாலையும் குறிக்கும் சொல்லாக உள்ளது. இதனால் நமக்கு ஒரு ஆண் பசுவை கொண்டு யாகம் செய்யவேண்டும் என்கிற பொருள் விள***ங்***குகின்றது. இ***ங்***கு வி***ங்***கத்தன்மை மற்றும் பாலும், ஒருமை முதலியவையும் ஒரே வேற்றுமை கொண்டு அறியப்படுவதால் ஏகாபிதான ஷ்ருதி ஆகிறது. அதுபோல, யஜேத என்ற வினைசொல்லும் யஜஎன்னும் வேர் சொல்லுடன் **த** என்கிற வினை எச்சத்தின் மூலம் அதன் ஆக்யாயதன்மை, லி***ங்***கத்தன்மை, எண்ணிக்கை, காலம் மற்றும் புருஷத் தன்மை முதலிய. இதில் ஆக்யாதத்வம் (குறிப்பு பொருள்) மூலம் ஆர்த்தி பாவனையும், லி***ங்***கத் தன்மை மூலம் ஷாப்தி பாவனையின் சாத்யம். இதுப்போல முக்கியமான ஆக்யாதன்மைக்கு மற்ற லி***ங்***கத்தன்மை முதலியவை அ***ங்***கம்,

இ*ங்*கு **த** மூலம் அது தன்மை மற்றும் ஒருமையினை குறிப்பது என்பது தெளிவாகிறது. இ*ங்*கு ஒருமை மற்றும் ஆர்த்தி பாவனையை குறிப்பதாக வினைஎச்சம் இருப்பதால் எண்ணிக்கை ஆர்த்தி பாவனையை குறிப்பதற்கு உதவுவதாக உள்ளது. என்பது ஏகாபிதான ஷ்ருதியினால் நிரூபனமாகின்றது.

மூன்றாவதான ஏகபத ஷ்ருதி, இ*ங்*கு தரப்பட்ட யஜேத என்பதின் பகுதியானதின் மூலம் யாகத்தையும், விகுதியான (வினை எச்சமான) **த** வின் மூலம் எண்ணிக்கையையும் குறிக்கின்றது. அதனால் எண்ணிக்கை யாகத்தின் அ*ங்*கமாகிறது. இதனால் எண்ணிக்கை யாகத்தின் அ*ங்*கமாகவும், ஏகாபிதான ஷ்ருதி கொண்டு பாவனையின் அ*ங்*கமாகவும் ஆகின்றது.

பதம் என்பது சமஸ்கிருத இலக்கணத்தில், ஒரு சொல்லானது ஒரு வேற்றுமையுடன் சேர்வதால் ( பெயர் அல்லது வினை வேற்றுமை) உண்டாகும் உபயோகிக்க ( எழுத்திலோ, பேச்சிலோ) தகுந்த சொல்லாகும்,

*न चामूर्तायास्तस्याः कथं भावनाङ्गत्वमिति वाच्यम् । कर्तृपरिच्छेदद्वारा तदुपपत्तेः । कर्ता चाक्षेपलभ्यः ।*

அருணயா என்பதில் குணம் எப்படியாக அ*ங்*கம் ஆகியது என்பதுபோல இ*ங்*கும் எண்ணிக்கை ஒரு திடமான பொருளாக இல்லாததால் யாகத்தின் அ*ங்*கமாக முடியும் என்கிற கேள்வி எழக்கூடும். ஆனால் எண்ணிக்கை (ச*ங்*க்யா) நேரடியாக ஒரு கிரியைக்கு உதவ முடியாமல் போனாலும், பாவனையுடன் உள்ள சம்பந்தம் கொண்டு உதவியாக இருக்கும். இதனால் ஒன்று என்கிற எண்ணிக்கை கூடிய (ஒருவன்) கர்த்தா யாகத்தை செய்க என்கிற பொருள் உண்டாகும்.

## பாவனாவின் ஆக்யாக வாச்சய தன்மை

*आख्यातेन हि भावनोच्यते । सा च कर्तारं विनाऽनुपपन्नेति तमाक्षिपति । सेयं श्रुतिर्लिङ्गादिभ्यः प्रबला । लिङ्गादिषु न प्रत्यक्षो विनियोजकः शब्दोऽस्ति किंतु कल्प्यः। यावच्च तैर्विनियोजकशब्दः कल्प्यते तावत्प्रत्यक्षया श्रुत्या विनियोगस्य कृतत्वेन तेषां कल्पकत्वशक्तेर्व्यहतत्वात्। अत एवैन्द्या लिङ्गान्नेन्द्रोपस्थानार्थत्वम् । किंतु ऐन्द्या गार्हत्यपत्यमुपतिष्ठते इत्यत्र गार्हपत्यमिति द्वितीयाश्रुत्या गार्हपत्योपस्थानार्थत्वम्।*

ஆனால், மீமாம்ஸாவாதிகள் ஆக்யாதம் என்றால் பாவனா என்று பொருள் கொள்ளும்போது கர்த்தா எ*ங்*கிருந்து கிடைக்கின்றான் என்கிற கேள்வி எழக்கூடும். ஆனால், ஆக்யாதம் என்பது பாவனா ரூபமாக இருக்கின்ற போது, அந்த பாவனா என்பது பிரவிருத்தி ரூபமாக இருக்கும். இந்த பிரவிருத்தியானது

சைத்தன்யம் கூடிய ஒருவன் இல்லாமல் நடக்காது என்பதால் அது ஒரு கர்த்தாவை ( பிரவிருத்தி செய்பவனை ) எதிர்பார்க்கிறது. அப்படி ஒரு எதிர்ப்பார்பினால் கர்த்தாவானவன் ஒருவன் உண்டு என்று நமக்கு கிடைகின்றது.

முன்பே ஷ்ருதிரூப பிரமாணம் மற்ற பிரமாண***ங்***களை காட்டிலும் பிரபலம் என்றும் (சக்தி வாய்ந்தது) மற்றவை அதன் முன்பு உள்ளதை காட்டிலும் சக்தி அற்றதாகவும், பின்பு உள்ளதை காட்டிலும் சக்தி உள்ளதாகவும் கூறபட்டுள்ளது. அதற்கு என்ன காரணம் இருக்கமுடியும் என்றால் , லி***ங்***கம் முதலிய பிரமாண***ங்***களில் வினியோகம் செய்யும் சப்தமானது ( சொல்லானது) ஷ்ருதியில் உள்ளது போல நேரடியாக தரப்படாததினால் அது அந்த இட***ங்***களில் கற்பனை செய்யபட வேண்டியதாகிறது. ஆனால் ஷ்ருதியில் நேரடியாக தரப்பட்டதால் அது சக்திவாய்ந்ததாகின்றது. இதுபோல எத்தனை குறைவாக கற்பனை செய்வதின் அவசியம் இருக்கிறதோ அத்தனை சக்தி வாய்ந்ததாக அந்த பிரமாணம் இருக்கிறது. காரணம், ஒரு பிரமாணத்தின் வினியோகத்தை நாம் கற்பனை செய்ய முற்படும் போது, ஷ்ருதியில் அது நேரடியாகவே இருப்பதால் அது அதன் வேலையை செய்து முடித்ததாகின்றது.

இதை உதாரணம் மூலம் காண்போம். லி***ங்***கம் பிரமாணம் ஒரு வாக்கியத்தில் பிரயோகம் செய்யவேண்டும் என்றால், மந்திரத்தின் பொருள், ஒரு பொருள் அதன் சொல்லுடன் உள்ள சம்பந்தம், இந்த மந்திரத்தினால் இது நடக்கவேண்டும் என்று கூறும் ஒரு ஷ்ருதி கற்பனை செய்யபடவேண்டும். அதன் பிரயோகமும் இவை நான்கின் அறிவு இருந்தால் மட்டுமே ஒரு வாக்கியத்தை லி***ங்***க பிரமாணம் கொண்டு நிரூபிக்க முடியும். ஆனால் இந்திரன் சம்பந்தமான ரிசையில் (ரிசை என்றால் ரிக் வேதத்தில் உள்ள ஒரு மந்திரம்) இதற்கு அவசியம் இல்லாமல் இருக்கின்றது. ஏனென்றால் வாக்கியம் நேரடியாகவே இந்திரனை சம்பந்தபடுத்தி இருப்பதால். அதாவது. **ஐந்திரயா கார்ஹபத்யமுபதிஷ்டதே** (இந்திரன் சம்பந்தபட்ட ரிசை கொண்டு கார்ஹபத்தியத்தை செய்வாயாக) என்று நேரடியாகவே கார்ஹபத்யம் என்னும் சொல்லில் உள்ள இரண்டாம் வேற்றுமை மூலம், இந்திரன் சம்பந்தபட்ட ரிசை கார்ஹபத்தியத்தின் அ***ங்***கமாகின்றது என்பதை காட்டுகின்றது.

இ***ங்***கு மந்திரத்தின் பொருள், அதற்கு கர்மத்துடன் உள்ள சம்பந்தம் என்கிற இரண்டு விஷய***ங்***கள் தெரிந்தால் மட்டும் போதுமானதாக உள்ளதால், மற்றவையில் உள்ள (லி***ங்***கத்திற்கு இன்னும் இரண்டு அதிகமாக) கற்பனை செய்யவேண்டியதலிருந்து நாம் காக்கப்படுகின்றோம். அவை கற்பனை செய்யபடும் முன்பே காரியமானது நடந்தேரிவிடுகின்றது.

## **லிங்கப் பிரமாணம்**

*शब्दसामर्थ्य लिङ्गम। यथाहुः– 'सामर्थ्य सर्वशब्दानां लिङ्गमित्यभिधीयते' इति। सामर्थ्य रुढिरेव। तेन समांख्यातोऽस्या भेदः। यौगिकशब्दसमाख्यातो। रुढयात्मकलिङ्गशब्दस्य भिन्नत्वात्। तेन 'बर्हिर्देवसदनं दामि' इति मन्त्रस्य कुशलवनाङ्गत्वं न तुलपादिलवनाङ्गत्वम्, तस्य बर्हिर्दामिति लिङ्गात्तल्लवनं प्रकाशयितुं समर्थत्वात्। एवमन्यत्रापि लिङ्गाद्विनियोगो द्रष्टव्यः तदिदं लिङ्गं वाक्यादिभ्यो बलवत्। अतएव 'स्योनं ते सदनं कृणोमि' इति मंत्रस्य कृणोमिती लिङ्गात् न तु वाक्यात्।*

லிங்கத்திற்கு லக்ஷணம் தரப்படுகின்றது **ஷப்த சாமர்த்யம்** என்று. இது வேறு பிரமாணமான வாக்கியம் கொண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. **சாமர்த்யம் சர்வஷப்தானாம் லிங்கமித்யபிதீயதே** (எல்லா சொற்களிற்கும் உள்ள சாமர்த்தியம் லிங்கம் என்று கூறபடுகின்றது) இங்கு சாமர்த்யம் என்கிற சொல் சக்தி என்கிற பொருளில் உபயோகிக்கபட்டுள்ளது. முன்பே கூறபட்டுள்ளது ஒரு சொல் இரண்டு வகை சக்திகளை உடையது சொல்லில் மற்றும் அதன் பொருளில் என்று. இந்த பொருளில் உள்ள சக்தியேன்பது பல பரம்பரையாக ஒரு சொல்லுடன் ஒரு பொருளுக்கு உள்ள தொடர்பை குறிப்பிடுவது உதாரணத்திற்கு, பங்கஜம் என்கிற சொல், இதற்கு தாமரை என்கிற பொருள் நாம் ஏற்பதுண்டு. இந்த சொல்லிற்கும் அதன் பொருளிற்கும் நேரடியான சம்பந்தம் முக்கிய அர்த்தம் என்று கூறப்படுகின்றது. இதையே ரூடி அர்த்தம் என்றும் கூறுவதுண்டு. ஆனால், பங்கம் என்றால் சேற், சகதி, ஜ என்றால் உண்டான சேற்றினில் உண்டானது என்பது இதன் யௌகிகமான பொருள். இதனால், சேற்றில் உள்ள மற்ற தவளை முதலியவைகளும் பங்கஜமாகிறது. இது கௌன அர்த்தமாக (முக்கியமற்ற, இரண்டாந்தரமான) ஏற்கபடுகின்றது. இந்த முக்கிய அர்த்தத்தினால் நாம் அறியும் பொருளை நமக்கு காட்டும் சொல்லின் சக்தியை அபிதா சக்தி என்று மீமாம்ஸையில் கூறுகின்றோம்.

**பர்ஹிர்தேவசதனம் தாமி** (தேவர்களின் இருப்பு இடமான தர்பையை அறுக்கிறேன்) இதில் பர்ஹி என்கிற சொல்லிற்கு தர்பை என்கிற பொருளும் உலபம் (தர்பையை ஒத்த ஒரு புல் வகை) என்கிற பொருளும் உண்டு. இங்கு முக்கிய பொருளான தர்பையே எடுகப்படுகின்றது. தாமி என்பதற்கு அறுப்பது என்கிற முக்கிய பொருளும் உப்பு முதலிய பொருளும் ஏற்கப்படுகின்றது. இந்த மந்திரம் தர்ஷபௌர்ணமாசத்தின் பிரகரணத்தில் உள்ளது. அதில் இந்த மந்திரத்தை கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பது தரபடாததால் லிங்கபிரமாணத்தை கொண்டு இந்த மந்திரத்தினால் தர்பையை அறுங்கள் என்கிற ஒரு ஷ்ருதி கற்பனை செய்யப்பட்டு இந்த மந்திரம் பிரயோகம் செய்யப்படுகின்றது.

மற்ற இட***ங்***களிலும் யௌகிகபொருளான முக்கியமற்ற பொருளை கொள்ளாமல், ரூடி பொருளான முக்கியபொருளையே கொள்ளவேண்டும். தர்ஷபௌர்ணமாச யாகத்தில் **ஸ்யோனம்தே சதனம் க்ருணோமி** (புரோடாஷமே உனக்கு நல்ல இடத்தை செய்கிறேன்) என்கிற மந்திரம். இந்த மந்திரத்திற்கு வினியோகம் ( பிரயோகம் ) செய்யும் ஷ்ருதி வாக்கியம் இல்லாததால் லி***ங்***கம் கொண்டு வினியோகம் செய்யபடுகின்றது. இ***ங்***கு முழு மந்திரத்தினால் புரோடாஷம் வைப்பதற்கு ஒரு இடம் செய்து அதை வைக்கும் பொருள்பட உள்ளதால். இந்த மந்திரத்தில் சதனம் ( இருப்பிடம் ) க்ருணோமி (செய்கிறேன்) என்கிற பொருள் கொண்டு சதனம் செய்யவேண்டும் என்கிற ஷ்ருதி கற்பனை செய்யபட்டு இது வினியோகம் செய்யபடுகிறது என்பதால் இ***ங்***கு லி***ங்***கபிரமாணம் கொண்டே இது தீர்மானிக்கப்படுகிறது வாக்கிய பிரமாணம் கொண்டல்ல.

## வாக்கிய லக்ஷணம்

*समभिव्यावहारो वाक्यम्। समभिव्याहारश्च साध्यत्वादिवाचकद्वितीयाद्यभावेऽपि वस्तुतः शेषशेषिवाचकपदयोः सहोच्चारणम्। यथा 'यस्य पर्णमयी जुहूर्भवति न स पाप ँ श्लोकं शृणोति'। अत्र पर्णताजुह्वोः समभिव्याहारदेव पर्णताया जुह्वङ्गत्वम्। न चानर्थक्यम्, अन्याथापि जुह्वाः सिद्धत्वादिति वाच्यम्। 'जुहू' शब्देन तत्साध्यापूर्वलक्षणात्। तथा च वाक्यर्थः पर्णतयावत्तहविर्धारणद्वारा जुह्वपूर्वं भावयेदिति। एवं च पर्णतया यदि जुहूः क्रियते तदैव तत्साध्यमपूर्वं भवति, नान्यथेति गम्यत इति न पर्णताया वैयर्थ्यम्। अवत्तहविर्धारणद्वारेति चावश्यं वक्तर्व्यम् अन्यथा स्रुवादिष्वपि पर्णतापत्तेः सेयं पर्णता अनारभ्याधीतापि सर्वप्रकृतिष्वेवान्वेति न विकृतिषु। तत्र चोदकेनापि तत्प्राप्तिसंभवात्पौनरूक्त्यापत्तेः।*

ஷ்ருதி, லி***ங்***கத்தை தொடர்ந்து மூன்றாவதாக வரும் பிரமாணமான வாக்கியம் நிரூபிக்கப்படுகின்றது. அதன் லக்ஷணம் **ஸமபிவ்யாஹாரோ வாக்யம்** என்பது, சமபிவ்யாஹரம் என்றால் என்ன என்பது மூலத்திலேயே முடிவு செய்யப்படுகிறது. சாத்யத்வம் முதலியவைகளை குறிக்கும் இரண்டாம் வேற்றுமை முதலியவை இல்லாதபோதும் அ***ங்***கமும் அதன் அ***ங்***கியும் குறிக்கும் சொற்கள் ( பத***ங்***கள் ). ஒரே இடத்தில் உச்சாரணம் செய்யப்படுகிறதோ அது சமபிவ்யஹாரம். அந்த சம்பிவ்யாஹரம் வாக்கியம் என்கிற பிரமாணம் ஆகிறது. ஷ்ருதி பிரமாணத்தில் இரண்டாம் முதிலிய வேற்றுமை கொண்டு சாத்யத்தன்மை நிரூபித்து அ***ங்***க-அ***ங்***கி பாவத்தை புரிந்துகொண்டோம். அதுபோல, லி***ங்***க பிரமாணத்திலும் இரண்டாம் வேற்றுமை கொண்டு அ***ங்***கத்தன்மையை புரிந்துகொண்டோம். அப்படிபட்ட இரண்டாம் முதலிய வேற்றுமைகள் இல்லாமலும் இ***ங்***கு அ***ங்***கத்தன்மை நிரூபிக்கப்படுகிறது. இ***ங்***கு ஒரே

வேற்றுமையிலும், ஒரே லி***ங்***கமாகவும் கூடுமானவரையில் இருப்பதாலேயே அ***ங்***க-அ***ங்***கி தன்மை நிரூபிக்கப்படுகின்றது.

உதாரணத்திற்கு, **யஸ்ய பர்ணமயீ ஜுஹுர்பவதி ந ஸ பாபம் ஷ்லோகம் ஷ்ருணோதி** (எவருடைய ஜுஹு (பாத்திரம்) பர்ணதினாலானதோ (பலாஷம்) அவர் கெட்ட வார்த்தைகளை கேட்க மாட்டார்). இ***ங்***கு பர்ணமயீயும் ஜுஹுவும் ஒரே இடத்தில் உச்சரிக்கபட்டதால் (வந்துள்ளதால்) ஜுஹுபாத்திரம் பிரை வடிவத்தில் உள்ள மரத்தாலான ஒரு பாத்திரம், நெய் இதில் வேறு பாத்திரத்திலிருந்து சிறிது சிறிதாக நிரப்பப்படும். முன்பே கூறியுள்ளது போல, (நெல் நகத்தாலேயோ மற்ற முறைகளிலோ உரிக்க முடியும் போது அதை இடிக்க கூறும்போது) பாத்திரம் எந்த மரத்திலும் செய்ய முடியும்போது அது பலாஷ மரத்தினைக் கொண்டு செய்யவேண்டும் என்று கூறியிருப்பது அபூர்வத்திற்காக என்றறிய வேண்டும். மீமாம்ஸையில் **யஸ்ய பர்ணமயி ஜுஹுர்பவதி** என்பதற்கு பொருள் பலாஷத்தினால் நிர்மாணிக்கப்பட்ட பாத்திரத்தில் (ஜுஹு) நெய்யை வைத்து (அவத்த ஹவியை) ஜுஹுவின் அபூர்வத்தை அடைய***ங்***கள் என்று இதனால் ஜுஹு என்பது பாத்திரதிற்கு மாத்திரமான பெயர் இல்லை அது அபூர்வத்தினையும் குறிப்பது என்பது முடிவாகிறது. அவத்த ஹவி என்று நிச்சயம் கூறவேண்டியுள்ளது. இல்லையென்றால் பலாஷம் (பர்ணமயீ) என்பது மந்திரத்தின் அடுத்த வாக்கியத்தில் கொடுக்கபட்ட ஸ்ருவம் முதிலிய பாத்திரத்திற்கும் ஆகிவிடும். ஸ்ருவம் நெய்யை ஜுஹுவிலிருந்து எடுத்து நெருப்பில் இடுவதற்கு உபயோகப்படுத்தப்படும் ஒரு பாத்திரம் (கரண்டி போன்ற அமைப்பு உடையது). இந்த பாத்திரம் (ஸ்ருவம்) கரு***ங்***காலி (கதிரம்) கொண்டு செய்யபட வேண்டியது என்று மந்திரத்தில் கூறியிருப்பதால்.

இந்த விதி, அநாரப்யவிதியாக ஏற்கப்படுகின்றது. ஆரப்யவிதி என்றால் ஒரு யாகத்தை பற்றிய விவர***ங்***களை ஆரம்பித்த பிறகு அது சம்பந்தபட்ட விதிகளை தனித்தனியாக கூறுவது, அப்படி இல்லாமல் அதாவது யாகத்தைபற்றிய விளக்க***ங்***கள் ஆரம்பிக்காமலேயே விதிகளை கூறுவதானது அநாரப்யவிதி எனப்படுகிறது. இந்த அநாரப்யாதீத விதியையே சாமான்யவிதி என்றும் கூறப்படுகின்றது.

*यत्र समग्राङ्गोपदेशः सा प्रकृतिः यथा–दर्शपूर्णमासादिः, तत्प्रकरणे सर्वाङ्गपदेशः सा विकृति। यथा–सौर्यादिः। तत्र कतिपयाङ्गनामतिदेशेन प्राप्तत्वात्। अनारभ्यविधिः सामान्यविधिः। तदिदं वाक्यं प्रकरणादिभ्यो बलवत्। अत एव 'इन्द्राग्री इदं हविः' इत्यादेरेकवाक्यत्वात् दर्शाङ्गत्वं, न तु प्रकरणात् दर्शपूर्णमासाङ्गत्वम्।*

ஆனால், இப்படி சாமான்ய விதியாக ஏற்றால், விசேஷமாக ஒரு யாகத்திற்கு மாத்திரமல்லாது பொதுவாக இருப்பது என்று, பிரகிருதி யாகத்திலும்,

விகிருதி யாகத்திலும் இதன் விதி இரண்டு முற வரும் என்பதால் மீண்டும் மீண்டும் கூறுவது என்ற புணருக்த்யதோஷம் உண்டாகும் என்றால், அப்படியல்ல பிரகிருதி என்பது பிரதான யாகம் விகிருதி என்பது அதை போலவே செய்யப்படும் யாகம். **பிரகிருதிவத் விகிருதி கர்தவ்யா** (பிருகிருதியைப் போல விகிருதியும் செய்யபடவேண்டும்) என்று கூறப்பட்டுள்ளதால் பர்ணதா பிரகிருதியில் கிட்டியது போல விகிருதியிலும் கிடைக்கும் (அதாவது விதி பிராப்தியாகும்) என்பதால் இரண்டுமுறை தனித்தனியாக பர்ணமயீ என்கிற விதி பிராப்தியாகிறதால் தோஷம் உண்டாகும். ஆனால், இ*ங்*கு அப்படி ஏற்காமல் பிரகிருதி யாகத்தில் மாத்திரம் இந்த விதியை ஏற்று அதன் அதிதேசத்தை விகிருதியில் (ஏற்றிபார்பது) ஏற்கப்படவேண்டும் என்பது சித்தாந்தம்.

பிரகிருதி என்பது எ*ங்*கு எந்த யாகத்தில் திரவியம், தேவதை, பாத்திரம், காலம் முதலிய எல்லா அ*ங்*க*ங்*களும் தனித்தனியாக கூறப்பட்டுள்ளதோ அது பிரகிருதி எனப்படுகிறது. அக்னிஹோத்ரம், தர்ஷபூர்ணமாசம் முதலிய யாக*ங்*கள் இந்த வகையை சேர்ந்தது, அவைகளின் பிரகரணத்தில் எல்லா அ*ங்*க*ங்*களின் விளக்கமும் கூறப்பட்டுள்ளதால்.

விகிருதி என்பது எ*ங்*கு எல்லா அ*ங்*க*ங்*களை குறித்தும் விளக்கம் தரப்படவில்லையோ அது. இ*ங்*கு அ*ங்*க*ங்*களும் அதன் அ*ங்*க*ங்*களான உபாய*ங்*களும் பிரகிருதியில் செய்தது போலவே சய்யப்படவேண்டும் என்பது நியமம் சௌர்யம், வாயவ்யம் முதலிய யாக*ங்*களை இந்த வகையை சேர்ந்தது.

**பிரகிருதிவத் விகிருதி கர்தவ்யா** என்ற நியமப்படி பிரகிருதியில் உள்ளது போல அதன் அ*ங்*க , உபா*ங்*க*ங்*கள் விகிருதியில் அதிதேசம் செய்யப்படுகின்றது. ஒரு இடத்தில் (பிரகிருதியில்) பிராப்தியான விதி மற்ற இடத்தில் ( விகிருதியில் ) கொண்டு செல்வது என்பது அதிதேசம் இப்படி கொண்டு செல்வதென்பது எ*ங்*கிருந்து எதற்கு வேண்டுமானாலும் என்று செய்யக்கூடாது. சம்பந்தம் உள்ள கர்மத்தில் மட்டுமே செய்யப்படவேண்டும்.

இந்த வாக்யப்பிரமானம் மற்ற பிரகரணம் முதலிய பிரமாண*ங்*களைக்காட்டிலும் பலமுள்ளது. **இந்த்ராக்னி இதம் ஹவி:** என்கிற தர்ஷபௌர்ணமாச பிரகரணத்தில் வருகிற மந்திரம். இதில் தர்ஷம் என்பது அமாசாசையிலும், பௌர்ணமாசம் என்பது பூர்ணிமாவிலும் செய்யும் இரண்டு யாக*ங்*கள். அக்னியும் சோமனும் பௌர்ணமாசத்திலும் , இந்திரனும், அக்னியும் தர்ஷத்திலும் தேவதைகள் . இது தர்ஷபௌர்ணமாச பிரகரணத்தில் உள்ள வாக்கியமாக இருப்பதால் இரண்டிற்கும் பொதுவானது. அதனால் மந்திரத்தில் வரும் தேவதையின் பெயரை நீக்கிவிட்டு இரண்டு யாகத்திலும் மந்திரமானது படிக்கப்படவேண்டும் என்றால் அப்படியில்லை. பிரகரண பிரமாணம் கொண்டு பார்த்தால் தர்ஷ மற்றும் பௌர்ணமாசம் இரண்டிலும் ஒன்று போலவே செய்யபடவேண்டும். ஆனால் தேவதையை நோக்கினால் தன்னிலேயே

முழுமையான ஒரு செயலாக செய்யபடவேண்டும் என்பது வாக்கியத்தின் பிரயோகம்.

மீமாம்ஸை சாஸ்திரத்தில் வாக்கியமே பலசாலியாக ஏற்கப்பட்டதால் பிரகரணம் முதலிய பிரமாண***ங்***களுக்கு இடையில் இ***ங்***கு தர்ஷத்திற்கு மட்டுமே அ***ங்***கம் ஆகும். பூர்ணமாசத்திற்கு அல்ல, அ***ங்***கு **அக்னிஷோமெள இதம் ஹவி:** என்று கூறப்பட்டதால் பிரகரண பிரமாணத்தின் பிரகாரம் இ***ங்***கு வாக்கியம் கற்பனை செய்யபடவேண்டியதாகிறது. அதுமட்டுமில்லாமல், **இந்த்ராக்னி** என்கிற தேவதையை அறிவிக்கின்ற லி***ங்***கபிரமானமும் கற்பனை செய்ய வேண்டி வருகிறது. இந்த லி***ங்***கத்தின் மூலமாக ஒரு ஷ்ருதி வாக்கியமும் கற்பனை செய்யவேண்டியுள்ளது. ஆனால் வாக்கிய பிரமாணத்தை ஏற்பதினால் லி***ங்***கமும், ஷ்ருதியும் மாத்திரம் கற்பனை செய்யப்பட்டால் போதுமாகின்றது. ஒரு கற்பனை குறைவதனால் இது (வாக்யம்) பிரகரணத்தை காட்டிலும் பலம் உள்ளதாகிறது.

## பிரகரண நிரூபனம்

*उभयाकाङ्क्षा प्रकरणम् । यथा प्रयाजादिषु 'समिधो यजति' इत्यादिवाक्ये फलविशेषसयानिर्देशात्समिद्यागेन भावयेदिति बोधानन्तरं किमित्युपकार्याकाङ्क्षा । दर्शपूर्णमासवाक्येऽपि 'दर्शपूर्णमासाभ्यां स्वर्ग भावयेत' इति बोधानन्तरं कथमित्युपकारकाकाङ्क्षा । इत्थं चोभयाकाङ्क्षाया प्रयाजादीनां दर्शपूर्णमासाङ्गत्वम्*

பிரகரணம் என்றால் என்ன என்பதை நிரூபிக்கும் முன்பு பிரகரணத்தின் லக்ஷணம் தரப்படுகிறது. **உபயாக*ங்* க்ஷா பிரகரணம்** என்று, எ***ங்***கு அ***ங்***கம் மற்றும் அ***ங்***கி இவை இரண்டிற்கும் பரஸ்பரம் ஆகா***ங்***க்ஷை (எதிர்பார்ப்பு) உள்ளதோ அது பிரகரணம் எனப்படுகிறது. தர்ஷபூர்ணமாசம் போன்ற யாக***ங்***கள் அ***ங்***கி ஆகின்றது. அந்த அ***ங்***கி, பிரதானம், பலம், உபகார்யம் முதலிய பெயர்களால் அறியப்படுகின்றது. அ***ங்***கம் அப்பிரதானம், சாதனம், உபகாரகம் முதலிய பெயர்களால் அறியப்படுகின்றது.

தர்ஷபூர்ணமாச பிரகரணத்தில் பிரயாஜ அ***ங்***க***ங்***களான **சமிதோ யஜதி** முதலிய விதி வாக்கிய***ங்***கள் உள்ளன. (சமிதோ, தனூனபாதம், இடா, பர்ஹிர், சுவாஹாகாரம் ஆகிய ஐந்தும் பிரயாஜம்) இந்த வாக்கியத்தினால் சமித் யாகத்தினால் நாம் அடையவேண்டும் போன்றவை, சமித்யாகேன பாவயேத் என்பதின் மூலம் நாம் அறிகின்றோம் ஆனால் இ***ங்***கு அடையப்படவேண்டும் என்றால் எதை என்பது தெளிவாக இல்லை ஆனால் இ***ங்***கு இந்த அ***ங்***கமானது **கிம்** (என்ன) என்ற எதிர்பார்ப்புடையதாக இருக்கிறது. என்ன என்பது சாத்யத்தை குறித்து உள்ள எதிர்பார்ப்பு.

அதுபோல, **தர்ஷபூர்ணமாஸாப்யாம் ஸ்வர்ககாமோ யஜேத** என்கிற வாக்கியத்தில் சுவர்கத்தில் ஆசையுடையவன் தர்ஷ பூர்ணமாசம் என்கிற யாகத்தை செய்யட்டும் என்று கூறும்போது இதனால் சாத்யமான (பலமான) சுவர்கம் அடையபடும் என்பது இருந்தாலும் **கதம்** (எப்படி) என்று கூறப்படவில்லை. அதனால் இ***ங்***கு பிரயாஜம் முலிய அ***ங்***க***ங்***களை பற்றிய எதிர்பார்ப்பு உள்ளது.

ஒன்றில் சாதனத்தை குறித்த எதிர்பார்ப்பும் மற்றொன்றில் சாத்யத்தை குறித்த எதிர்பார்ப்பும் உள்ளது. இப்படி பரஸ்பரம் ஒன்றை மற்றொன்று எதிர்பார்பதினால் இவற்றின் எதிர்பார்ப்பு அன்னியோன்யமாக உதவுதன் மூலமானதான ஒரு வாக்கியம் உண்டு பண்ணுவதினால். அதாவது, பிரயாஜம் முதலிய அ***ங்***க***ங்***கள் கூடியதான தர்ஷபூர்ணமாச யாகத்தினால் சுவர்கத்தில் ஆசையுள்ளவன் அதனை அடையட்டும் என்று, இதனால் இரண்டிலும் உள்ள எதிர்பார்ப்பு மூலம் பிரயாஜம் முதலியன தர்ஷபூர்ணமாசத்தின் அ***ங்***கமாக ஆவது தெளிவாகின்றது.

*तच्च प्रकरणं द्विविधम्—महाप्रकरणमावान्तरप्रकरणं चेति।*

இப்படி ஒன்றின் எதிர்பார்ப்பு மற்றொன்றால் முழுமை செய்வதின் மூலம் அ***ங்***க-அ***ங்***கி பாவத்தினை நிரூபிக்கும் இந்த பிரகரணம் இரண்டு வகைபடுகின்றது. ஒன்று மகாபிரகரணம் மற்றொன்று அவாந்தர பிரகரணம்.

*तत्र मुख्यभावानसंबन्धिप्रकरणं महाप्रकरणम्। तेन च प्रयाजादीनां दर्शपूर्णमासाङ्गात्वम। एतच्च प्रकृतावेव। उभयाकाङ्क्षायाः संभवात्, न तु विकृतौ। तत्र : प्रकृतिवद्विकृतिः कर्तव्या' इत्यतिदेशेन कथंभावाकाङ्क्षाया उपशमेनापूर्वाङ्गानामप्युभयाकाङ्क्षाया विनियोगासंभवात्। तस्मादपूर्वाङ्गानां स्थानादेव विकृत्यर्थत्वमिति।*

மகா பிரகரணம் என்பது எ***ங்***கு சாத்தியம் பாவனையின் பரமாகின்றதோ அது என்று சொல்லபடுகின்றது. அதாவது, பல-பாவனையின் பிரகரணம் மகாபிரகரணம் இது பிரகிருதி யாக***ங்***களில் உண்டாகின்றது. உதாரணத்திற்கு **ஜ்யோதிஷ்டோமேன ஸ்வர்ககாமோ யஜேத தர்ஷபூர்ணமாஸாப்யாம் ஸ்வர்ககாமோ யஜேத** முதலிய இட***ங்***களில் சுவர்கம் என்பது பாவனையில் பலமாக, சாத்யமாக ஆகின்றது இதுவே பலபாவனை ஆகும். இந்த பாவனையின் காரணமாக யஜ என்ற மூலச்சொல். இது பிரகிருதியில் மட்டும் உண்டாவது என்று கூற காரணம் பிரகிருதியை போல விகிருதி செய்யபடவேண்டும் என்கிற நியமப்படி பிரகிருதியில் கூறப்பட்ட அ***ங்***க***ங்***கள் நேரடியாக விகிருதியில் கூறப்படாமல் அவை அதிதேசம் ஆகின்றதால். பிரகிருதி என்பது முன்பே கூறியது போல எ***ங்***கு எல்லா அ***ங்***க***ங்***களும் முழுமையாக கூறப்பட்டுள்ளதோ,

எல்லாம் அ***ங்***கமும் கூறப்பட்டதால் இ***ங்***கு அதிதேசம் ஏற்படுவதில்லை என்பதால், அ***ங்***க***ங்***களின் பலன் பற்றிய ஆகா***ங்***க்ஷையும், யாகத்தினை எப்படி செய்யவேண்டும் என்ற சாதனத்தின் ஆகா***ங்***க்ஷையும் உள்ளதால் இது உபய ஆகா***ங்***க்ஷா உடையதாகின்றது.

பிரகிருதியிலிருந்து விகிருத்திக்கு அதிதேசமாக அ***ங்***க***ங்***கள் வந்தாலும் சில அ***ங்***க***ங்***கள் அவற்றை பற்றிய வாக்கிய***ங்***கள் மூலமாக போதிக்கின்றது. இவை பிரகிருதி யாகத்தில் இல்லாத காரணத்தினால் இவை அபூர்வா***ங்***கம் என்று கூறப்படுகின்றது. இவை எந்த பிரகரணத்தினால் அ***ங்***கத்தன்மையை அடையும் என்ற கேள்வி எழும்போது, இவற்றின் அ***ங்***கத்தன்மை நிச்சயமாக ஏற்கபடவேண்டும் என்றாலும் அது பிரகரணம் என்கிற பிரமாணம் கொண்டு ஆவதில்லை மாறாக ஸ்தானம் என்கிற பிரமாணம் கொண்டு காரணம் இது பிரகிருதியில் இல்லாததும் விகிருதியில் உள்ளதாலும், அதன் சன்னிதியின் (அருகாமை) காரணமாக இது விகிருதியின் அ***ங்***கமாகின்றது. ஏன் பிரகரண பிரமாணம் ஏற்கப்படவில்லை என்றால், இந்த அபூர்வா***ங்***கமானது உபயாகா***ங்***க்ஷையுடையதாக இல்லாததால், பிரகிருதிவத் விகிருதி கர்தவ்யா என்கிற அதிதேஷம் கொண்டே எல்லா அ***ங்***க***ங்***களும் விகிருதியில் வந்து சேர்த்துவிடுவதால் மற்ற அ***ங்***க வாக்கிய***ங்***கள் விகிருதியில் உண்டானாலும் அவற்றிற்கு அ***ங்***கி தேவைபடுவதால் ஒரு ஆகா***ங்***க்ஷையுண்டாலும் அ***ங்***கிக்கு அவ்வ***ங்***கத்தினை குறித்து எந்த ஆகா***ங்***கக்ஷையும் இல்லாததால் உபயாகா***ங்***க்ஷா இல்லாததினால் அதன் அ***ங்***கதன்மை பிரகரணத்தினால் ஆவதில்லை. உதாரணத்திற்கு சூர்ய யாகத்தில், **<u>ஸௌர்யம் சரும் நிர்வபேத் பிரம்மவர்சஸகாம:</u>** என்று ( பிரம்மவர்சஸ் அடைய விரும்புபவன் சூர்யனுக்கு சரு கொண்டு ஹோமம் செய்யவும்) இ***ங்***கு புதிதாக இதன் சன்னிதியில் சில புதிய ஹோம***ங்***கள் பிரகிருதியில் இல்லாததது கூறப்பட்டுள்ளது. இவை உபஹோமம் எனப்படுகின்றது. இது பிரகிருதியான தர்ஷபூர்ணமாசத்தில் இல்லாததால் இதனை பிரகரண பிரமாணம் கொண்டு ஏற்க்கமுடியாத நிலையில் அதற்கு அ***ங்***கதன்மை கிடைக்காவிட்டால் அந்த வாக்கியம் பொருள்ளற்றதாக ஆகிவிடும் என்பதால் ஸ்தான பிரமாணம் கொண்டு அது (உபதேசம்) அ***ங்***கமாக ஏற்கப்படுகின்றது.

*अङ्गभावनासंबन्धिप्रकरणमवान्तरप्रकरणम्। तेन चाभिक्रमणादीनां प्रयाजाद्यङ्गत्वं। तच्च संदंशनैव ज्ञायते। तदभावे चाविशेषात्सर्वेषाम् फलभावानाकथंभावेन प्रसङ्गेन प्रधानाङ्गत्वापत्तेः।*

பல - பாவனையுடன் சம்பந்தப்பட்ட பிரகரணம் மகா பிரகரணம் என்றால் அ***ங்***கபாவனையுடன் சம்பந்தபட்டது. அ***ங்***க பிரகரணம் அதாவது அ***ங்***கத்தினை விதி செய்யும் வாக்கியத்தினில் உள்ள **த** என்னும் வினை வேற்றுமை கொண்டு எந்த பாவனை லக்ஷிக்கப்படுகின்றதோ அதுவே அவான்தர பிரகரணம். அ***ங்***கத்தினை விதி செய்யும் வாக்கியத்தினில் உண்டாகும் கதம் (எப்படி) என்னும்

எதிர்பார்ப்பு உண்டாகும் போது அதன் சன்னதியில் (அருகாமையில்) கூறபட்ட அ***ங்***கத்தினை என்ன (கிம்) என்கிற எதிர்பார்ப்பு உண்டாகும் போது அவான்தர பிரகரணம் உண்டாகிறது. மகாபிரகரணத்தில் பலபாவனையின் கதம் (எப்படி) அ***ங்***கத்தின் கிம் (என்ன) என்கிற எதிர்பார்ப்பினால் உண்டாவதுபோல,

தர்ஷம் முதலிய பிரதான யாகத்திற்கு பிரயாஜம் முதலிய அ***ங்***க***ங்***கள் உள்ளது. இந்த பிரயாஜம் என்பது பல யாக***ங்***களாளனது. இந்த யாக***ங்***களை உபயகம் என்போம், இந்த உபயகம் பிரதான யாகத்திற்கு உபகாரமாக இருக்கின்றது. இந்த அ***ங்***கத்தினை உபகாரகம் என்று எப்படி அறிவது என்ற கேள்வி எழும்போது அது சந்தம்ஷம் கொண்டு மட்டும் என்று கூறப்பட்டது. சந்தம்ஷம் என்றால் இரண்டு பக்க***ங்***களிலிருந்தும் இருக்கி பிடிப்பது அதாவது கிடுக்கி அல்லது இடுக்கி போல ( சந்தம்ஷம் – கிடுக்கி என்று பொருள்). இரண்டு அ***ங்***க கர்மத்தினை போதிக்கும் வாக்கிய***ங்***களின் நடுவில் எந்த ஒரு வாக்கியம் வருகிறதோ அது சந்தம்ஷத்தில் வந்த வாக்கியம் என்று கூறப்படுகின்றது. பிரதான கர்மத்திற்கு நேரடியாக உதவியில்லாத இந்த வாக்கிய***ங்***கள், அ***ங்***கத்திற்கு உதவியானதாக ஏற்கப்படுகின்றது. இல்லாவிட்டால் பொருளற்ற வாக்கியம் என்ற தோஷம் உண்டாகும். அதனால் இந்த வாக்கியத்திற்கு ஒரு சாத்யம் அவசியமாகின்றது. எதன் நடுவில் (எந்த வாக்கிய***ங்***களின்) இருகிகின்றதோ அதற்கும் ஒரு சாதனம் தேவைபடுகின்றது என்ற உபய ஆகா***ங்***க்ஷா உள்ளதால் பிரகரணம் ஆகின்றது.

அப்படி இது சந்தம்ஷமாக இல்லாவிட்டால் மற்ற கர்ம***ங்***களை (அ***ங்***க***ங்***களை) போல இதுவும் நேரடியாக பிரதானத்தின் அ***ங்***கமாகின்றதால், அவற்றிற்கும் பிரதான கர்மத்தின் அ***ங்***கத்திற்கும் எந்த வேறுபாடுமில்லாததால் அவை நேரடியாகவே அ***ங்***கத்தன்மையை அடைகின்றதாகிறது. சந்தம்ஷம் சாமான்யமாக விளக்கபட்டாலும் அதன் லக்ஷணத்தோடு விஷேசமாக விளக்கபடுகின்றது.

## சந்தம்ஷ லக்ஷணம்

*एकाङ्गानुवादेन विधीयमानयोरङ्गयोरन्तराले विहितत्वं संदंशः यथा अभिक्रमणे। तद् हि 'समानयते जुह्वाम् उपभृतस्तेजो वा' इत्यादिना प्रयाजानुवादेन किंचिदङ्गं विधाय विधियते 'यस्यैवंविदुषः प्रयाजा इज्यन्ते प्रैभ्यो लाकेभ्यो भातृव्यान्नुदतेऽभिक्रामञ्जुहोत्यभिजित्यै' इति, तदनन्तरं 'यो वै प्रयाजानां मिथुन वेद' इत्यादिना किंचिदङ्गं विधीयते। अतः प्रयाजाङ्गमध्ये विहितमाभिक्रमणं तदङ्गम।*

ஒரு அ***ங்***கத்தினை அனுவாதம் (மீண்டும் கூறுதல்) செய்யும் போது அது சம்பந்தப்பட்ட இரு அ***ங்***க***ங்***களின் இடையில் விதிக்கபடும் அ***ங்***கத்தினை

சந்தம்ஷத்தில் அகப்பட்டது என்று கூறுவதாகின்றது. இ***ங்***கு முதலில் சொல்லபட்ட ஒரு அ***ங்***கம் மற்றும் அனுவாதம் என்ன என்பதனை தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும். ஏகா***ங்***கம் அதாவது ஒரு அ***ங்***கம் என்றால் தர்ஷபூர்ணமாசத்தில் விதிக்கபட்ட ஐந்து பிரயாஜ***ங்***களினை விதிக்கும் வாக்கியமாக **ப்ரயாஜா கர்தவ்யா:** (பிரயாஜம் செய்யபடவேண்டும்) வருகிறது இதுவே ஏகா***ங்***கம் இதை வாதம் என்றும் கூறுவர். அனுவாதமானது பிரயாஜத்தின் ஐந்து யாக***ங்***களும் **சமிதோ யஜதி** முதலான வாக்கிய***ங்***களால் மீண்டும் விதிக்கப்படுவது.

இ***ங்***கு, பிரயாஜமான ஒரு அ***ங்***கத்தில் ஆஹவனீய அக்னியின் அடுத்து அடி எடுத்து ( ஒவ்வொரு அடியாக ) நடந்து செல்வது அபிகிரமணம் ஆகும். தர்ஷபூர்ணமாச யாகத்தில் பிரயாஜம் விதிக்கபட்டு அதன் பிறகு இரண்டு அ***ங்***க***ங்***கள் விதிக்கப்படுகின்றன. **ஸமான்யத உபப்ருத** (உபப்ருத்திலிருந்து நெய் ஜுஹுவில் கொண்டு வரவும்) இ***ங்***கு உபப்ருதமும் ஜுஹுவும் பிரயாஜத்தில் உபயோகப்படுத்தப்படும் பாத்திர***ங்***களின் பெயர். நெய் ஆஜ்யஸ்தாலி என்கிற பாத்திரத்திலிருந்து ஸ்ருவம் என்கிற பாத்திரத்தின் மூலம் உபப்ருத் மற்றும் ஜுஹு பாத்திரத்தில் மாற்றப்படுகிறது. காரணம் பிரயாஜ யாகத்திற்கு தேவையான நெய்யானது உபப்ருத் மற்றும் ஜுஹு பாத்திரத்தில் வைக்கப்படவேண்டும்.

ஐந்து பிரயாஜமும் ஜுஹு பாத்திரத்தில் உள்ள நெய் கொண்டு ஹோமம் செய்யப்படும். அத்வர்யுவானவர் நெய் உள்ள ஜுஹு பாத்திரத்தை கொண்டு வந்து சமித், தனுனபாதம் மற்றும் இடா என்னும் மூன்று பிரயாஜ***ங்***களின் ஹோமம் செய்கிறார். இடது கையில் உபப்ருத் வைத்து கொண்டு வலது கையினில் உள்ள ஜுஹுவினால் ஹோமிக்கிறார் மற்ற இரண்டு பிரயாஜ***ங்***களான பர்ஹிர் மற்றும் சுவாஹாகாரம் செய்ய இடதில் உள்ள உபப்ருத்திலிருந்து வலதில் உள்ள ஜுஹு பாத்திரத்திற்கு பாதி நெய் மாற்றுகிறார். இதுவே கொடுக்கபட்ட விதிவாக்கியத்தினால் கூறப்படுகிறது **ஸமாநயத உபப்ருத** என்று இது ஒரு அ***ங்***கமாக இருக்கும் போது மற்ற அ***ங்***கமான **ப்ரயாஜாநிஷ்ட்வா ஹவீம்ஷ்யவிதாரயதி** (பிரயாஜம் செய்து (ஹோமித்து) மீதமுள்ள நெய்யை புரோடாஷம் முதலிய ஹவியில் இடவேண்டும்(மாற்ற))) என்பது. இவை இரண்டிற்கும் இடையில் **அபிக்ராமம் ஜுஹோதி** (அபிகிராமம் ஹோமிக்கிறார்) என்று வருகிறது. அதனால் இது சந்தம்ஷத்தில் அகப்பட்டது ( கிடுக்கியில்) என்று கூறப்படுகின்றது. இதனால், எப்படி அபிகிரமனத்திற்கு முன்பு உள்ளதும் பின்பு உள்ளதுமான வாக்கிய***ங்***கள் பிரயாஜ யாகத்துடன் சம்பந்தம் உள்ளதாக ஆகிறதோ அது போலவே இடையில் உள்ளதும் ஆகும். இது பிரயாஜ விதியில் உள்ள **த** வினை வேற்றுமையினால் ஆன பாவனாவின் கதம் (எப்படி) என்னும் ஆகா***ங்***க்ஷை உண்டாகும் போது அபிகிரமணத்திற்கு முன்பும் பின்பும் உள்ள வாக்கிய***ங்***கள் அந்த ஆகா***ங்***க்ஷையினை (எதிர்பார்ப்பு) பூர்த்தி செய்கிறது (தீர்கிறது). இதனால் பிரயாஜம் செய்து அதனால் உண்டான ஆபூர்வத்தை அடைந்து யாகத்தை முழுமையாக்க உதவுவீர்களாக என்பதினால்,

*प्रयाजैरपूर्वं कृत्वा यागोपकारं भावयेदिति ज्ञाते कथमेभिरपूर्वं कर्तव्यमिति कथंभावाकाङ्क्षायाः सत्त्वात्। सा च संदंशपठितैरभिक्रमाणादिभिः शाम्यति। न चाङ्गभावनायाः कथंभावाङ्क्षाऽभावः, भावनासामान्येन तत्रापि तत्संभवात्। तदिदं प्रकरणं क्रियाया एव साक्षाद्विनियोजकं द्रव्यगुणयोस्तु तद्वारा। तथा हि– 'यजेत स्वर्गकामः' इत्यत्र फलभावनायां कथंभावाकाङ्क्षयेतिकर्तव्यतात्वेनान्वेति। क्रियाया एव लोके कथंभावाकाङ्क्षयामन्वयदर्शनात्। न हि कुठारेण छिन्द्यादित्यत्र कथं भावाकाङ्क्षायामुच्चर्यमाणोऽपि हस्तोऽन्वेति किंतु हस्तेनोद्यम्य निपातयेति उद्यमननिपातने एव, हस्तश्च तद्द्वारैवान्वेतीति सार्वजनीनमेतत्। इदं च स्थनादिभ्यो बलवत्। अत एवाक्षैर्दीव्यति राजन्यं जिनातीति देवनादयो धर्मा अभिषेचनीयसंनिधौ पठिता अपि स्थानान्न तदङ्ग, किंतु प्रकरणाद्राजसूयाङ्गमिति।*

இ***ங்***கு ஒரு பிரச்சனையை பூர்வபக்ஷி கேட்கக்கூடும். இ***ங்***கு பிரயாஜ யாகத்தின் அ***ங்***கமாக அபிகரணம் அவான்தர பிரகரணம் மூலம் நிரூபிக்கமுடியும். கதம் பாவனா, அதாவது இதி கர்தவ்யதா என்று நாம் பார்த்த இப்படி செய்யவேண்டும் என்கிற ஆகா***ங்***க்ஷை அ***ங்***க பாவனையில் உண்டானால் பல – பாவனையின் ஆகா***ங்***க்ஷை யாகத்தின் மூலமாக பலனை எப்படி அடையவேண்டும் என்று எதிர்பார்த்து நியாயமே. இதனை பிரயாஜம் முதலிய அ***ங்***க***ங்***கள் கொண்டு என்று தீர்மானிக்கலாம். இதற்கும் கதம் பாவனா ஆகா***ங்***க்ஷை உண்டானால் இது முடிவில்லாத அநவஸ்தா என்கிற தோஷத்தை அடைகிறது. அதனால் அ***ங்***கபாவனையின் ஆகா***ங்***க்ஷை உண்டாகாது. இந்த கேள்விக்கு காரணம் இதிகர்தவ்யதா ஆகா***ங்***க்ஷை பிரதான யாகத்துடனேயே சம்பந்தபட்டதாக இருக்கும் அ***ங்***க யாகத்தோடு அல்ல, என்று கூறினால். அதற்கு சித்தாந்தியான மீமாம்ஸி கூறுவர்.

எ***ங்***கெல்லாம் பாவனா உள்ளதோ அதனுடன் இதிகர்தவ்யதாவும் இருப்பது அவசியமாகிறது. **சமிதோ யஜதி** முதலிய அ***ங்***க யாகத்தை விதிக்கும் வாக்கிய***ங்***களிலும் மூல சொல் உள்ளதாலும் அதனுடைய தி என்கிற வினைவேற்றுமையினால் பாவனா குறிக்கப்படுவதாலும். இந்த பாவனா உள்ளதால் இ***ங்***கும் சாத்யம், சாதனம், இதிகர்தவ்யதா ஆகியவை உண்டாகியே தீரும். அதனால் பிரதானத்தில் (யாகத்தில்) உள்ளது போல அ***ங்***கம் ( அ***ங்***கத்திலும்) அதற்கு அவசியம் இருப்பதால் இதனை நிராகரிக்க முடியாது. தர்ஷபூர்ணமாசம் என்கிற பிரதானத்திற்கு உள்ளது பிரயாஜம் கதம் பாவனா உண்டாவது அவசியமே. மகாபிரகரணமானாலும் அல்லது அவான்தர பிரகரணமானாலும் அதனால் கிரியா மட்டுமே நேரடியாக வினியோகம் செய்யபடுகின்றது. நேரடியாக என்று கூறியது

திரவியமும் குணமும் கிரியை மூலமாக கௌனமாக வினியோகம் செய்யபடுகின்றது.

உதாரணத்திற்கு **யஜேத ஸ்வர்ககாம:** என்பதில் (சுவர்கத்தில் ஆசையுள்ளவன் யாகம் செய்யவும்) சுவர்கம் என்பது பலமாக கூறப்பட்டுள்ளது. ஆனால் எப்படி செய்யவேண்டும் என்ற கதம் பாவனா ஆகா***ங்***க்ஷை உண்டாகும் பொழுது அந்த பிரகரணத்திலேயே உள்ள வாக்கியமான **பிரயாஜா: கர்தவ்யா:** (பிரயாஜம் செய்யபடவேண்டும்) என்ற வாக்கியம் கதம் பாவனையின் (இதி கர்தவ்யதாவான இப்படி செய்யவேண்டும்) என்பதற்கு பதிலாக அமைத்து பிரயாஜம் முதலிய யாகம் பிரதான யாகத்துடன் சேர்கின்றது. காரணம் பிரயாஜம் முதலிய யாக***ங்***களும் ஒரு பிரதானத்தின் ஆகா***ங்***க்ஷை இருக்கிறது என்பதினால் இது பிரதானத்துடன் சேர்கின்றது. அதாவது, சுவர்கம் என்னும் சாத்யத்தை அடைய உள்ள யாகத்தினை முழுமையாக்கவேண்டி பிரயாஜம் முதலிய யாகத்தினை செய்ய வேண்டும் என்பது ஆகிறது. இந்த பிரயாஜம் என்ன திரவியமா குணமா இல்லை கிரியையா என்றால் திரவியமோ குணமோ இல்லை. ஆனால் ஐந்து யாகம் சேர்ந்த கிரியையே பிரயாஜம் என்பது முன்பே கூறப்பட்டுள்ளது. எப்படி என்கிற கதம் பாவனா ஆகா***ங்***க்ஷைக்கு ஒரு செயலே தீர்வாகிறது என்பது இந்த உலகத்தில் உள்ள வியவகாரத்திலும் காணமுடிகின்றது.

உதாரணத்திற்கு **ஹஸ்தேன குடாரேன ச்சிந்தியாத்** (கையினால் உளியினால் (மரம்) வெட்ட வேண்டும்) முதலிய வாக்கிய***ங்***களில் வெட்டும் சாத்யத்தை செய்யும் சாதனமாக கை உள்ளது. இருந்த போதிலும் கை உளியை கொண்டு தானே மரத்தை வெட்ட முடியாது. அதற்கு கையை உயர்த்துவது தாழ்த்துவது போன்ற கிரியையுடனேயே சம்பந்தமுள்ளது. அறுப்பது என்பது மற்ற எதனுடனும் இல்லை கை முதலியன அதன் வாயிலாகவே என்பது எப்படியோ அப்படியே இ***ங்***கும் **யஜேத ஸ்வர்ககாம:** முதலிய வாக்கிய***ங்***களிலும் பிரகரண பிரமானத்தினால் கிரியையே சம்பந்தப்படுகின்றது திரவியமோ குணமோ இல்லை.

இந்த பிரகரணபிரமானமானது ஸ்தானம் முதலிய பிரமாண***ங்***களை காட்டிலும் பலமுள்ளது. காரணம் பிரகரணம் உபயாகா***ங்***க்ஷை உடையது ஆனால் ஸ்தானம் முதலானவை அ***ங்***கத்திலோ அல்லது அ***ங்***கியிலோ மாத்திரம் ஆகா***ங்***க்ஷையுடையது இதனை அன்யதர ஆகா***ங்***க்ஷை என்று கூறுவர். அதனால் எந்த அ***ங்***கியில் சேர ஒரு அ***ங்***கத்தில் உள்ள தன்மையை (அ***ங்***கதன்மை) நாம் ஆகா***ங்***க்ஷை மூலமாக அடைகிறோமோ அ***ங்***கு அ***ங்***கியில் ஆகா***ங்***க்ஷை இல்லாமல் இருப்பதால் அ***ங்***கு அதை கற்பனை செய்ய வேண்டியதாகிறது. இப்படி ஸ்தான பிரமாணம் கற்பனை செய்யும்பொழுது பிரகரணம் தன்னுடைய வேலையை முடித்து விடும். என்பதால் பிரகரணம் ஸ்தானம் முதலியதை காட்டிலும் பலமுள்ளது. (வேலையை முடித்துவிடும் என்றால் அதன் வினியோகம் ஆகிவிடும் என்று பொருள்).

உதாரணத்திற்கு **ராஜா ராஜஸூயேன ஸ்வாராஜ்யகாமோ யஜேத**, என்று ராஜசூயம் என்கிற யாகம் க்ஷத்திரியர்களுக்கு தன்னுடைய ராஜ்யத்தை அடைய விருப்பமுள்ளவர்க்கு விதிக்கப்பட்டுள்ளது. இந்த பிரகரணத்தில் பசுயாகம், இஷ்டி , சோமயாகம் முதலிய பல முக்கிய யாக***ங்***கள் கூறபட்டுள்ளது. இந்த பல யாக***ங்***களில் அபிஷேசனீயம் என்கிற சோமயாகமும் ஒன்று. இதன் அருகிலேயே தேவனம், ராஜன்யம் முதலிய கர்மமும் **அக்ஷைர் தீவ்யதி, ராஜன்யம் ஜினோதி**, முதலிய வாக்கிய***ங்***கள் கொண்டு விதிக்கப்பட்டுள்ளது.. இ***ங்***கு சந்தேகம், இவை எதனுடைய கர்ம***ங்***கள் என்று, காரணம் ஸ்தானம் பிரமாணம் கொண்டு பார்த்தால் இவை அபிஷேசனீய யாகத்தின் அ***ங்***கமாகின்றது . பிரகரணப்பிரமாணத்தை வைத்து பார்த்தால் ராஜசூய யாகத்தின் அ***ங்***கமாகின்றது என்பதால். இவை ஸ்தானம் பிரமாணத்தை கொண்டு ஏற்கபடமுடியாது காரணம் தேவனம் முதலியவைக்கு அபிஷேசனீய யாகத்தின் ஆகா***ங்***க்ஷை இல்லாததினால். ஆகா***ங்***க்ஷை பூர்த்தியாகின்றது. ஆனால், ராஜசூய யாகத்தின் கதம் பாவனா இந்த தேவனம் முதலிய கர்ம***ங்***களினால் ஆகின்றது. அதன் எதிர்பார்பினை தேவனம் முதலியதால் ஆகிறதாலும் தேவனம் முதலியவைகளின் பலபாவனா ஆகா***ங்***க்ஷை ராஜசூயத்தினால் தீர்வதினாலும் இவகளின் அ***ங்***க அ***ங்***கிதன்மை நிரூபனமாகின்றது. இப்படி பிரகரணத்தினாலேயே ராஜசூயத்தில் அ***ங்***கம் ஆவதாலும் ஸ்தானம் கொண்டு ஆகா***ங்***க்ஷை பூர்த்தியாகாதினாலும் பிரகரணமே ஸ்தானத்தை காட்டிலும் பலமுள்ளது என்று தீர்வாகின்றது.

## ஸ்தானம் பிரமாணம்

*देशसामान्यं स्थानम्। तद् द्विविधम्–पाठसादेश्यमनुष्ठान सादेश्यं चेति। स्थानं क्रमेत्यनर्थान्तरम्। पाठसादेश्यमपि द्विविधम्–यथासङ्ख्यपाठः संनिधिपाठेति।*

பிரகரணப் பிரமாணம் நிரூபித்த பின்பு கிரமபிராப்தியான ஸ்தானப் பிரமாணம் நிரூபிக்கப்படுகின்றது. அதன் லக்ஷணம் **தேஷ சாமான்யம் ஸ்தானம்**, (ஒரே இடத்தில் இருப்பது) ஒரே இடத்தில் இருப்பது என்றால், எது என்று கேள்வி உண்டாகும், ஒரே இடத்தில் இரண்டிற்கும் மேற்பட்ட வாக்கிய***ங்***கள் இருப்பது ஸ்தானம் என்கிற பிரமாணம் ஆகின்றது என்பது விளக்கம் இது இரண்டு வகைபடுகின்றது பாடசாதேஷ்யம், அனுஷ்டான சாதேஷ்யம் என்று.

*तत्र 'ऐन्द्राग्नमेकादशककपालं निर्वपेत्', वैश्वानरं द्वादशकपालं निर्वपेत्' इत्येवं क्रमविहितेषु इन्द्राग्नी रोचना दिवः' इत्यादीनां याज्यानुवाकायामेन्त्राणां यथासंख्यं प्रथमस्य प्रथमं द्वितीयस्य द्वितीयमित्येवंरूपो विनियोगो यथासंख्यापाठात्। प्रथमपठितमन्त्रस्य हि कैमर्थ्याकाङ्क्षायां प्रथमतो विहितं कर्मैव प्रथममुपतिष्ठते,*

*समानदेतवात। एवं द्वितीयमन्त्रसयापि। वैकृताङ्गानुवादेन विहितानं संदंशपतितानं विकृत्यर्थत्वं संनिधिपाठात्। यथा आमनहोमानाम्। तेषां हि कैमथर्याकाङ्क्षायां फलं विकृत्यपूर्वमेव भाव्यत्वेन संबध्यते, उपस्थितत्वात्, स्वतन्त्रफलकत्वे विकृतिसंनिधिपाठानर्थक्यापतेः।*

பாடசாதேஷ்யம் என்றால், ஒரே அத்யாயத்தில் படிக்கப்பட்டதாக ( உள்ளதாக) இருந்தால் அது பாடசாதேஷ்யம் என்றாகின்றது. அனுஷ்டான சாதேஷ்யமோ ஒரு இடத்தில் இல்லாமல், வேறு வேறு அத்யாய***ங்***களில் படிக்கப்பட்டாலும் ஒரு கர்மத்தை செய்யும்போது அவை ஒன்றாக வந்து சேர்வது, மீமாம்ஸையில் ஸ்தானம் என்பதற்கு கிரமம் என்கிற வேறு பெயரும் உண்டு. மீமாம்ஸை சூத்திரத்தில் **<u>கிரமஸ்ச தேஷ சாமன்யம்</u>**, என்றுசுறப்பட்டுள்ளது என்பதால் இ***ங்***கு இந்த விளக்கம். இந்த பாடாசாதேஷ்யம் மற்றும் அனுஷ்டான சாதேஷ்யத்தில், பாடசாதேஷ்யம் இரண்டு வகையாகின்றது. அவை யதாசா***ங்***கியபாடம் மற்றும் சன்னிதிபாடம் என்று இவை பற்றிய விளக்கத்தை பார்க்கும் முன்பு மற்ற சில விளக்கத்தை தெரிந்துகொள்வது அவசியமாகின்றது. வேதம் இரண்டு பாக***ங்***கள் உடையது சன்ஹிதா எனவும், இந்த மந்திர***ங்***கள் அனுஷ்டானம் செய்யபடவேண்டிய விதிமுறைகளை கூறுவது ப்ராம்மணம் என்றும் கூறப்படுகின்றது. மந்திர***ங்***கள் யாஜ்யா மற்றும் அனுவாக்யமாக இருக்கின்றது. யாஜ்யா என்பது ஹவிஸை இடும் போது கூறுகின்ற மந்திரம். அனுவாக்யா என்பது ஒரு தேவதையை அஹ்வானம் (அழைக்கும்) போது படிக்கப்படுவது. அந்த தேவதை அழைக்கப்பட்ட இடத்தில் இருந்து கொடுக்கும் ஹவிஸை ஏற்கிறது. இ***ங்***கு உதாரணத்தில், **<u>ஐந்த்ராக்னமேகாதஷ கபாலம் நிர்வபேத்</u>**, (மைத்ரயணி சன்ஹிதா 2,1,1) ( இந்திரன் மற்றும் அக்னிதேவதைகளுக்கு பதினோறு கபால***ங்***கள் நிர்வபனம் செய்யவேண்டும்.) **<u>வைஷ்வானரம் துவாதஷ கபாலம் நிர்வபேத்</u>**, (மைத்ராணி சன்ஹிதா 2,1,2) (வைஷ்வாநரனுக்கு பன்னிரெண்டு கபால***ங்***கள் நிர்வபனம் செய்யவேண்டும்) என்று விதிக்கப்பட்டுள்ளது. இதே கிரமத்தில் **<u>இந்த்ராக்னீ ரோசனா திவ:</u>**, (மை.ச.4,11) என்றும் **<u>வைஷ்னரோ அஜிஜனத்</u>**, (மை.ச.4,11) என்றுமுள்ள யாஜ்யானு வாக்கிய***ங்***கள் உள்ளன. இவை ஐந்த்ராக்னம் மற்றும் வைஷ்வானரம் மந்திர***ங்***கள் குறிக்கப்பட்ட கிரமத்திலேயே உள்ளது. இப்படி, எந்த மந்திரத்துடன் யாஜ்யானுவாக்கியத்தை இனைக்க வேண்டும் என்ற கேள்விஎழும் போது, முதல் மந்திரமான ஐந்த்ராக்னம் என்பதில் தேவதை இந்திரனும் அக்னியும் போல யாஜ்யானுவாக்கியத்திலுள்ள முதல் மந்திரமும் இந்திரன், அக்னி தேவதைக் உறியதாக ஆவதாலும், இரண்டாம் மந்திரம் வைஷ்வானரனுக்கு உள்ளதால் அதன் கிரமத்தில் வரும் யாஜ்யானுவாக்கியமும் வைஷ்வானரன் தேவதைக்கு உள்ளதாலும் யதாச***ங்***கிய நியமப்படி முதல் மந்திரம் முதல் யாஜ்யானுவாக்கியத்திற்கும் இரண்டாம் மந்திரம் இரண்டாவது யாஜ்யானுவாக்கியத்திற்கும் என்று ஆகிறது.

சன்னிதிபாடமென்றும் இரண்டாவது வகை, விகிருதியில் உள்ள சந்தம்ஷத்தில் (கிடுக்கி) உள்ள அ***ங்***க***ங்***களாக இல்லாமல், பிரகிருதியிலிருந்தும் அனுவாதமாக வராமல் உள்ள அ***ங்***கம் எதுவோ அது சன்னிதி பாடமாகின்றது. இதற்கு உதாரணமாக சௌர்யயாகத்தின் உபஹோம***ங்***கள், தர்ஷபூர்ணமாசத்தின் ஆமனஹோமம் முதலிய. தர்ஷபூர்ணமாசம் **தர்ஷபூர்ணமாசாப்யாம் ஸ்வர்ககாமோ யஜேத்**, என்கிற விதியினால் அறியப்படுகிறது. இதில் சா***ங்***கிரஹனீ என்கிற விகிருதி யாகம் ஒன்று உண்டு. இதன் சில அ***ங்***க***ங்***கள் பிரகிருதியிலிருந்து அனுவாதமாக பிரயாஜம் முதலிய யாக***ங்***களாக வருகிறது, மற்றும் சில அனுயாஜம் என்கிற யாகமாக வருகிறது. இதன் நடுவில் சந்தம்ஷபதிதமாக உள்ளது ஆமனஹோமம் என்பது, இவற்றின் கிம் பாவனா ஆகா***ங்***க்ஷையாக வரும்போது விகிருதி யாகத்தினால் உண்டாகும் அபூர்வமே பலமாக வருகின்றது. ஏனென்றால், விகிருத்தியின் அபூர்வத்தை அடையவே இந்த அனுஷ்டானம் என்பதால் இதற்கு என்று ஒரு தனி பலனை கற்பனை செய்வது அவசியமற்றதாகிறது.

*पशुधर्माणमग्रीषोमीयार्थत्वमनुष्ठानसादेश्यात्। औपवसध्येऽह्नि अग्रीषोमीयः पशुरनुष्ठीयते तस्मिनेव दिने ते धर्माः पठयन्ते। अतस्तेषां कैमर्थ्याकाङ्क्षायामनुष्ठेयत्वेनोपस्तिं पश्वपूर्वमेव भाव्यत्वेन संबध्यते। तच्च स्थानं समाख्यातः प्रबलम्। अत एव शुन्धनमन्त्रः सांनाय्यपात्राङ्गं पाठसादेश्यात्, न तु पौरोडाशिकमिति समाख्यया पुरोडशपात्राङ्गम्।*

பாடசாதேஷ்யத்தை நிரூபித்து இப்பொழுது அனுஷ்டான சாதேஷ்யம் நிரூபிக்கப்படுகின்றது. இ***ங்***கு ஒரே நாளில் செய்யபடும் கர்ம***ங்***களில் அதற்கு தேவையான மற்ற கர்ம***ங்***களும் அதே நாளில் வருவது அனுஷ்டான சாதேஷ்யம் எனப்படுகின்றது. பஷீ (பசு) தர்மம் எனப்படும் பஷீ யாகத்தின் அ***ங்***க***ங்***களான - உபாகரணம், நியோஜனம், பர்யக்னீகரணம் முதலியவை வருகின்றது.

மூன்று தின***ங்***கள் அனுஷ்டிக்ககூடிய சோமயாகம் ஜ்யோதிஷ்டோமம் எனப்படுவது. முதல் நாள் ஔபவசத்யம். இரண்டாவது நாள் சௌத்யம், மூன்றாவது நாள் அவபிருதம், ஔபவசத்யம் தினத்தில் உபயோகப்படுத்தபடும் பசுக்கு அக்னிஷோமியம் என்றும், சௌத்திய தினத்தில் உபயோகப்படுத்தபடுவது, சவனீயம் என்றும் அவபிருத்தில் ஆனுபந்திய பசு என்றும் கூறப்படுகின்றது. மேல் கூறப்பட்ட பசுதர்மமானது, முதல் தினத்தில் முதல் பசுவினை மண்டபத்தில் (யஜ்ய) கொண்டுவந்து அதை ஸ்பர்ச்சிப்பது (தொடுவது), குஷத்தினால் அதன் நாலாபுரமும் சுற்றிகாட்டுவது, அதை கட்டிவைப்பது போன்ற கிரியைகள் ஆகும். இது அபூர்வத்தை உண்டு செய்வதாகின்றது. இந்த பஷீ தர்மமானது முதல் நாளுக்கு மட்டும் குறிப்பிடபட்டாலும் மற்ற தின***ங்***களுக்கு அதிதேசத்தின் மூலமாக அடைகிறது. என்பதால் இது அனுஷ்டான சாதேஷ்யத்தினால் இது அக்னீஷோமிய அ***ங்***கமாகின்றது. இந்த ஸ்தானப் பிரமாணமானது

சமாக்யப்பிரமாணத்தை காட்டிலும் பலமுள்ளது. சமாக்யாவை காட்டிலும் ஸ்தானம் எப்படி பலமுள்ளதாக உள்ளது என்பதை விளக்க ஒரு உதாரணம் சுந்தன மந்திரம் என்ற அதாவது **ஷீந்தத்வம் தைவ்யாய கா்மனோ** என்ற மந்திரம். சாம்னாய பாத்திர அ***ங்***கமாக பாடசாதேஷ்யத்தினால் உள்ளது. சாம்னாயம் என்பது பாலும் பயிரும் ஆகும். அதை வைக்க உதவும் பாத்திரமானது சாம்னாய பாத்திரம். பானை, கிலை(கொம்பு), பவித்ரம் முதலியது போல சுந்தனமும் சாம்னாய பாத்திரா***ங்***கம் ஆகிறது.

புரோடாஷம் என்பது முன்பே கூறியது போல நெல் உமி நீக்கி, பொடித்து அதை பாலில் வேகவைப்பது. அது சம்பந்தாமானது பௌரோடாஷிகம். இந்த புரோடாஷம் சம்பந்தமான கிரியைகளை குறிக்கும் காண்டத்திற்கு பௌரோடாஷிக காண்டம் என்று ஆகும். இது தா்ஷபூா்ணமாச யாகபிரகரணத்தில் வருகிறது. இந்த காண்டத்தில் வரும் மந்திரம், கா்மம் , பாத்திரம் ஆகியவை எல்லாம் புரோடாஷத்தில் உபயோகமுள்ளதாக இருக்கிறது என்பது தெரிகிறது. சுந்த மந்திரமும் இந்த காண்டத்திலேயே வருவதால் உளுகளம், திருஷ்டதுபலம், ஜீஹீ முதலியவைகளை சுத்தம் செய்வதற்காக இந்த மந்திரம். இந்த காண்டத்தில் சமித், குஷம் முதலியவைகளை தயாராக்கி வைத்தல், சாம்னாய பாத்திரம், அதன் பிறகு முஷ்டிநிா்வாப (கைமுடி அந்த அளவு நெய் எடுப்பது) இவை குறிப்பிடபட்டுள்ளது. இதனால் யதாச***ங்***க்யம் முறைபடி சாம்னாய பாத்திரம் சுந்தனத்தில் சம்பந்தம் சித்தமாகின்றது. இ***ங்***கு இது சமாக்யா கொண்டு சித்தம் செய்வதனால் ஸ்தானம், பிரகரணம், வாக்கியம், லி***ங்***கம் மற்றும் ஷ்ருதி இவைகளின் பேதமை உள்ளது. அதனால் ஒரு பிரிவு குறைவான ஸ்தானத்தை ஏற்றால் வினியோகத்தில் சுலபமாக இருக்கும். சமாக்யா வெறும் பெயராக இருப்பதால், அ***ங்***க அ***ங்***கி சம்பந்தந்தை சமான தேசத்தில் உடைய ஸ்தானம் பலமுள்ளதாகிறது.

## சமாக்யா நிரூபணம்

*समाख्या यौगिकः शब्दः। सा च द्विविधा–वैदिकी लौकिकी च। तत्र होतुश्चमसभक्षणङ्गत्वम्, होतृचमस इति वैदिक्या समाख्यया। अर्ध्योस्तत्तत्पदार्थङ्गत्वम, लौकिक्या आध्वर्यवमिति समाख्ययेति संक्षेपः। तदेवं निरूपितानंनि संक्षेपतः श्रुत्यादीनि षट्प्रमाणानि ।*

சமாக்யாவின் லக்ஷணம் **யௌகிக: ஷப்த** என்பது. யௌகிக ஷப்தமென்பது ஒரு சொல்லை கேட்டவுடன் அதன் வோ்ச்சொல்லும் வேற்றுமை உருபும் எ***ங்***கு நமக்கு புரிகிறதோ அப்படிபட்ட சொல் யௌகிகம் எனப்படுகின்றது. இது இரண்டு வகைப்படுகின்றது. அவை வைதிகீ, லௌகிகீ என்று. வைதிகீ என்பது வேதத்தில் குறிப்பிடபட்டுள்ளது. உதாரணம் **ஹோத்ரு**

**சமஸ:** என்ற சொல். ஹோதா என்பது ருக் வேதபாடி (ருக்வேதம் படித்தவர்), சமஸ் என்பது கரண்டி, இ***ங்***கு இதன் பொருள் கரண்டியில் உள்ள சோம ரசத்தை ஹோதா குடிக்கவும் என்பது. இப்படி கிரியையே முக்கியமாக கருதும் மீமாம்ஸையில், கரண்டியில் குடிப்பது (அதிலுள்ளதை) என்ற கிரியை அ***ங்***கியாகம் அதனை குடிப்பவரான ஹோதா அதன் அ***ங்***கமாகவும் சமாக்யாவினால் நிரூபிக்கப்படுகிறது.

இதுபோல ஹோத்ரம், அத்வர்யவம் முதலிய சொற்கள் லௌகிகி சாம்யாவாகும். காரணம் இவை வேதத்தில் பிரயோகப்படுத்தப்படவில்லை. ஹோதாவினும், அத்வர்ணுவினும் தன்னுடைய அனுஷ்டானத்தில் உள்ள அ***ங்***கத்தன்மையை இவை குறிக்கின்றது . ஹோதா ருக்வேதம் படித்தவர் என்றால், அத்வர்யு யஜீர்வேதம் படித்தவர். உத்காத சாமவேதம் படித்தவர் மற்றும் பிரம்மா அதர்வ வேதம் படித்தவர் .

வினியோக விதியின் ஆறு பிரமாணம் சுறுக்கமாக கூறப்பட்டது.

## அங்கங்களின் பேதம்

*एतत्सहकृतेन विनियोगविधिना समिदादिभिरूपकृत्य दर्शपूर्णमासाभ्यां यजेत' इत्येवंरूपेण यानि विनियोज्यन्ते तान्यङ्गनि द्विविधानि–सिद्धरूपाणी क्रियारूपाणि चेति। तत्र सिद्धानि जातिद्रव्यसंख्यादीनि। तानि च दृष्टार्थान्येव। क्रियारूपाणि च द्विविधानि–गुणकर्माणि प्रधानकर्माणि च। एतान्येव संनिपत्योपकारकाणि आरादुपकारकाणीति चाच्यन्ते।*

இந்த ஆறு பிரமாண***ங்***கள் கொண்டு வினியோக விதி எதை வினியோகம் செய்கிறதோ அது அ***ங்***கம் எனப்படுகின்றது. இந்த அ***ங்***க***ங்***களின் உதவியால், தர்ஷபூர்ணமாசாப்யாம் ஸ்வர்ககாமோ யஜேத என்பதால் விதிக்கப்பட்ட தர்ஷபூர்ணமாசம் என்கிற பிரதான யாகம், பிரயாஜம் , அனுயாஜம் முதலியதின் உதவியால் பலனை தருவதாகிறது..

இந்த அ***ங்***கம் இரண்டு வகைப்படுகின்றது, சித்தரூபம், கிரியாரூபம் என்றும். சித்தரூபம் என்பது எந்த ஒரு அ***ங்***கம் சாத்யமாக இல்லையோ, ஒரு செயலினால் கர்த்தாவினால் அடையப்படாததாக உள்ளதோ அது. பசுதன்மை, பிரம்மணத்தன்மை முதலிய ஜாதி, நெல் முதலிய திரவியம், ஒன்று முதலிய ச***ங்***க்யா, செம்மை முதலிய குணம், ஆண், பெண் போன்ற லி***ங்***கம். இவை எல்லாம் சித்தமான அ***ங்***கம் இவை செயல் கொண்டு அடையபடமுடியாதது ஆனால் தானே ஸ்வத சித்தமாக உள்ளது. கர்த்தா இதை யாகத்தில் உபயோகிக்க மட்டுமே செய்கின்றான்.

கிரியாரூபமானது சாத்யமாக இருக்கும் அ***ங்***கத்தை குறிப்பது. இது கர்த்தாவின் பிரயத்தனத்தினால் அடையப்பட கூடியதாக உள்ளது. கிரியாரூபமானது நம்மால் பார்க்க கூடியதாகவும் இருக்கலாம். ஆனால், சித்தரூபமானது பார்க்ககூடியதாக மட்டுமே இருக்கும். இவைகள் இல்லாமல் யாகம் என்பதே இல்லாததாகின்றது. கிரியாரூபம் இரண்டு வகை படுகின்றது. குணகர்மம் மற்றும் பிரதான கர்மம் என்றும். குண***ங்***களான கர்ம***ங்***கள் குணகர்மம் , பிரதாணமான கர்ம***ங்***கள் பிரதானகர்மம் ஆகும். இவையில் குணகர்மத்தில் திரவியம் முக்கியமாகவும், கர்மம் கௌனமாகவும், பிரதான கர்மத்தில் முக்கியமாகவும் திரவியம் கௌனமாவும் இருக்கும். பிரதான யாகத்தில் சம்பந்தமுடைய பதார்த்தத்தில் (செயல்களில்) எது உபயோகமாக உள்ளதோ அது சன்னிபத்ய உபகாரகம் ஆகும். எது பலாபூர்வத்திற்கு நேரடியாக உபகாரமாக உள்ளதோ அது ஆராதுபகாரமாகும்.

## சன்னிபத்யோபகாரகம்

*कर्माङ्गद्रव्याद्युद्देशेन विधीयमानं कर्म संनिपत्योपकारकम्। यथाऽवघातप्रोक्षणादि। तच्च–दृष्टार्थ अदृष्टार्थ दृष्टादृष्टार्थ चेति । तत्र दृष्टार्थ अेवघातादि , अदृष्टार्थ प्रोक्षणादि, दृष्टादृष्टार्थ पशुपुरोडाशादि। तद्धि द्रव्यत्यागांशेनैव अदृष्टं देवताुद्देशेन च देवतास्मरणं दृष्टं करोति।*

சன்னிபத்யோபகாரகத்தின் லக்ஷணம் **கர்மா*ங்*கத்ரவ்யாத்யுத்தேஷன விதீயமானம்** கர்ம கர்மத்தின் அ***ங்***கமான திரவியம் அல்லது தேவதையை உத்தேசித்து எந்த கர்மம் விதிக்கப்படுகிறதோ அது சன்னிபத்யோகபாரகம். சன்னிபத்யம் என்றால் திரவியம் முதலியவை மூலமாக உபகாரகம் யாகத்தினால் உண்டாகும் அபூர்வத்தினை உண்டாக்க உதவியாக என்பது பொருள். உதாரணத்திற்கு வ்ரீஹிரிபிர் யஜேத என்பது தர்ஷபூர்ணமாசம் யாக கர்மத்தின் அ***ங்***கம் வ்ரீஹியை யாகத்தின் அ***ங்***கமாக விதிக்கிறது. மூன்றாம் வேற்றுமை கொண்டு இந்த அ***ங்***கத்தை உத்தேசித்து **வ்ரிஹீன் அவஹனந்தி, வ்ரீஹீன் ப்ரோக்ஷதி** முதலிய அவஹானன, ப்ரோக்ஷனை கர்மாக்கள் விதிக்கப்படுகிறது. இதுவே (வ்ரீஹீன் அவஹனதி முதலிய) சன்னிகத்யோபகாரம். இது மூன்று வகைப்படுகின்றது- திருஷ்டம் , அதிருஷ்டம், திருஷ்டாதிருஷ்டம் என்று.

**திருஷ்டம்** - எதில் பிரயோஜனமானது பார்க்ககூடியதாக உள்ளதோ அந்த சன்னிபத்யோபகாரகம் திருஷ்டம். வ்ரீஹீயை அவகாதம் (நெல் உமிநீக்குவது) செய்த பின் துஷாவிமோசனம் (உமியை அதிலிருந்து நீக்கி சுத்தம் செய்வது) அவகாதம் நெல்லை உமி நீக்கி அரிசியை பெருவதற்கே செய்யபடுவது என்பது

திருஷ்டம் பிரயோஜனம் இதுபோல, மாவு அரைப்பது, புரோடாஷத்திற்காக என்பதும் பிரத்யக்ஷ பிரயோஜனத்திற்கே..

**அதிருஷ்டம்** - பிரயோஜனம் பிரத்யக்ஷமாக இல்லாமல் இருந்தால் அந்த சன்னிபத்யோபகாரகம் அதிருஷ்டம் என்று கூறப்படுகின்றது. அந்த சன்னிபத்யோபகாரகம் அதிருஷ்டம் என்று கூறப்படுகின்றது. ப்ரோக்ஷணம் இந்த வகையை சேர்ந்தது. நெல் உமி நீக்கி சுத்தம் செய்து அதை ப்ரோக்ஷிக்க வேண்டும். **வ்ரிஹீன் ப்ரோக்ஷதி** என்ற விதி சொல்கிறது. இந்த ப்ரோக்ஷணம் எந்த மாற்றத்தையும் திரவியத்தில் உண்டு செய்வதில்லை என்றாலும் ப்ரோக்ஷணம் ஒரு அ***ங்***கம், இது அ***ங்***காபூர்வத்தை உண்டு செய்து பலாபூர்வத்தை புஷ்டி வெய்கின்றது. அபூர்வதமானது பிரத்யக்ஷம் இல்லாததால் இது அதிருஷ்ட வகையை சேர்ந்ததாகின்றது.

**திருஷ்டாதிருஷ்டம்** - திருஷ்டமானதும் அதிருஷ்டமானதுமான பிரயோஜனத்தை உடைய சன்னிபத்யோபகாரகம் திருஷ்டாதிருஷ்ட வகை . உதாரணத்திற்கு பசு புரோடாஷம் என்று கூறப்படுகின்றது. ஒவ்வொரு யாகத்திலும் மூன்று அம்சமுள்ளது - உத்தேஷம், த்யாகம் பிரக்ஷேபம்.

**உத்தேஷம்** - எந்த தேவதையை உத்தேசித்து யாகம் செய்யபடுகிறதோ அந்த தேவதையை நினைவு கூர்வது. இது திருஷ்டமான பிரயோஜனம் எல்லோரும் அனுபவித்தல்.

**த்யாகம்** - **அக்னயே இதம் நமம** (அக்னிதேவனுக்கு என்னுடையது அல்ல) என்று திரவியத்தை அந்த தேவதையை உத்தேசித்து தியாகம் செய்வது. இது அதிருஷ்டம் காரணம் தியாகம் மனதால் செய்யப்படுவது. இதனால் யஜமானனின் ஆத்மாவில் ஒரு அபூர்வம் உண்டாகிறது. அபூர்வம் அதிருஷ்டமானது.

**பிரக்ஷேபம்** - தேவதையை உத்தேசித்து திரவியத்தை அக்னியில் விடுவது. முன்பு கூறியது போலவே இதுவும் அதிருஷ்டமான அபூர்வம் உண்டு செய்யும் செயல்.

## ஆராதுபகாரகம்

*द्रव्याद्यनुद्दिश्य केवलं विधीयमानं कर्म आरादुपकारकम्। यथा प्रयाजादि। आरादुपकारकं च परमापूर्वोत्पत्तावेवोपयुज्यते। संनिपत्योपकारकं तु द्रव्यदेवतासंस्कारद्वारा यागस्वरूपेऽप्युपयुज्यते। इदमेव चाश्रयिकर्मेत्युच्यते।*
*तदेवं निरूपितः संक्षेपतो विनियोगविधिः।*

திரவியம் முதலியனவை உத்தேசிக்காமல் மாத்திரம் விதியாக உள்ள கர்மம் ஆராதுபகாரகம். உதாரணத்திற்கு, பிரயாஜாதி. ஆராதுபகாரகம் நேரடியாக பரமாபூர்வம் (பலாபூர்வம்) உண்டு செய்கின்றது. என்பதால் இது அதிருஷ்டம். ஆனால் சன்னிபத்யோபகாரகமோ யாகத்திற்கு உதவியான திரவியம் தேவதை மற்றும் சம்ஸ்காரம் மூலம் யாகத்தின் சுவரூபமாக வருகின்றது. இது பரமாபூர்வத்துடன் நேரடியாக சம்பந்தமில்லாததால், பரம்பரையாக சம்பந்தமுடையதாகின்றது.

வினியோகவிதி சுருக்கமாக விளக்கப்பட்டது.

## பிரயோக விதி

*प्रयोगप्राशुभावबोधको विधिः प्रयोगविधिः। स चाङ्गवाक्यैकवाक्यतापन्नः प्रधानविधिरेव। स हि साङ्गं प्रधानमनुष्ठापयन्विलम्बे प्रमाणाभावादविलम्बापरपर्यायं प्रयोगाप्राशुभावं विधत्ते। न च तदविलम्बेऽपि प्रमाणाभाव इति वाच्यम् विलम्बे हि अङ्गप्रधानविध्येकवाकयातावगततत्साहित्यानुपपत्तिः विलम्बेन क्रियमाणयोः पदार्थयोरिदमनेन सहकृतमिति साहित्यव्यवहाराभावात्। स चाविलम्बो नियते क्रमे आश्रीयमाणे भवति। अन्यथा हि किमेतदनन्तरमेतत्कर्त्व्यमेतदनन्तरं वेति प्रयोगविक्षेपापत्तेः। अतः प्रयोगविधिरेव स्वविधेय प्रयोगप्राशुभावसिद्धयर्थ नियतं क्रममपि पदार्थविशेषणतया विधत्ते। अत एवाङ्गानां क्रमबोधको विधिः प्रयोगविधिरित्यपि लक्षणम्।*

விதி நான்கு வகைப்படும் என்று கூறி அதன் பெயர்களும் கிரமமாக உத்பத்தி, வினியோக, அதிகார மற்றும் பிரயோக என்று கூறப்பட்டது. ஆனால் உத்பத்தியும் பிரயோகமும் விளக்கப்பட்ட பிறகு அதிகார விதி விளக்கப்படாமல் பிரயோக விதியான விளக்க முற்படுவது கிரமப***ங்***கம் ( வரிசையை அழிக்கும்) தோஷம் உண்டாகும் என்று யோசித்தால், அதற்கு விடை , உத்பத்தி வாக்கியத்தால் கர்மத்தினை செய்ய ஆசைப்பட்டு, வினியோக வாக்கியத்தால் அதன் அறிவையும் அடைந்த பின் பிரயோகமே செய்யவேண்டியதாகியதால் என்பதே விளக்கம்.

பிரயோக விதியின் லக்ஷணம் **பிரயோக ப்ராஷுபாவபோதகோ விதி** என்பது பிரயோகம் என்றால் அனுஷ்டானம். ப்ராஷுபாவ என்றால் சீக்கிரம் செய்யும்தன்மை, போதகோ-போதனை செய்யும் என்று ஆகிறது. பிரயோகத்தை அல்லது அனுஷ்டானத்தை சீக்கிரம் செய்யும் தன்மையைபோதிக்கும் விதி பிரயோக விதி. சாமான்யமாக பிரயோக விதி பிரதான விதி என்றே, அதாவது, அதிகார விதி என்றே கருத வேண்டும். இதற்கு வேறுபாடு இத்தனையே, குணவிதியினால் குறிக்கப்பட்ட அ***ங்***கத்தன்மை உள்ள வாக்கிய***ங்***களை பிரதான

விதியினால் கூறப்பட்ட கர்மத்தோடு ஒரு வாக்கியமாக்கி சம்பந்தப்படுத்துவது. உதாரணத்திற்கு தர்ஷபூர்ணமாசாப்யாம் யஜேத என்ற பிரதான கர்மத்துடன், பிரயாஜ அ***ங்***க***ங்***ளான சமிதோ யஜதி முதரான கர்ம***ங்***களை சம்பந்தப்படுத்தி ஒரு வாக்கியமாக்கி **சமிதாதி பர*ங்*கைரூப க்ருதவத்ப்யாம் தர்ஷபீர்ணமாசாப்யாம் ஸ்வர்கம் பாவயேத்** என்று. உத்பத்தி விதியும் அ***ங்***க விதிகளும் அதனதன் கர்ம***ங்***களை குறிக்கின்றது. பிரயோக விதி அ***ங்***க சஹிதமாக பிரதான யாகத்தின் அனுஷ்டானத்தை செய்விக்கின்றது. அப்படி கர்ம***ங்***களை செய்வித்தாலும் அது சீக்கிரம், தடையில்லாமல் நடப்பதிலும் கவனம் வைக்கின்றது. அ***ங்***க***ங்***கள் தடையில்லாமல் அடுத்தடுத்து செய்யப்பட்டாலே அது அந்த அ***ங்***க***ங்***கள் கூடியதாக இருக்கும். அப்படி இல்லாமல் அவை சிறிது நேரம் கழித்து இடைவிட்டு செய்யப்படுவதாக இருந்தால் இது சஹகிருதாமானது ( இந்த கர்மம் கூடியது) என்ற பிரயோகமே உண்டாகமுடியாது.. விதிவாக்கியத்தில் அவிலம்பம் ( தடையில்லாமல்) என்று கூறப்படாமல் இருந்தாலும், அது இந்த அ***ங்***க***ங்***கள் கூடியது என்பதை நிரூபிக்கவே அந்த சொல் உபயோகப்படுகின்றது. காரணம், ஒரே நேரத்தில் எல்லா கர்ம***ங்***களையும் செய்வது முடியாது . சரி, ஒரே நேரத்திலேயே எத்தனை கர்ம***ங்***கள் உள்ளதோ அத்தனை ஆட்கள் கொண்டு அந்த கர்மத்தினை நடத்தி முடிக்கலாமே என்று கூறமுடியாது. காரணம், ஒவ்வொரு வேதவிஹிதமான கர்மத்திலும் அதை நடத்துபவர்களின் எண்ணிக்கை நிர்ணயப்பட்டுள்ளதால் . அக்னிஹோத்ரத்தில் ஒன்று, தர்ஷபூர்ணமாசத்தில் நான்கு, சோம யாகத்தில் பதினாறு முதலாக இதனை அதிகபடுத்த முடியாது. அதனால் தொடர்ச்சியாக கர்மத்தினை செய்வது அவசியமாகின்றது. அது கர்மத்தின் கிரமத்தினை தீர்மாணிப்பதால் நடக்கின்றது (விரைவில்) இல்லாவிட்டால் எதற்கு பின் எந்த கர்மம் என்ற கேள்வி எழுவதால் கர்மம் செய்வதில் தடை உண்டாகி விரைவில் நடப்பது ஆகாமலாகிறது. அதனால் கிரமம், பிரயோக விதியில் கர்மத்தின் விசேஷமாக ஏற்கபடுகிறது. இதனாலேயே பிரயோக விதியினை கிரமத்தினை போதனை செய்யும் விதி என்றும் கூறுவதுண்டு.

## கிரம நிரூபணம்

*तत्र क्रमो नाम विततिविशेषः, पौर्वापर्यरूपो वा। तत्र षट् प्रमाणानि–श्रुति अर्थ पाठ स्थान मुख्य प्रवत्त्याख्यानि।*

கிரமத்தின் லக்ஷணம் **விததி விசேஷ: பௌர்வாபர்யரூபோவா** என்பது. கிரமத்திற்கு இரணடு லக்ஷண***ங்***கள் தரப்பட்டுள்ளது. விததி விசேஷ: மற்றும் பௌர்வாபர்யரூப விததி விசேஷ: என்றால் விசேஷமான விஸ்தாரம், அதாவது ஒரே இடத்தில் பல பொருட்கள் வைப்பது என்பது விஸ்தாரம் இதில் ஒரு நெறிமுறை இருந்தால் அது விசேஷமான விஸ்தாரம். உதாரணம் பல பாத்திர***ங்***களை ஒரு இடத்தில் குவித்து வைப்பது விஸ்தாரம் என்றால் இதனை

வரிசையாக்கி வைப்பது விசேஷமான விஸ்தாரம். இந்த லக்ஷணத்தில் பொருட்களின் விசேஷனமாக கிரமம் வருவதில்லை ஆதலால் பௌர்வாபர்யோ வா என்று கூறப்பட்டது. பௌர்வாபர்யம் என்றால் எது முதலில் எது அடுத்து , அடுத்தடுத்து என்பது பொருள். அடுத்தடுத்து என்று கூறினால் பின்னால் வரும் பொருட்களின் வரிசைபடுத்துவது இதுவே கிரமமாகும். இந்த கிரமத்தினை நிர்ணயிக்க ஆறு பிரமாண***ங்***கள் தேவைப்படுகின்றது. அவை-ஷ்ருதி, அர்த்தம், பாடம், ஸ்தானம் , முக்யம், பிரவிருத்தி ஆகியவை.

## **ஷ்ருதி பிரமாணம்**

*तत्र क्रमपरवचनं श्रुतिः। तच्च द्विविधम्– केवलक्रमपरं तद्विशिष्टपदार्थपरं चेति। तत्र 'वेदं कृत्वा वेदिं करोति' इति केवलक्रमपरं, वेदिकरणेदेर्वचनान्तरप्राप्तत्वात्। 'वषट्कर्तुः प्रथमभक्ष' इति तु क्रमविशिष्टपदार्थपरम्। एकप्रसरताभङ्गभयेन भक्षानुवादेन क्रममात्रस्य विधातुमशक्यत्वात्। सेयं श्रुतिरितरप्रमाणापेक्षया बलवती। तेषा वचनकल्पनद्वारा क्रमप्रामणत्वात्। अत एवाश्विनग्रहस्य पाठक्रमात्तृतीयस्थाने ग्रहणप्रसक्तौ आश्विनो दशमो गृह्यत इति वचनाद्दशमस्थाने ग्रहणमित्युक्तम्।*

**கிரமபரவசனம்** என்பது ஷ்ருதியின் லக்ஷணம். ஒரு சொல்லை கேட்ட மாத்திரத்திலேயே அதன் கிரமம் விள***ங்***குவது. எதன் பிறகு எது என்பது, அதுவே ஷ்ருதியாகும். ஷபர பாஷ்யத்தில் கூறப்பட்டுள்ளது **யதர்தஸ்யாபிதானம் ஷப்பஸ்ய ஷ்ரவணதாதேவாவகம்யதே** ( எதன் பொருள் ஒரு சொல்லை கேட்பதினாலேயே உண்டாகின்றதோ, விள***ங்***குகின்றதோ) என்று, இந்த கிரமமானது இரண்டு வகைப்படுகின்றது. கிரமத்தை மட்டும் போதிப்பது, பதார்தத்துடன் (கர்மம்) கூடிய கிரமத்தினை போதிப்பது.

முதல் ஷ்ருதிக்கு உதாரணம் **வேதம் கிருத்வா வேதிம் கரோதி** வேதம் - தூ***ங்***கும் மாட்டு கன்றின் கால் (தொடை மற்றும் குளம்பு ) போன்ற அமைப்பு உள்ள தர்பைகட்டு, க்ருத்வா- செய்து, வேதிம்-ய***ஞ்***ய பாத்திர***ங்***களும் ஹவிஸ் முதலியவைகளும் வைக்கும் சம்ஸ்கரிக்கப்பட்ட இடம் எ***ங்***கு கர்மம் செய்யப்படுகின்றதோ, கரோதி- செய்கிறார் என்பது பொருள். இ***ங்***கு க்ருத்வாவில் உள்ள த்வா என்ற வேற்றுமை உறுபு கொண்டு கிரமமானது கூறப்பட்டுள்ளது. ஒரு தொடர்ச்சியான செயலில் முன்பு, பின்பு என்பதை குறிக்கும் க்த்வா வேற்றுமை உபயோகிக்கப்படுகின்றது. இந்த வேதம் முதலிய வாக்கியத்தில் வேதம் கரோதி, வேதீம் கரோதி என்று கிரமம் கூறப்பட்டுள்ளது. அது செய்ய வேண்டிய வழிமுறையில்லை என்பதால் இது கிரமத்தை மட்டும் போதிக்கும் ஷ்ருதி பிரமாணம்.

இரண்டாம் ஷ்ருதிக்கு உதாரணம், **சஷஷட்கர்த்து: பிரதம பக்ஷ:** (வஷட் என்பவர் முதலில் உண்ணவேண்டும்). யாஜ்யா மந்திரத்தில் (**யஜதிஷூயே யஜாமஹம் கரோதி** என்றும் **யாஜ்யாயா அதிவஷ்டகரோதி** என்றும் மந்திரத்தின் முதலில் யே யஜாமஹே மற்றும் வௌஷட் என்றும் கூற விதி செய்யப்பட்டுள்ளது. யாகம் முடிந்த பின் அதனை செய்த ருத்விக்களுக்கு புரோடாஷம் முதலியவற்றை உண்ணும் அதிகாரம் (மீதமுள்ளது) **யஜமான பஞ்சமா இடாம் பக்ஷயந்தி** (யஜமானன் ஐந்தாவதாக இடாவை உண்ணுகிறான்) என்பதன் மூலம் விதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ருத்விக்கான ஹோதாவானவர் வஷட் என்று கூறி ஆஷூதி செய்பவர் உண்ணுவது தீர்மானிக்கப்பட்டாலும், அவர் எப்பொழுது உண்ண வேண்டும் என்பது கூறப்படாததால் வஷட்கர்த்து: பிரதம பக்ஷ: என்பது மூலம் முதலின் உண்ணுவது வஷட் செய்யும் ஹோதா என்ற கிரமம் தீர்மாணமாகின்றது.

கிரமத்தை போதிக்கும் மற்ற பிரமாணத்தை காட்டிலும் ஷ்ருதியானது பலமுள்ளது. இதற்கு காரணம், மற்ற பிரமாணத்தை குறிக்கும் வாக்கியத்தினில் கிரமத்தை குறிக்கும் சொல்லானது இல்லாமல்., அது கற்பனை செய்யபடுவதாலும் ஷ்ருதியிலோ அந்த சொல் நேரடியாக இருப்பதாலும் இது சீக்கிரம் கிரமத்தை போதிப்பதாக கர்மத்தின் அனுஷ்டானத்தில் உதவுகின்றது.

உதாரணத்திற்கு , ஜ்யோதிஷ்டோமத்தில் பத்து சோமரசத்தை தாரையாக ஊற்றி வைக்கும் பாத்திர***ங்***கள் உள்ளது. இதனை தாராகிருஹம் – தாரைகளை கிரஹணம் செய்து வைக்கும் பாத்திர***ங்***கள் என்பதால், அது ஐந்த்ரவாயம் க்ருஹ்ணாதி, **மைத்ரா வருணம் க்ருஹ்ணாதி, ஆஷ்வினம் க்ருஹ்ணாதி** முதலியவை இதில் ஆஷ்வினம் என்பது மூன்றாம் இடத்தில் உள்ளது. (அஷ்வி தேவதை சம்பந்தப்பட்டது – ஆஷ்வினம்) ஆனால் **அஷ்வினோ தஷமோ க்ருஷ்யதே தம் த்ருதீயம் ஜூயோதி** (அஷ்வினதினை பத்தாவதாக ஏற்று அதனை மூன்றாவதாக ஹோமிக்கின்றார்) என்ற வாக்கியத்தில் ஆஷ்வின் பாத்திரம் பத்தாவதாக குறிப்பிடபட்டுள்ளது. ஷ்ருதி கிரமப்படி விரோதமாகின்றது. இ***ங்***கு பத்தாவது என்பது கிரமத்தினை விதிக்கும் சொல்லாகின்றது. பாட பிரமாணம் கொண்டு கிரமம் கற்பனை செய்யப்படுவதாக ஆவதால், அதற்கு முன்பு ஷ்ருதி கிரமம் பத்தாவது (தஷமம்) என்று கிரமத்தினை போதித்து அனுஷ்டானத்தை செய்விக்கின்றது என்பதினால் ஷ்ருதி கிரமம் மற்றவையை காட்டிலும் பலமானது.

## அர்த்த கிரமம்

*यत्र प्रोजनवशेन क्रमनिर्णयः सौऽर्थक्रमः। यथा 'अग्निहोत्रं जुहोति' 'यवागूं पचति' इत्यग्निहोत्रयवागूपकायोः। अत्र हि यवाग्वा होमार्थत्वेन तत्पाकः प्रयोजनवशेन पूर्वमनुष्ठीयेते। स चायं पाठक्रमाद्बलवान्। यथापाठं ह्यनुष्ठाने*

*कलृप्तप्रयोजनबाधोऽदृष्टार्थत्वं च स्यात्। न हि होमानन्तरं क्रियमाणस्य पाकस्य किंचिद्दृष्टं प्रयोजनमस्ति।*

அர்த்த கிரமத்தின் லக்ஷணம் **பிரயோஜனவஷேன க்ரம நிர்ணய:** எங்கு பிரயோஜனத்தினை அடைவதை மனதில் கொண்டு கர்மத்தின் கிரமம் நிச்சயிக்கப்படுகின்றதோ அது அர்த்த கிரமம் எனப்படுகின்றது. உதாரணத்திற்கு, **அக்னிஹோத்ரம் ஜுஹோதி** ( அக்னிஹோத்ரம் ஹோமத்தை செய்கிறார்) பிறகு **யவாகும் பசதி** ( யவாருவை சமைகிறார்) என்று வேதபாடம் உள்ளது. ஆனால் அக்னிஹோத்ரம் செய்வதற்கு யவாகு என்கிற திரவியம் **யவாக்வா ஜுஹோதி** (யவாகும் கொண்டாவது ஹோமிக்கிறார்) என்கிற வாக்கியத்தினால் விதிக்ப்பட்டதாலும், ஹோமம் நடந்த பின்பு யவாகுவை சமைப்பது என்பது எந்த ஒரு பயனையும் தருவதாக இல்லாததாலும், ஹோமத்தை (அக்னி ஹோத்ரம்) செய்வதற்காக யவாகு சமைப்பது அவசியமாகிறது. பின்பு அதனை கொண்டு ஹோமம் செய்யப்படுகின்றது. என்று கிரமம் நிர்ணயம் ஆகிறது. இதுவே அர்த்த கிரமம் ஆகும்.

ஆனால், ஹோமத்தினை செய்தபின் யவாகுவை சமைப்பது ஒரு அதிருஷ்டமான பிரயோஜனத்திற்காக என்று ஏன் கொள்ளகூடாது. அப்பொழுது வேத கிரமமே சரியாக இருக்குமே என்றால், ஹோமத்திலிருந்து ஒரு அதிருஷ்டமும் அதன் பின்னர் சமைக்கும் யவாகுவினால் ஒரு அதிருஷ்டம் என்று இரண்டு அதிருஷ்டத்தை ஏற்பதை விட, திருஷ்ட பிரயோஜனம் இருக்கும் போது அதிருஷ்ட பிரயோஜனத்தை கற்பனை செய்வது கூடாது என்ற மீமாம்ஸர்களின் சித்தாந்தத்தினாலும், முதலில் யவாகு சமைத்து அதன் மூலம் ஹோமம் செய்வது என்பதில் சமைப்பது ஹோமம் செய்வதின் பொருட்டு என்ற திருஷ்ட பிரயோஜனத்தை கொடுப்பதாகும்.

இதனால் அர்த்தகிரமமானது பாட கிரமத்தை காட்டிலும் பலமுள்ளது என்பது நிரூபணமாகின்றது.

## பாட கிரமம்

*पदार्थबोधकवाक्यानां यः क्रम स पाठक्रमः। तस्त पदार्थनां क्रम आश्रीयते। येन हि क्रमेण वाक्यानि पठितानि तेनैव क्रमेणाधीतान्यर्थप्रत्ययं जनयन्ति। यथाप्रत्ययं च पदार्थानामनुष्ठानम्। स च पाठो द्विविधः– मन्त्रपाठो ब्राह्मणपाठ श्चेति। तत्राग्नेयाग्निषोमीययोस्तत्तद्याजयानुवाक्यानां पाठाद्यः क्रम आश्रीयते स मन्त्रपाठात्। स चायं मन्त्रपाठो ब्राह्मणपाठाद्बलीयान्, अनुष्ठाने ब्राह्मणवाक्यापेक्षया मन्त्रपाठस्यान्तरङ्गत्वात्। ब्राह्मणवाक्यं हि प्रयोगको व्याप्रियन्ते, अनुष्ठानक्रमस्य*

*स्मरणक्रमाधीनत्वात्। तत्क्रमस्य च मन्त्रक्रमाधीनत्वाद् अन्तरङ्गोऽयं मन्त्रपाठ इति। प्रयाजानां 'समिधो यजति, तनूनपातं यजति' इत्येवंविधपाठक्रमाद्यः क्रमः स ब्राह्मणपाठक्रमात्। यद्यपि ब्राह्मणवाक्यान्यर्थं विधाय कृतार्थानि तथापि प्रयाजदीनां क्रमस्मारकान्तरस्या भावात्तान्येव क्रमस्मारकत्वेन स्वीक्रियन्ते।*

பாட கிரமத்தின் லக்ஷணம் **பதார்த்த போத வாக்யானாம்ய: க்ரம:**, பதார்த்த என்றால் கர்மம், அனுஷ்டிக்க வேண்டிய கர்மத்தினை போதிக்கும் வாக்கியத்தின் கிரமம் பாட கிரமம் எனப்படுகின்றது. எந்த கிரமத்தில் வாக்கியம் படிக்கப்பட்டிருக்கிறதோ அதே கிரமத்திலேயே அதை அறிந்து நினைவிருத்தி அதன் கர்மம் அனுஷ்டானம் செய்யப்படுகின்றது.

இது இரண்டுவகைப்படுகின்றது – **மந்த்ரபாடம்**, மற்றும் **பிராஹ்மணபாடம்** என்றும் சம்ஹிதை, பிராஹ்மணம் என்று வேதத்தின் இரண்டு பகுதியை பற்றி முன்பே அறிவோம். அதில் சம்ஹிதையில் படிக்கப்பட்ட மந்த்ர***ங்***கள் மந்த்ரபாடம், பராஹ்மணத்தில் படிக்கப்பட்ட வாக்கிய***ங்***கள் பராஹ்மண பாடம். தர்ஷபூர்ணமாச யாகத்தின் பூர்ணமாசத்தில் செய்யும் யாகத்தில் ஆக்னேய உபாம்சு யாகமும் அக்னீஷோமிய யாகமும் உள்ளது. பிராஹ்மணபாகத்தில் முதலில் அக்னீஷோமீய யாகமும் பின்னர் ஆக்னேய யாகமும் (தைத்தீரிய சம்ஹிதை 2-5-2 மற்றும் 2-6-3 ) மந்திர பாகத்தில் பிரயாஜ ஆஜ்ய பாகத்தின் மந்திர***ங்***களுக்கு பிறகு **அக்னிர் மூர்தா புவோ யஞ்ஸ்ய**, அனுவாக்ய மற்றும் யாஜ்யா (முன்பு கண்டது) மந்தர***ங்***கள் ஆக்னேய பாகத்தில் படிக்கப்பட்டவுடன், அக்னிஷோமீய பாகத்தின் **அக்னீஷோமோ சவேதய, யுவமேதானி திவி** ஆகிய மந்திர***ங்***கள் உள்ளது. ப்ராஹ்மண பாகத்தில் வேறுமாதிரி படிக்கப்பட்டாலும் மந்த்ர பாகத்தின் கிரமத்தை அனுசரித்து முதலில் ஆக்னேயம் பின்னர் அக்னீஷோம யாகம் செய்யப்படுகின்றது. மந்த்ர பாடம் பிராஹ்மண பாடத்தை விட அனுஷ்டான காலத்தில் நெரு***ங்***கியதாக இருப்பதால் மந்த்ர பாடம் பிராஹ்மண பாடத்தை காட்டிலும் பலமுள்ளதாக ஏற்கபடுகின்றது. அதாவது, அனுஷ்டான காலத்தில் நெரு***ங்***கியதாக இருப்பதால் மந்த்ர பாடம் பிராஹ்மண பாடத்தை காட்டிலும் பலமுள்ளதாக ஏற்கபடுகின்றது. அதாவது, அனுஷ்டானம் செய்ய வேண்டிய கர்மத்தினை குறித்து குறிப்பிட்டு பிராஹ்மண பாகம் ஓய்கிறது. அனுஷ்டான சமயத்தில் அதற்கு வேறு எந்த உபயோகமும் இல்லை. ஆனால் மந்த்ரமோ அனுஷ்டான சமயத்தில் கர்மத்தின் அனுஷ்டானத்தினை பற்றிய **ஞா**னத்தை நினைவூட்டுகின்றது. (மந்த்ர என்றால் பிரயோஜன அதாவது அனுஷ்டான சம்பந்தப்பட்ட திரவியம் தேவதை குறித்து நினைவூட்டுவது என்று பின்னால் விளக்கப்படும்). அதன் நினைவும் மந்த்ரத்தின் கிரமத்தையே அனுசரித்து இருக்கிறது. மந்த்ரத்தின் மூலமாக எந்த கிரமத்தில் கர்ம***ங்***களின் நினைவு உண்டாகின்றதோ அதே கிரமத்திலேயே அது அனுஷ்டிக்கவும் படுகின்றது. என்பதாலேயே, மந்த்ர பாடம் பிராஹ்மண பாடத்தை காட்டிலும் பலமுள்ளதாக

கொண்டு முதலில் ஆக்னேய யாகமும் பின்னர் அக்னீஷோமீய யாகமும் செய்யபடுகின்றது.

பிராஹ்மண பாடத்தில், பிரயாஜ யாகத்தினை குறிப்பிடுகின்ற சமிதோ யஜதி , தனுனபாதம் யஜதி முதலான ஐந்து விதி வாக்கிய**ங்**கள் உள்ளது. அது எந்த கிரமத்தில் படிக்கப்பட்டுள்ளதோ அதுவே ப்ராஹ்மண பாட கிரமம் எனப்படுகிறது. முன்பு கூறப்பட்டபடி அனுஷ்டான சமயத்தில் ப்ராஹ்மண பாடம் ஒன்றும் செய்யாமல் அதனுடைய கர்மத்தினை குறித்து நினைவுபடுத்தி ஓய்கிறதானாலும் வேறு மந்த்ர பாடம் இந்த ஐந்து பிரயாஜ யாக**ங்**கள் குறித்து இல்லாததால் இதுவே கர்மத்தின் கிரமத்தினை நினைவுருத்துவதாக ஏற்கபடுகின்றது. எந்த கிரமத்தில் ப்ராஹ்மண பாகத்தில் படிக்கப்பட்டுள்ளதோ அதே கிரமத்தில் அனுஷ்டிக்கபடுவதால், பிரயாஜ யாகம் ப்ராஹ்மண பாடம் மூலமாக நிரூபணமாகின்றது (நடத்தப்படுகிறது).

## ஸ்தான கிரம நிரூபணம்

*स्थानं नामोपस्थितिः। यस्य हि देशे योऽनुष्ठीयते तत्पूर्वतने पदार्थे कृते स एव प्रथममुपस्थितो भवतीति युक्तं तस्य प्रथममनुष्ठानम्। अत एव साद्यस्क्रे– अग्नीषोमीय–सवनीया–नुवन्ध्यानां सवनीयदेशे सहानुष्ठाने कर्तव्ये आदौ सवनीयपशोरनुष्ठानमितरयोः पश्चात्। तस्मिन्देशे आश्विनग्रहणानन्तरं सवनीयस्यैव प्रथममुपस्थितिः। तथा हि ज्योतिष्टोमे त्रयः पुशुयागाः अग्नीपोमीय औपवसथ्येऽह्नि, सवनीयः सुत्याकाले, आनुबन्ध्यस्त्वन्ते। साद्यस्क्रो नाम यागविशेषः। स चाव्यक्तत्वज्ज्योतिष्टोमविकारः। अतस्ते त्रयोऽपि पशुयागाः साद्यस्क्रे चोदकप्राप्ताः तेषां च तत्र साहित्यं श्रुतं 'सह पशूनालभेत' इति। तं साहित्यं सवनीयदेशे, तस्य प्रधानप्रत्यासतेः, स्थानातिक्रमसाम्यां। सवनीयदेशेनुष्ठानेऽग्रीषोमीयानुबन्ध्ययोः स्वस्वस्थानातिक्रमो भवति (प्रधानप्रत्यासत्तिलाभश्च। ) अग्रीषोमीयदेशे त्वनुष्ठाने सवनीयस्य स्वस्थानातिक्रममात्रम्। अग्रीषोमीयस्य सवनीयस्थानातिक्रमः, अनुबन्ध्यस्य तु स्वस्थानातिक्रमः। एवमनुबन्ध्यदेशेऽग्रीषोमीयस्य द्रष्टव्यः स्थानातिक्रमः। तथा च सवनीयदेशे सर्वेषामनुष्ठाने कर्तव्ये सवनीयस्य प्रथममनुष्ठानम्। आश्विनग्रहणान्तरं हि सवनीयदेशः। प्रकृता 'वाश्विनग्रहं कृत्वा त्रिवृता यूपं परिवीय आग्रेयं सवनीयं पशुमुपाकरोति' इत्याश्विनग्रहणानन्तरं सवनीयो विहित इति साद्यस्क्रेऽप्याश्विनग्रहणे कृते सवनीय एवोपस्थितो भवति। अतो युक्तं तस्य स्थानात्प्रथममनुष्ठानम्, इतरयोस्तु पश्चादित्युक्तम्।*

ஸ்தான கிரமத்தின் லக்ஷணம் **உபஸ்திதி**: இருத்தல் என்று பொருள். அதாவது ஜ்யோதிஷ்டோமம் முதலிய பிரகிருதி ஹோமத்தில் உள்ள கர்ம***ங்***கள் அதிதேசம் மூலமாக விகிருதியில் ஒரு தினத்தில் செய்யும் சோம யாகத்தில் வரும்போது விதி வாக்கியத்தினால் அவை எல்லாம் ஒரே இடத்தில் அனுஷ்டிக்கபடுகின்றது. எந்த இடத்தில் செய்யப்படுகின்றதோ (நேரத்தில்) அது முதலில் செய்யப்பட்டு மற்ற கர்ம***ங்***கள் அதன் பின்பு அனுஷ்டிக்கப்படுவது ஸ்தானகிரமம் எனப்படுகின்றது. (உதாரணத்திற்கு, ஜ்யோதிஷ்டோமத்தின் விகிருதியாகமான சாத்யஸ்கர என்கிற சோமயாகம், ஒரே நேரத்தில் (சத்ய) எல்லா அ***ங்***க***ங்***களும் செய்யப்படுகின்ற சோமயாகம் ஆகும். பிரகிருதியான ஜ்யோதிஷ்டோமத்திலிருந்து அதிதேசம் மூலமாக அக்னீஷோமீய பசு, சவனீய பசு மற்றும் ஆனுபந்த்ய பசு இவை எல்லாம் ஒரே இடத்தில் சவனீய தேசத்தில் (சவனீயம் செய்யப்படும் இடத்தில்) ஒரு வாக்கியத்தினால் பிராப்தியாகும்போது, முதலில் சவனீய பசுவின் அனுஷ்டானம் நடத்தபட்ட பிறகு மற்ற இரண்டும் செய்யப்படுகின்றது. காரணம், ஆஷ்வின் கிரஹம் என்கிற பாத்திரத்தின் கிரஹணம் நடப்பதால் அது சம்பந்தப்பட்ட சவனீய பசுவை அ***ங்***கு கொண்டு நிருத்துகின்றது என்பது சுருக்கமாக கூறினால் புரியாததினால் அது விளக்கமாக கூறவேண்டியதாகின்றது.

ஜ்யோதிஷ்டோமம் என்னும் ஐந்து தினம் கொண்டு நடத்தப்படும் யாகத்தில் மூன்று பசுயாக***ங்***கள் உள்ளது. முன்பே கண்டது போல ஔபவத்யம் தினத்தில் நடத்தப்படும் அக்னீஷோமீயம், சுத்யாகாலத்தில் நடத்தப்படும் சவனீயம், கடைசி தினமான அவபிருத தினத்தில் நடத்தப்படும் ஆனுபந்த்யம் இப்படி மூன்று தின***ங்***களில் நடத்தப்படவேண்டிய பசுயாகம் ஒரே நாளில் சாத்யாஸ்க்ர என்கிற சோமயாகத்தில் அதிதேசமாகின்றது. **ஸஹ பஷீனாலபேதே** என்ற வாக்கியத்தினால் இந்த மூன்று யாகமும் ஒரே நேரத்தில் அனுஷ்டிக்க விதி உண்டாகின்றது. எந்த நாளில் செய்யப்படவேண்டும் என்ற கேள்வி எழும்போது சுத்யா காலத்தில் அதாவது சவனீய தேசத்தில் என்று முடிவாகின்றது. இதற்கு இரண்டு காரண***ங்***கள் உள்ளன – பிரதான பிரத்யாஸத்தி மற்றும் ஸ்தானாதிகிரம சாம்யம். அதாவது, முக்கியமான கர்மத்திற்கு அருகில் இருப்பது மற்றும் மற்ற இடத்தில் தாவுவது சமமாக இருப்பது.

விளக்கமாக, சாத்யஸ்க்ர யாகத்தில் சோமரசம் எடுப்பது என்பது முக்கியமான கர்மம் சோமரசம் பிழிந்தெடுப்பது என்பது சுத்யா காலத்தில் செய்யப்படுகின்ற கர்மம், சுத்யா காலத்தில் தான் சவனீய பசுவின் யாகமும் உள்ளது. அதனால் சவனீய பசுயாகம் செய்யப்படும் தினமே முக்கிய கர்மமான சோமம் பிழிந்தெடுத்தலின் அருகாமையில் உள்ளதால் அன்றே இரண்டு கர்மமும் செய்யப்படுவது சரியாகின்றது. இதுவே பிரதான பிரத்யாசத்தியினால் நிச்சயிக்கப்படுவது மற்ற காரணமான, ஸ்தானானதிகிரமசாம்யம், அக்னீஷோமிய தினத்திற்கும் ஆனுபந்த்ய தினத்திற்கும் இடையில் உள்ள தினமான சவனீய தினத்தில் செய்வதால் மற்ற இரண்டு தினம் செய்யப்படும் கர்ம***ங்***களும் அதிகம்

பாதிக்கபடாமல் செய்யப்படுகின்றது. அப்படி இல்லாமல். முதல் தினமான அக்னீஷோமிய தினத்தில் செய்வதானால் சவனிய ஒரு இடமும் ஆனுபந்த்யம் இரண்டு இட***ங்***களும் தாண்டி வரவேண்டி இருக்கும். இது போல ஆனுபந்த்ய தினத்தில் செய்யும் போதும், அக்னீஷோமியம் இரண்டு தின***ங்***களும் சவனியம் ஒரு தினமும் தாண்டி வரவேண்டியதாகின்றது. இதனால் சவனிய தினத்தில் செய்வதே சுலபமாகின்றது.

இப்படி இரண்டு காரண***ங்***களாலும் சவனீய தினமே சாத்யஸ்க்ர யாகம் செய்ய சரியான தினம் என்று முடிவான பின்பு, எது முதலில் செய்யப்படவேண்டியது எது பின்னால் என்ற கேள்வி எழுகின்றது. அதற்கு **ஆஷ்வினம் கிருஹம் கிருஹித்வா த்ரிவிருதா யூபம் பரிவீயாக்நேயம் சவனீயம் பஷுமுபாகரோதி** என்ற வாக்கியத்தினால் அஷ்வி தேவதையின் க்ரஹ பாத்திரத்தினை கொண்டு மூன்று பின்னலுள்ள கயிரினால் யூபத்தை (கம்பு) சுற்றி அக்னிதேவதைக்கான சவனீய பசுவின் யாகத்தை செய்யவேணடும் என்று கூறப்பட்டுள்ளது என்பதினால் சவனீய தினத்தில் தான் சவனீய பசுவின் யாகம் முதலில் செய்யப்படவேண்டும். அதன் பிறகே மற்ற இரண்டு பசுயாக***ங்***களும் செய்யபடும் என்பது தீர்மானமாகின்றது. (சவனீயம், அக்னீஷோமிய பின்னர் ஆனுபந்தய என்று) இதை தீர்மானிக்கவே ஸ்தான பிரமாணம் முக்கியமாகின்றது.

## முக்கிய கிரம நிரூபணம்

*प्रधानक्रमेण योऽङ्गानां क्रमः स मुख्यक्रमः। येन हि क्रमेण प्रधानानि क्रियन्ते, तेनैव क्रमेण तेषामङ्गान्यनुष्ठीयन्ते चेत् तदा सवेषामङ्गानां स्वैः स्वैः प्रधानैस्तुल्यं व्यवधानं भवति। व्युत्क्रमेणानुष्ठाने केषांचिदङ्गानां स्वैः प्रधानैरत्यन्तमव्यवधानं केषांचिदत्यन्तं व्यवधानं स्यात्, तच्चायुक्तम्, प्रयोगविध्यवगतसाहित्यबाधापत्तेः। अतः प्रधानक्रमोऽप्यङ्गक्रमे हेतुः। अत एव प्रयाजशेषेणादावाग्नेयहविषोऽभिधारणं पश्चादैन्द्रस्य दध्नः, आग्नेयैन्द्रयागयोः पौर्वापर्यात्। एवं च द्वयोरभिघारणयोः स्वस्वप्रधनेन तुल्यमेकान्तरितं व्यवधानं, व्युत्क्रमेणघारे त्वाग्नेयहविरभिधारणाग्नेययागयोरत्यन्तमव्यवधानम, ऐन्द्रदध्यभिधारणैन्द्रयागयोर्व्यन्तरितं व्यवधानं तच्चायुक्तमित्युक्तमेव। स च मुख्यः क्रमः पाठक्रमद्दुर्बल। मुख्यक्रमो हि प्रमाणन्तरसापेक्षप्रधानक्रमप्रतिपत्तिसापेक्षतया विलम्बितप्रतिपत्तिकाः। पाठक्रमस्तु निरेपेक्षखाध्यायपाठक्रममात्र सापेक्षतया न तथेति बलवान्। स चायं मुख्य क्रम प्रवृत्तिक्रमाद् बलवान। प्रवृत्तिक्रमे हि बहूनामङ्गानां प्रधानविप्रकर्षात, मुख्यक्रमे तु संनिकर्षात्।*

பிரதான கிரமத்தின் கிரமத்தை அனுசரித்து எங்கு அங்கங்களின் கிரமம் அனுஷ்டிக்கபடுகின்றதோ அது முக்கிய கிரமம் எனப்படும். அதாவது எந்த கிரமத்தில் பிரதான யாகத்தின் அனுஷ்டானம் செய்யபடுகின்றதோ அதே கிரமத்தில் அதன் அங்கமும் அனுஷ்டிக்கபடுமானால்., அந்தந்த பிரதான யாகங்களுடன் அதன் அங்கத்திற்கு சமமான தூரம், இடைவெளி உண்டாகின்றது. இப்படி செய்யாமல் பிரதானத்திலிருந்து வேறுபட்ட அங்கங்களின் கர்மங்கள் செய்யபடுமானால் சில அங்கங்கள் பிரதானத்துடன் அதிக நெருக்கமாகவும் சில அங்க கர்மங்கள் பிரதானத்துடன் தூரம் அதிகமாகயுள்ளதாகவும் ஆகின்றது. இப்படி ஆவது ஏற்புடையதில்லை என்பது சிந்தாந்த முடிவு, காரணம் பிரயோக விதியானது பிரதானத்திற்கும் அதன் அங்கத்திற்கும் உள்ள இடைவெளியை குறித்து நியமம் செய்கின்றது. காரணம் அங்கு கூறப்பட்ட **பிரயோக பிராஷுபாவம்** (பிரயோகம் சீக்கிரம் செய்யும் தன்மை) எல்லா கர்மங்களும் ஒரே நேரத்தில் செய்ய முடியாததாலும் ( செய்யும் நபர்களின் எண்ணிக்கை முதலியது நிச்சயிக்கப்பட்டதால்) அது அதிக இடைவெளியில்லாமல் இருந்து சஹித தன்மையை எதிர்பார்பதாலும், பிரயோக விதியானது சரியான இடைவெளியை நியமிக்கிறது . இதனால் யாகம் இனிதே நடைவெற உறுதுணையாகின்றது.

இதற்கு உதாரணம், தைத்தீரிய பிராஹ்மணத்தில் தர்ஷயாக பிரகரணத்தில் முதலில் ஆக்னேய யாகம் பின்னர் ஐந்த்ர யாகத்தின் யாஜ்யானுவாக்கிய மந்திரங்கள் படிக்கப்பட்டுள்ளது. பாடகிரமத்தினால் முதலில் ஆக்னேயமும் பின்னர் ஐந்த்ரமும் அனுஷ்டிக்க படவேண்டும் என்பது நிச்சயமாகின்றது. இப்படி பிரதான யாகங்களின் கிரமம் நிச்சயிக்கப்ட்ட பின் அதே பிரகரணத்தில் ஐந்து பிரயாஜ யாகங்களின் அனுஷ்டானம் முடிந்த பின் மீதமுள்ள நெய்யானது அங்கு வேதியில் வைக்கப்பட்டுள்ள ஹவியின் மேல் ஊற்றும் அபிதாரணம் என்ற கர்மம் விதிக்கப்பட்டுள்ளது. இது **பிரயாஜசேஷேண ஹவிஷ்யபிதாரயதி** (பிரயாஜ நெய்யில் மீதமுள்ளது கொண்டு ஹவிசில் ஊற்றறுகிறார்) இங்கு வேதியில் உள்ள மூன்று **ஆக்னேய புரோடாஷம்** (அக்னி சம்பந்தபட்ட ஹவி), **ஐந்த்ர ததி** (இந்திரம் சம்பந்தப்பட்ட தயில்), **ஐந்த்ரபய** (இந்திரன் சம்பந்தபட்ட பால்) தர்ஷ யாகத்தின் ஹவிகளை குறிக்கின்றது. பிரதான கர்மத்தின் கிரமப்படி முதலில் ஆக்னேய புரோடாஷத்தின் மேலும் அதன் பின்னர் ஐந்த்ர ததி மற்றும் பயஸ் மீதும் நெய் ஊற்றப்படுகின்றது. இப்படி செய்வதலால் எல்லா கர்மங்கள் இடையிலும் உள்ள இடைவெளி சமமாக உள்ளது.

இது எப்படி என்று பார்ப்போம். ஆக்னேய புரோடஷத்தின் மீது நெய் ஒழிக்கப்படுகிறது பின்னர் ஐந்த்ர ஹவிகளின் மீது அதன் பின்னர் ஆக்னேய யாகம், அது முடிந்ததும் ஐந்த்ர யாகம் இப்படி செய்வதில் ஆக்னேய ஹவியில் நெய் தாரனை செய்வதிலும் அதனை அடுத்து ஆக்னேய யாகத்தின் இடையில் ஐந்த்ர ஹவிகளின் மீது நெய் ஊற்றும் ஒரு இடைவெளியே உள்ளது. அதுபோல ஐந்த்ர ஹவிகளின் மீது நெய் தாரனை செய்வதிலும் ஐந்த்ர யாகத்தின் இடையிலும்

ஆக்னேய யாகம் என்கிற ஒரு இடைவெளியே உள்ளது. இரண்டு இடங்களிலும் ஒரு இடைவெளி என்பது சமமாக உள்ளது.

ஆனால், இப்படி பிரதான கிரமத்தை ஆனுசரிக்காமல் செய்வதினால் இடைவெளி அதிகமாவது எப்படி என்றால், முதலில் ஐந்த்ர ஹவிகளின் மீது தாரணை பின்னர் ஆக்னேய ஹவியின் மீது, அதன் பின்னர் ஆக்னேய யாகமும் பின்னர் ஐந்த்ர யாகம் என்ற மாறுபட்ட கிரமத்தை ஆனுசரிப்பதினால் ஆக்னேய ஹவியின் மீது நெய் தாரணை செய்வதிலும் ஆக்னேய யாகத்தின் இடையிலும் எந்த இடைவெளியும் இருப்பதில்லை. அதுபோல, ஐந்த்ர ஹவிகளின் மீது நெய் தாரணை செய்வதிலும் ஐந்த்ர யாகத்தின் இடையிலும் ஆக்னேய ஹவியின் மீது நெய் தாரணை மற்றும் ஆக்னேய யாகம் என்கிற இரண்டு இடைவெளி உள்ளது. பிரதான கிரமத்தில் செய்யாமல் முதலில் ஐந்த்ர யாகமும் பின்னர் ஆக்னேய யாகமும் செய்தால் என்று கூறமுடியாது, காரணம், பிரதான யாககிரமம் மந்த்ர பாடம் மூலம் முன்பே நிச்சயிக்கபட்டிருப்பதால், அதனாலேயே பிரதான கிரமத்தை அனுசரித்து அங்கங்களின் கிரமம் முக்கிய கிரமத்தின் மூலம் முடிவாகின்றது. இந்த முக்கிய கிரமமானது பாடகிரமத்தை காட்டிலும் பலம் குறைந்ததாகின்றது. காரணம் பிரதானத்தின் கிரமத்தை அறிந்த பின்னரே முக்கிய கிரமம் பிரவிருத்தி ஆகின்றது. மந்த்ர பாடத்தினை அனுசரித்து பிரதான கிரமும் அதனை அனுசரித்து முக்கிய கிரமும் ஆவதால் இது அதிக நேரம் எடுக்கிறதாகின்றதால்.

இந்த முக்கிய கிரமம் பிரவிருத்தி கிரமத்தை காட்டிலும் பலமுள்ளது. பலம் என்பது ஒரு கிரமத்தினும் பிரதான கர்மத்தினும் உள்ள நெருக்கம், அதிக இடைவெளியை அனுசரித்து நிச்சயிக்கப்படுகிறது. நெருக்கம் அதிகமானால் பலமானது என்றும், இடைவெளி அதிகமானால் பலம் குன்றியவேன்றும். இந்த பிரவிருத்தி கிரமத்தில் பல அங்கங்கள் இடைவெளி அதிகமாக உள்ளதாக இருப்பதாலும், முக்கிய கிரமத்தோடு பிரதான கர்மத்துடன் உள்ள இடைவெளி குறைந்ததாக இருப்பதாலும் இது பலமுள்ளதாகின்றது.

## பிரவிருத்தி கிரம நிரூபணம்

*सहप्रयुज्यमानेषु प्रधानेषु संनिपातिनामङ्गानामावृत्त्यानुष्ठाने कर्तव्ये हि द्वितीयादिपदार्थानां प्रथमानुष्ठितपदार्थक्र माद्यः क्रम स प्रवृत्तिक्रमः। यथा प्राजापत्य पश्वङ्गेषु। प्राजापत्या हि 'वैश्वदेवीं कृत्वा प्रजापत्यैश्चरन्ति' इति वाक्येन तृतीयानिर्देशात्सेतिकर्तव्याताका एककालत्वेन विहिताः, अतस्तेषां तदङ्गानां चोपाकरणनियोजनप्रभृतीनां सहित्यं संपाद्यम्। तच्च प्राजापत्यपशूनां संप्रतिन्नदेवताकत्वेन युगपदनुष्ठानादुपपद्यते। तदङ्गानां चोपाकरणादीनां युगपदनुष्ठानमशक्यम्। अतस्तेषां साहित्यमव्यवहितानुष्ठानात्संपाद्यम्।*

*तत्रैकस्योपाकरणं विधायापरस्योपाकरणं विधेयम्। एवं नियोजनादिकमपि। तथा च प्राजापत्येषु कस्माश्चित्पशोरारभ्य एकं सर्वत्रानुष्ठाय द्वितीयादिपदार्थस्तेनैव क्रमेणानुष्ठेयः स प्रवृत्तिक्रमः। सोऽयं श्रुत्यादिभ्यो दुर्बलः। तदेवं संक्षेपतो निरूपितः षड्विधक्रनिरूपणेन प्रयोगविधिः।*

பல பிரதான யாகம் ஒரே நேரத்தில் அனுஷ்டிக்கப்படும்போது அதன் சன்னிபத்யோபகார அ***ங்***க***ங்***களும் ஆவிருத்தியினால் (மீண்டும் அதேபோல செய்யும் முறை) அடையப்பட்டு செய்யபடும் போது, முதலில் ஏதோ ஒரு பிரதான கர்மத்தினை கொண்டு தொட***ங்***கி எல்லா பிரதானமும் அனுஷ்டித்து இரண்டாம் அ***ங்***கத்திற்கும் முதலில் தொட***ங்***கிய அதே பிரதானத்திலிருந்து தொட***ங்***கி அனுஷ்டானம் செய்யப்படவேண்டும். இப்படி செய்வதே பிரவிருத்தி கிரமம் எனப்படுகின்றது.

உதாரணத்திற்கு, வாஜபேயி யாகத்தில் ஒன்றான பிரஜாபதி தேவதை சம்பந்தப்பட்ட பிராஜாபதி யாகம். இது **சப்ததஷ ப்ராஜாபத்யான் பஷூனாலபேத்** என்கிற விதிப்படி பிரஜாபதி தேவதைக்கு பதினேழு பசுவினை கொண்டு யாகம் செய்ய வேண்டும் என்பதை கூறுகிறது. இ***ங்***கு பதினேழு என்ற எண்ணிக்கை கொண்டு வேறுவேறு கர்ம***ங்***களாக ஏற்கப்படுகின்றது. ஒவ்வொரு பசுவிற்கும், **உபாகரணம்** (பசுவினை பலாஷமரத்தின் கம்பு கொண்டு தொடுவது) , **பர்யக்னீகரணம்** (பசுவிற்கு நெருப்பு கொண்டு நாலாபுரமும் காட்டுவது, ஆர்த்தி போல) , சன்னிபத்யோபகாரகமான இந்த அ***ங்***க***ங்***களை செய்ய வேண்டும். இந்த பிரஜாபதி யாகம் வைஷ்வதேவ இஷ்டி என்ற யாகம் கழிந்ததும் தொட***ங்***கப்பட வேண்டும் என்று **ப்ராஜாபத்யையஸ் சரந்தி** என்ற வாக்கியத்தில் உள்ள பிராஜாபத்யை: என்பதில் உள்ள மூன்றாம் வேற்றுமை கொண்டு ஒரே நேரத்தில் எல்லா அ***ங்***க***ங்***களும் கூடியதாக செய்யப்படுகின்றது. என்று முடிவாகிறது. ஆனால் ஒரே நேரத்தில் உபாகரணம் முதலிய அ***ங்***க***ங்***கள் கூடியதாக செய்வது என்பது இயலாத காரியம் என்பதால் ஒரே நேரம் என்பது அதிக இடைவெளி இல்லாமல் அனுஷ்டிக்கப்படுவதாகின்றது. அதாவது ஒரு பசுவிலிருந்து தொட***ங்***கி உபாகரணம் என்கிற கர்மத்தினை பதினேழு பசுவிற்கும் செய்த பின்பு அடுத்த கர்மா***ங்***கமான நியோஜனமும் அதே பசுவிலிருந்து தொட***ங்***கி செய்வது அதிக இடைவெளி (வேறுபாடுள்ள இடைவெளியும்) இல்லாமல் செய்யப்படுவதே பிரவிருத்தி கிரமமாகும்.

இந்த பிரவிருத்தி கிரமம் ஷ்ருதி முதலிய கிரம***ங்***களை காட்டிலும் பலம் குன்றியது காரணம் அதிக இடைவெளி இருப்பது. ஒவ்வொரு கிரமும் அதற்கு பின்புள்ள கிரமத்தை காட்டிலும் பலமுள்ளதாகவும், முன்புள்ளதை காட்டிலும் பலம் குன்றியதாகவும் இருப்பதால் ( பிரவிருத்தியில், செயலில் அதிக நேரம் எடுப்பதால்).

இப்படி பிரயோக விதியானது அதற்கு உதவியாக இருக்கும் ஆறுவிதமான கிரமத்துடன் விளக்கப்பட்டது. அடுத்து மீதமுள்ள அதிகார விதி விளக்கப்படுகின்றது.

## அதிகார விதி நிரூபணம்

*कर्मजन्यफलस्वाम्यबोधको विधिरधिकारविधिः। कर्मजन्य फलस्वाम्यं कर्मजन्यफलभोक्तृत्वम्। स च 'यजेत स्वर्गकामः' इत्यादिरूपः। स्वर्गमुद्दिश्य यागं विदधतोऽनेन स्वर्गकामस्य यागजन्यफलभोक्तृत्वं प्रतिपाद्यते। 'यस्याहिताग्नेरग्निर्हान्दहेत् सोऽग्नये क्षामवतेऽष्टाकपालं निर्वपेत्' इत्यादिनाऽग्निदाहादौ निमित्ते कर्म विदधता निमित्तवतः कर्मजन्यपापक्षयरूपफलस्वाम्यं प्रतिपाद्यते। एवं 'अहरहः सन्ध्यामुपासीत' इत्यादिना शुचिविहितकालजीविनः संध्योपासानाजन्यप्रत्यावायपरिहाररूपफलस्वाम्यं बोध्यते। तश्च फलस्वाम्यं तस्यैव योऽधिकारविशिष्टः, अधिकारश्च स एव यद्विधिवाक्येषु पुरूषविशेषणत्वेन श्रूयते। यथा काम्ये कर्मणि फलकामना, नैमित्तिनिश्चयः, नितये संध्योपासनादौ शुचिविहितकालजीवित्वम्। अत एव ' राजा राजसूयेन स्वाराज्यकामों यजेत' इत्यनेने विधिवाक्येन स्वाराज्यमुद्दिश्य विदधतापि न स्वाराज्यमात्रकामस्य तत्फलभौकतृत्वं प्रतिपाद्यते, किंतु राज्ञः सतः स्वराज्यकामस्यैव, राजत्वस्याप्याप्यधिकारिविशेषणत्वेन श्रवणात्। क्वचितु पुरूषविशेषणत्वेनाश्रुतमप्यधिकारिविशेषणम्। यथाऽध्ययनविधिसिद्धा विद्या, क्रतुविधीनामर्थज्ञानापेक्षणीयत्वेनाध्ययनविधिसिद्धार्थज्ञानवन्तं प्रत्येव प्रवृत्तेः। एवमग्निसाध्यकर्मसु आधानसिद्धाग्निमत्ता। अग्निसाध्यकर्मणामग्यपेक्षत्वेन तद्विधीनामाधानसिद्धागिमन्तं प्रत्येव प्रवृत्तेः। एवं सामर्थ्यमपि 'आख्यातानामर्थ ब्रुवतां शक्तिः सहकारिणी' इति न्यायात् समर्थ प्रत्येव विधिप्रवृत्तेः। तदेवं निरूपितो विधिः।*

அதிகார விதியின் லக்ஷணம் **கர்ம ஜன்ய பலஸ்வாம் யபோதகோ விதி**: (கர்மத்தினால் உண்டாகும் பலனின் எஜமானரை குறித்து போதனை தரும் விதி). சுவர்கம் முதலிய பலன்கள், அந்த பலன்களை அனுபவிக்கும் தகுதி உள்ளவரை பற்றிய அறிவை தருவது. அது யஜேத ஸ்வர்ககாம: முதலிய வாக்கிய***ங்***களால் அறியப்படுவது. இ***ங்***கு ஸ்வர்கம், நிலம், பசு, புத்திரம் முதலிய பலன்களின் மேல் ஆசையுள்ள புருஷனுக்கு விதிக்கப்பட்ட வாக்கியம், அந்தந்த யாகத்தினால் பலனை அனுபவிக்கும் தன்மையை இது நிச்சயிக்கினறது. அதன் பலன்மேல் ஆசையில்லாமல் யாகம் செய்பவனுக்கு அந்தந்த பலன்கள் கிடைக்காது என்று

பொருள், காரணம் அவருக்கு அதன் பலனை தன்னுடையதாக்கும் பாவமானது இல்லை.

**காமிய கர்மம்** எனப்படுகின்ற சுவர்கம் முதலிய பலன்மேல் ஆசைபட்டு செய்யும் கர்ம***ங்***களுக்கு இது சரி, ஆனால் **நித்திய கர்மமான** தினமும் செய்யப்பட வேண்டிய கர்ம***ங்***களிலும், **நைமித்திக கர்மமான** ஏதாவது ஒரு நிமித்தம் கொண்டு (காலம், நேரம் முதலிய) செய்யப்படும் கர்ம***ங்***களில் என்ன ஆகும் என்று கேள்வி எழுகிறது காரணம், யாவஜ்ஜீவனம் அக்னிஹோத்ரம் ஜுஹோதி, யஸ்யாஹிதாக்னேரக்னிர் க்ருஹான் தஹேத் (உயிருள்ள வரை அக்னி ஹோத்தரம் செய்ய வேண்டும், எவனுடைய ஆஹித அக்னி என்னும் அக்னியினால் வீடு எரிந்து போனதோ) ஆகியவைகளில் பலனை பற்றிய எந்த குறிப்பும் இல்லை அதனால் அதனை செய்ய ஒருவரை எப்படி விதியானது தூண்டும் என்பது சந்தேகம். யஸ்யாஹிதாக்னேர் என்ற நைமித்திக யாகமானது வீடு ஆஹித அக்னியால் (அக்னி ஆதான சம்ஸ்காரத்தினால் அடையப்பட்ட) எறிந்து போனதோ அவர் அக்னி தேவதைக்கு எட்டு கபாலம் புரோடாஷம் கொண்டு யாகம் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு என்ன பலன் இருக்க முடியும், பலன் ஒன்றும் கூறாததால் பலன் கூறப்படாத விஷ்வஜித் யாகத்தில் முடிவு செய்யப்பட்டது போல (**விஷ்வஜின் நியாயம்)** சுவர்கமே பலன் என்று கூற முடியாது, காரணம் வீடு எரிந்தது என்பதே இ***ங்***கு நிமித்தமானதால் அதன் பொருட்டுசெய்யபடுவதால் வேறு ஒரு சுவர்கம் என்கிற பலனை ஏற்றால், ஒரு கர்மத்திற்கு இரண்டு காரண***ங்***கள் என்று வாக்கியபேத தோஷமானது சம்பவிக்கும். அதனால் பலனில்லாத யாகமாக இருக்கமுடியாது என்பதால் **தர்மேன பாபமபநுததி** (தர்மத்தினால் பாவம் அழிகின்றது) என்கிற **ராத்திரிசத்ர நியாயம்** கொண்டு நிமித்தம் வீடு எரிந்தது, பலன் பாவம் அழிவது என்று ஆகும். வீடு அழியாமல் ஒருவர் எட்டுகபால புரோடாஷம் அக்னிதேவதைக்கு கொடுத்தால் அவருக்கு பாவம் அழியும் என்கிற பலன் போகாது என்பது பொருள். அதுபோல , நித்திய கர்மமான **அஹரஹர் சந்த்யாமுபாசீத** (தினந்தோரும் சந்தியவந்தகம் செய்யவும்), இ***ங்***கு கர்மம் செய்வதினால் புண்ணியம் அடையப்படாவிட்டாலும் **அகரணே ப்ரத்யவாய:** (செய்யாதிருத்தால் பிரத்யவாயம் என்கிற தோஷம்) செய்யாவிட்டால் பாவம் சம்பவிக்கின்றது. இது பிரத்தியவாய தோஷத்தின் பரிஹாரத்திற்கு என்று ஆகிறது. ஆனால் அது எல்லோருக்கும் பொதுவல்ல, எவர் ஜாதகர்மம், உபநயனம் முதலிய சாஸ்திரத்தில் குறிப்பிட்ட கர்மத்தினால் சரியான நேரத்தில் சம்ஸ்காரிக்கப்பட்டுள்ளாரோ, அவரால் செய்யப்பட்ட சந்த்யாவந்தனம் மட்டுமே பிரத்யவாயத்தினை நீக்குவதாக ஆகிறது.

அதனால், பலனை அனுபவிப்பவர் என்பது எவர் தகுதியுடையவரோ அவரே என்பது நிச்சயமாகின்றது தகுதியும் விதி வாக்கியத்தினால் ஒருவருக்கு போதிக்கப்பட்டது. நித்திய கர்மத்தில் சாஸ்திரத்தில் குறிப்பிட்ட முறையில் வாழ்க்கை, நைமித்திகத்தில் அந்தந்த நிமித்த***ங்***கள், காம்ய கர்மத்தில் பலனின் மேலுள்ள ஆசை என்று தகுதி மாறுகிறது. காமிய கர்மத்தினை போல காமிய

கர்மம் எப்படி மாறுபடுகின்றது என்று கேட்டால் ஒரு பலனின் மேலுள்ள ஆசையினால் செய்யப்படுவது காமிய கர்மம், ஆசையில்லாதவர் (பலனின்) அதை செய்வதில்லை. ஆனால் நித்திய மற்றும் நைமித்திகத்தில் இப்படி இல்லை என்பதாலேயே காமிய கர்மத்திலிருந்து வேறுபடுகின்றது.

**பலஸ்வாமித்வம்** செய்யும் கர்மத்தினால் உண்டாகும் பலனை அனுபவிப்வர் என்று மாத்திரம் கொண்டால் ***சாங்கர்யம்*** என்கிற தோஷம் உண்டாகும். சா*ங்*கர்யம் என்றால் கலப்படம். அதாவது பிராஹ்மணரின் கர்மத்தை க்ஷத்ரிய , வைஷ்யரும். க்ஷத்ரிய வைஷ்யரின் கர்ம*ங்*களை மற்றவர்களும் செய்வது என்பது, தனக்கு விதிக்கப்பட்டதை செய்யாமல் மற்றவருக்கு விதிக்கப்பட்டதை செய்வது, சா*ங்*கர்ய தோஷம் ஆகும். அதனால் பலஸ்வாமி, யார் எந்த கர்மத்தினை செய்ய விதிக்கப்பட்டதோ அதுபோல உள்ள ஒரு அதிகாரி (தகுதியான) புருஷர் என்பது முடிவு.

இதை விளக்க ஒரு உதாரணத்தை காண்போம், **இராஜா இராஜஸூயேன ஸ்வாராஜ்ய காமோ யஜேத** (இராஜாவானவர் சொந்த ராஜியத்தை அடைய ஆசைகொண்டு இராஜஸூயம் என்கிற யாகத்தை செய்வாராக) என்ற வாக்கியத்தில் இராஜா என்னும் விசேஷணத்தினால் அதிகாரி புருஷன் மற்றவர்களிடமிருந்து (பிராஹ்மணர் வைஷ்யர் முதலிய) விளக்கப்பட்டுள்ளார். இ*ங்*கு மீமாம்ஸா சூத்திரத்தில் உள்ள **அவேஷ்ப்யதிகரணம்** என்கிற அதிகரணத்தின் நியாயப்படி இராஜா என்னும் பதத்திற்கு க்ஷத்ரியர் என்று பொருள் கொள்ள வேண்டும் என்பது சிந்தாந்தம். அதனால் சுயராஜியத்தை அடைய விருப்பமுள்ளவரான ஒரு க்ஷத்ரியர் இராஜசூய யாகம் செய்ய அதிகாரி ஆகிறார். பிராஹ்மணரோ வைஷ்யரோ அல்ல. சுயராஜ்யம் என்பது மஹாராஜ், சாம்ராட் போன்று ஒரு பதவி என்பது அறிய வேண்டும்.

எல்லா இடத்திலும் புருஷனுடைய விசேஷணமாக !விசேஷ குறிப்பு) அதிகாரியானவர் குறிப்பிடப்படவேண்டும் என்பது இல்லை. சில இட*ங்*களில் அதிகாரி பற்றிய குறிப்பு தெளிவாக கொடுக்கப்படாமல் இருக்கும். அ*ங்*கு அதிகாரியை பிரித்து புரிந்து கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு, **ஸ்வாத்யாயோ அத்யேதவ்ய** என்கிற அத்யயண விதியை எடுத்துக்கொள்வோம். சுவ அத்யாயத்தை (இது முன்பே பார்க்கப்பட்டதால் விளக்கமில்லை) படிப்பது என்று கூறப்பட்ட விதியில் அதிகாரி பற்றிய குறிப்பு இல்லை. பிராஹ்மண பாகமும், மந்திர பாகமும் பொருளுடன் படித்து பிரயோகமும், கர்மத்தின் சுவரூபத்தையும் அரிந்தாலே யாகமானது முறையாக நடக்கமுடியும். அதனால் இப்படிப்பட்ட விதியையுடையவனே அதிகாரியாகிறார்.

மற்றொரு உதாரணம், ஷ்ருதியில் கூறப்பட்ட எல்லா கர்ம*ங்*களும் நெருப்பு கொண்டு நடத்தப்படவேண்டியதால், நெருப்பு முக்கியமானதாக ஆகிறது. இந்த நெருப்பு எந்த இடத்திலிருந்து எடுத்தாலும் சரி என்று இல்லை (அடுப்பு முதலிய)

இதற்கு **அக்னி ஆதானம்** என்ற அக்னியை ஸ்தாபனை செய்யும் கர்மம் அவசியமாகின்றது. இது **வஸத்தே ப்ராஹ்மனோக்னீனாததீத** (வசந்த காலத்தில் பிராஹ்மணன் அக்னியை ஸ்தாபனை செய்யவும்) என்ற விதிவாக்கியத்தால் அக்னீ ஆதானம் என்ற கர்மத்தினால் அடையப்பட்ட நெருப்பு என்பது தீர்மானமாகின்றது. அப்படிபட்ட நெருப்புடையவர் இ*ங்*கு அதிகாரியாகின்றார்.

மேலும், சில இட*ங்*களில் கேட்பது, பார்பது,, நடப்பது போன்ற செயல்களும் ஒரு அதிகாரியின் விசேஷணமாக கூடும். இது சாமர்த்யம் என்கிற விசேஷணம் எனப்படுகின்றது. ஹோமத்திற்கு முன்பு **ஆஜ்யாவேக்ஷணம்** என்கிற செயல் குறிப்பிடபட்டுள்ளது, கண் கொண்டு நெய்யை காண்பது, அபூர்வம் உண்டு செய்யும் கர்மம் இந்த கர்மத்தை செய்ய கண்களின் ஒளி என்ற சாமர்த்யம் இருப்பது அவசியமாகின்றது. மேலும், ஹோம மண்டபத்தை சுற்றுவது முதலான (பிரதக்ஷிணம்) கர்ம*ங்*களில் கால்களின் அவசியம் உண்டாகின்றது. அதனால், எந்தவித ஊணமும் இல்லாது இருப்பது அதிகாரியின் சாமர்த்யம் (தகுதி) என்கிற விசேஷணமாகின்றது.

விதியானது சாமர்த்யம் உள்ளவரை மாத்திரம் பிரவிருத்தியில் ஈடுபடுத்த முடியும். இ*ங்*கு சூத்திரர் மற்றும் பெண்கள் அதிகாரி இல்லை என்பதை தெரிந்து கொள்ளவேண்டும். உபநயனம் என்கிற சம்ஸ்காரம் இருவருக்கும் இல்லாததால், அத்யயனமும் அதை தொடர்ந்து ஆதானமும் இல்லாததாகின்றது என்பதால். **ந ஸ்த்ரீ ஷுத்ரௌ வேதமதீயேதாம்** (பெண்கள் மற்றும் சூத்திரருக்கு வேதம் படிப்பிக்காதீர்) என்று வாக்கியம் இருவருக்கும் வேதம் அத்யயனம் செய்வதை, செய்விப்பதையும் தடுக்கிறது. சில இட*ங்*களில் சில கர்ம*ங்*களை மாத்திரம் இவர்கள் செய்ய, அந்த பாகம் மாத்திரம் கூறப்பட்டு, விளக்கப்பட்டு அந்த யாகம் பூர்த்தி செய்யப்படுகின்றது. இப்படி பலஸ்வாமித்வத்தை போதிக்கும் அதிகாரி விதி நன்கு விளக்கப்பட்டது. இதனால் சுருக்கமாக நான்கு விதிகளும் விளக்கப்பட்டதாகின்றது.

இந்த கிரந்தத்தின் துவகத்தில் வேதம் ஐந்து வகைப்படுகின்றது என்று கூறி அது விதி, மந்த்ரம், நாமதேயம்,நிஷேதம் மற்றும் அர்த்தவாதம் என்று கூறப்பட்டது. இதில் விதியானது விளக்கபட்டவுடன், இந்த கிரமத்தில் அடுத்து உள்ள மந்த்ரம் துவ*ங்*குகின்றது.

## மந்த்ர நிரூபணம்

*प्रयोगसमवेतार्थस्मारका मन्त्राः। तेषां च तादृशर्थस्मारकत्वेनैवार्थवत्तवम्। नतु तदुच्चारणमदृष्टार्थं संभवति, दृष्टफलकत्वेऽदृष्टकल्पनाया अन्याय्यत्वात्, न च*

*दृष्टस्यार्थस्मरणस्य प्रकारान्तरेणापि संभवान्मन्त्राम्नानं व्यर्थमिति वाच्यम्, मन्त्रैरेव स्मर्तव्यमिति नियमविध्याश्रयणात्।*

மந்த்ரத்தின் லக்ஷணம் **ப்ரயோக சமவேதார்தஸ்மாரகா** (பிரயோகம் அனுஷ்டானம் சம்பந்தபட்ட விஷய***ங்***களை, தேவதை திரவியம் முதலிய நமக்கு நினைவூட்டுவது மந்த்ரம்), விதி நமக்கு பிரயோஜனமுள்ள யாகம் முதலிய கர்ம***ங்***களை விதித்து தன்னுடைய வேலையை செய்து முடித்ததாகிறது.. அதுபோல, மந்த்ரம் அந்த கர்மத்துடன் சம்பந்தமுள்ள திரவியம், தேவதை முதலியவற்றை நமக்கு நினைவூட்டி பிரயோஜனம் உள்ளதாகின்றது என்பதால் இதன் பிரமாணத் தன்மை நிரூபணமாகின்றது. சில மந்த்ர***ங்***கள் இதுபோல் இருந்தாலும் வேறு சில மந்த்ர***ங்***கள் யாகம் முதலிய கர்ம***ங்***களுடன் சம்பந்தப்படாமல் எதனையும் நினைவூட்டாமல் இருப்பதால், முதல் வகை த்ருஷ்டப்பயனை தருவதாகவும், இரண்டாம் வகை அத்ருஷ்ட பயனை தருவதாகவும் ஏற்க வேண்டியுள்ளது. இப்படி ஏற்பதற்கு காரணம், **த்ருஷ்ட பலகத்வே சதி அத்ருஷ்ட பரிகல்பனா அந்யாயத்வாத்** (கண்கூடாக உள்ள பலன்,பயன் உள்ள போது அதிருஷ்ட பலனை கற்பனை செய்வது சரியானதல்ல) என்கிற நியாயப்படி அந்த மந்த்ர***ங்***களினை உச்சாரணம் செய்வது அதிருஷ்ட பலனை தருவது என்று கூறமுடியாது. திருஷ்ட பிரயோஜனம் இ***ங்***கு மந்திரம் அது சம்பந்தபட்ட திரவிய, தேவதைகளை நினைவூட்டுவதே.

சரி. இந்த பணியை வேறு ஒரு வழியினால் சம்பந்தத்தை நினைவூட்டுவதாக ஏன் ஏற்ககூடாது என்றால் மந்திரத்தால் மட்டுமே நினைவூட்டபடவேண்டும் வேறு வழிமுறைகளால் அல்ல என்கிற நியம விதியினால், நினைவூட்டும் தொழில் மந்த்ர***ங்***களால் மட்டும் என்று ஏற்கபட்டதால்.

## நியம விதி நிரூபணம்

*नानासाधनसाध्यक्रियायामेकसाधनप्राप्तावप्राप्तस्यापरसाधनस्य प्रापको विधिर्नियमविधिः। यथाहुः 'विधिरत्यन्मप्राप्तौ नियमः पाक्षिके सति। तत्र चान्यत्र च प्राप्तौ परिसंख्येति गीयते' इति। अस्यार्थः– प्रमाणान्तरेणाप्राप्तस्या प्रापको विधिरपूर्वविधिः, यथा–यजेत स्वर्गकामः' इत्यादिः, स्वर्गाथकयागस्य प्रमाणन्तरेणप्राप्तस्यानेन विधानात्। पक्षेऽप्राप्तस्य वैतुष्या पक्षेऽप्राप्तप्रापकत्वमिति चेत्,–इत्थम्। अनेनह्यवघातस्य वैतुष्यार्थतत्वं न प्रतिपाद्यते; अन्वयव्यतिरेकसिद्धत्वात्। किंतु नियमः स चाप्राप्तांशपूरणम्। वैतुष्यस्य हि नानोपायसाध्यत्वाद्यदावघातं परित्यज्य उपायान्तरं ग्रहीतुमारभते, तदावघातस्याप्राप्तत्वेन तद्विधाननामकमप्राप्तांशपूरणमेवानेन विधिवा क्रियेते। अतश्च*

*नियमविधावप्राप्तांशपूरणात्मको नियम एव वाक्यार्थः। पक्षेऽप्राप्तावघातस्य विधानमिति यावत्।*

ஒரு காரியத்தை செய்ய இரண்டோ அல்லது அதற்கு மேலோ வழிகள் இருப்பின் அதில் ஒன்று சாத்யமான காரியத்தை அடையும் வழியாக இருந்து மற்றவை அவ்வாறு இல்லாதபோது, வேறு வழிகளில் இவை சாத்யத்தை அடையாதபோது, எந்த விதி இதனை (காரியத்தை) அடையும் வழியாக செய்கிறதோ அது நியம விதியாகும்.
இதனை குறித்து முன்னோர்கள் கூறுகிறார்கள்.

**விதிரத்யந்தமப்பிராப்தே நியம: பாக்ஷிகே ஸதி !**
**தத்ர சான்யத்ர ச ப்ராப்தே பரிசங்க்யேதி கியதே !!** என்று

அதாவது, வேறு பிரமாணங்களால் எதனுடைய அறிவு நமக்கு உண்டாவதில்லையோ அதனை விதிக்கும் விதியை ஆபூர்வவிதி என்று கூறுவர். ஒரு சமயத்தில் (பக்ஷத்தில்) அடையப்படாததை அடைவிப்பதாக செய்யும் விதிக்கு நியம விதி என்று பெயர். அங்கும் மற்ற இடத்திலும் ஒரே நேரத்தில் ஒரு விதி அடையப்படும் போது மற்ற இடங்களில் அது பிராப்தி ஆவதை தடுத்து நிறுத்துவது பரிசங்க்ய விதி எனப்படுகின்றது.

ஒவ்வொன்றாக அபூர்வ, நியம மற்றும் பரிசங்க்யா விதி இவற்றை உதாரணத்துடன் காண்போம்.

**அபூர்வ விதி** - சாத்யத்தை அடையும் பொருட்டு உள்ள இந்த ஒரு வாக்கியத்தை விடுத்து, வேறு வேதத்தில் கூறப்பட்ட வாக்கியங்களோ அல்லது உலகத்தில் உபயோகப்படுத்தப்பட்ட வாக்கியமோ,பிரமாணமோ உபயோகமற்றதாக உள்ளதோ அப்படிப்பட்ட விதி வாக்கியம் ஆபூர்வ விதி ஆகும். உதாரணம், யஜேத ஸ்வர்ககாம: என்கிற வாக்கியம். இங்கு சாத்யம் - ஸ்வர்கம், அதனை அடையும் சாதனம் - யாகம். இந்த வாக்கியத்தை தவிர வேறு ஒரு வாக்கியமும் சுவர்கத்தை அடைய சாதனமாக கூறப்படவில்லை. யாகமே சாதனம் என்பது இதனால் மாத்திரமே அறியப்படுகிறது. சுவர்கம் என்னும் சாத்யத்தை அடைய வேறு பிரமாணத்தினால் இந்த சாத்ய-சாதன பாவம் நிரூபிக்கப்படாததால் இந்த விதி வாக்கியமானது அபூர்வ விதி எனப்படுகிறது.

**நியம விதி** - ஒரு பக்ஷத்தில் (சமயத்தில்) பிராப்தியாகாத ஒரு நிலையில் எந்த விதியானது அதை பிராப்தி அடைவிக்கிறதோ அது நியம விதி எனப்படுகிறது. பக்ஷத்தில் என்றால் சில நேரத்தில் அது விதி செய்வதும் சில நேரத்தில் அது விதி செய்யாததுமாக இருப்பது. உதாரணம் ,முன்பே கண்டுள்ள விரீஹீன் ஆவஹந்தி என்கிற விதி, இது நெல்லில் இருந்து தோலை நீக்கி (உமிநீ

அரிசியை பிரிப்பது இ***ங்***கு உமி நீக்கும் செயல் பல வழிகளில் செய்யபடலாம், நகத்தால் உரித்தோ, உரலில் வைத்து இடித்தோ, கல் கொண்டு தேய்த்தோ எப்படி வேண்டுமானாலும் செய்யபடமுடியும் என்பதால். இ***ங்***கு இந்த விதி வேறு முறையினில் பிராப்த்தி அல்லாத உமி நீக்கம் என்ற செயலில் உரலில் இட்டு இடித்து உமி நீக்க வேண்டும் . என்கிற நியமத்தை கூறுவதால் காரணம். ஒரு முறை கொண்டு செய்வது என்னும் நேர்மடை (அன்வயம்) பிரமாணமும், அதனால் செய்யாமல் போனது என்னும் எதிர்மடை ( வியதிரேகம்) பிரமாணமும் கொண்டு இது அல்லாமலும் உமிநீக்கம் ஆவதால், இ***ங்***கு நாம் அறியாததை இந்த விதி கூறாமல், நாம் செய்ய வேண்டிய (அறியாத முறையை கூறுவது என்பதால்) நியம விதி எனப்படுகிறது. அதனால் நியம விதியானது அப்பிராப்தமானதை விதிக்கிறது என்றல்லாமல், அப்பிராப்தமான அம்சத்தை மட்டும் பூர்த்தி செய்கிறது என்று ஆகிறது.

*उभयोश्च युगपत्प्राप्तावितरव्यावृत्तिपरो विधिः परिसंख्याविधिः। यथा– 'प ंपनखा भक्ष्याः' इति। इदं हि वाक्यं न ंपनखभक्षणपरं, तस्य रागतः प्राप्तत्वात्; नापि नियमपरं, ंपनखांपनखभक्षणस्य युगपत्प्राप्तेः पक्षेऽप्राप्त्यभावात्। अत इदमंपनखभक्षणनिवृत्तिपरमिति भवति परिसंख्याविधिः।*

**<u>பரிச*ங்*க்யா விதி</u>** - இரண்டு சாதன***ங்***கள் ஒரு சாத்யத்தை அடைய பிராப்தியாகும் போது மற்ற சாதன***ங்***களை விளக்குவதாக உள்ள விதி பரிச***ங்***க்யா விதியாகும். நியம விதியானது நமக்கு அடையப்படாததான அம்சத்தை பூர்த்தி செய்வதாக இருந்தால், பரிச***ங்***கயா விதியானது மற்றவற்றை விளக்குவதாக உள்ளது.. உதாரணம் **<u>பஞ்சபஞ்சநகா பக்ஷ்யா</u>** என்கிற வாக்கியம், ஐந்து நகமுள்ள ஐந்து மிருக***ங்***களை மட்டும் உண்ணவேண்டும் என்று விதிக்கவில்லை. காரணம், உண்பது என்பது

**<u>ராகத: பிராப்தி</u>** (ஆசையினால் உண்டாவது) என்பதால் அதை விதிக்க இயலாது. வேறு பலனை கற்பனை (அபூர்வம்) செய்வது இயலாது, காரணம் உணவு திருப்தியை உண்டாக்கும் என்கிற திருஷ்ட பலன் இருப்பதால். வேதம் இதனை (அடையப்பட்ட) விதிக்க முடியாது என்பதாலும் இது அபூர்வ விதியாக ஆக முடியாது. சரி நியம விதியாக ஏற்கலாம், ஐந்து நகமுள்ளவையும் இந்த ஐந்தும் மற்றவைகளும் ஒரே நேரத்தில் பிராப்தியாகும் போது அவை எல்லாம் கழிக்கப்படலாம் என்று ஆகிறது என்பதால் இ***ங்***கு ஒரு பக்ஷத்தில் அப்பிராப்தி இல்லை. அதனால் இது நியம விதியும் ஆகமுடியாது. ஆகையால் இது பரிச***ங்***க்யா விதியாக மாத்திரம் ஆகிறது காரணம் இ***ங்***கு ஐந்து நகமுள்ள இந்த ஐந்து மிருக***ங்***கள் மட்டும் உண்ணலாம். மற்றவை அல்ல என்று மற்ற மிருக***ங்***களை விலக்குவதாக உள்ளதால். இது பரிச***ங்***கியா விதியாகிறது.

ஐந்து நகமுள்ள ஐந்து மிருக***ங்***கள் ஷல்ய, ஷ்வாவித:( நரி ), கோதா (உடும்பு), ஷஷ: (முயல்). கூர்ம (ஆமை) ஆகியவை.

*सा च द्विविधा–श्रौती लाक्षणिकी चेति। तत्र 'अत्र ह्योवावयन्ति' इति श्रौती परिसख्या। एवकारेण पवमानातिरिक्तस्तोत्रव्यावृत्तेरभिधानात्। ' 'प 'पनखा भक्ष्याः' इति तु लाक्षणिकी, इतरनिवृत्तिवाचकपदाभावात। अत एवैषा त्रिदोषग्रस्ता।*

இந்த பரிச***ங்***க்யா விதி இரண்டு வகைப்படுகின்றது. ஷ்ரௌதீ, மற்றும் லாக்ஷணகீ.

## ஷ்ரௌதீ பரிச***ங்***க்யா

எ***ங்***கு நிவிருத்தி செய்யும் சொல்லான (அல்லது) பகுதி வேற்றுமையான ந***ஞ்*** உள்ளதோ அல்லது ஏவ(மட்டும்) முதலிய சொற்கள் உள்ளதோ அ***ங்***கு ஷ்ரௌதீ பரிச***ங்***க்யா உள்ளது எனக்கொள்ளப்படுகின்றது. ஷ்ரௌதீ என்றால் கேட்பதில் அல்லது வேதத்தில் , வேதம் கேட்கப்பட்டு படிக்கப்படுவதால் அதில் கேட்கப்படும் சொல் என்றாகிறது. நிவிருத்தி செய்யும் சொல்லானது தெளிவாக தரப்பட்டிருப்பதால் அது ஷ்ரௌதீ பரிச***ங்***க்யா வகையை சேர்கிறது. உதாரணத்திற்கு, பிரகிருதியான ஜ்யோதிஷ்டோமத்திலிருந்து, விகிருதியில் கொண்டு செல்லப்படும் ஸ்தோமம் அதாவது ஸ்தோத்திரத்தின் (சாம காண மந்த்ரம்) வரும் எண்ணிக்கை அதிகமாக செய்ய வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் ஸ்தோத்ரத்தின் எண்ணிக்கையிணை சரி செய்ய வேண்டி என்ன செய்ய வேண்டும் என்ற சந்தேகம் எழும் போது, ஆவாபம் செய்க என்ற நியமம் வருகிறது. ஆவாபம் என்றால் வேறு இடத்திலிருந்து சாம மந்த்ரத்தை கொண்டு வந்து சேர்ப்பது இந்த சாம மந்திர***ங்***களை எ***ங்***கிருந்து கொண்ட வந்து எப்படி சேர்ப்பது எனும் போது, **த்ரீணி ஹ வை யஞ்ஸ்யோதரணி** ( மூன்று சந்தமே ய***ஞ்***தின் வயிரு ஆகும்) இந்த மூன்று சந்தம் (விருத்தம்) காயத்ரீ, ப்ருஹதி மற்றும் அனுஷ்டுப் ஆகும். இவை பவமான ஸ்தோத்திரத்தில் காணப்படுவது. அதனால் உதாரணத்தில் தரப்படுகின்ற, **அத்ர ஹ்யேவாவபந்தி** (இ***ங்***கு மாத்திரமே ஆவாபம் செய்கிறார்கள்) என்னும் வாக்கியத்தில் அத்ர (இ***ங்***கு) என்னும் சொல் பவமான ஸ்தோத்திரத்தை குறிப்பதாகின்றது ஏவ (மட்டும்) என்னும் சொல் மற்ற ஸ்தோத்திரத்திலிருந்து கொண்டு வரும் நிலையிருப்பதை தடுக்கிறது பவமானத்தை விடுத்து மற்ற ஸ்தோத்திரத்தில் ஆவாபம் செய்யக்கூடாது என்பதை நினைவூட்டுகின்றது. இ***ங்***கு ஏவ (மட்டும்) என்னும் சொல் நிவிருத்தி செய்யும் சொல்லாக இருப்பதால் இது ஷ்ரௌதீ பரிச***ங்***க்யா ஆகும்.

## **லாக்ஷணகீ பரிசங்க்யா**

லக்ஷணயால் நிவிருத்தி செய்யும் வாக்கியமானது லாக்ஷணகீ பரிச***ங்***க்யா வகையை சேர்கிறது. உதாரணத்திற்கு முன்பு கண்ட ப***ங்***ச ப***ங்***சநகா பக்ஷ்யா என்னும் வாக்கியம் இது ராகத்தினால் அடையப்படும் உண்ணும் செயலை விதிக்காமல் ஐந்து நகமுள்ள ஐந்து குறிப்பிடபட்ட மீருக***ங்***களை தவிர வேறு எதையும் உண்ணுதல் கூடாது என்ற லக்ஷணையால் கூறுவதால் இது லாக்ஷணகீ பரிச***ங்***க்யா எனப்படுகின்றது..

*दोषत्रयं च–श्रुतहानिः, अश्रुतकल्पना, प्राप्तबाधश्चेति। तदुक्तम्–'श्रुतार्थस्य परित्यागादश्रुतार्थप्रकल्पनम्। प्राप्तस्य बाधादित्येवं परिसंख्या त्रिदुषणा' इति; श्रुतस्य ंपनखीक्षणस्य हानात, अश्रुताऽपनखभक्षणनिवृत्तेः कल्पनात, प्राप्तसय चांपनखभणस्य बाधादिति। अस्मिंश्च दोषत्रये दोषद्वयं शब्दनिष्ठम्। प्राप्तबाधास्त्वर्थनिष्ठ इति दिक्। येषां तु प्रयोगसमवेतार्थस्मारकत्वं न संभवति तदुच्चारणस्थानन्यगत्याऽदृष्टार्थकत्वं कल्प्यत इति नानर्थक्यमिति।*

இந்த லாக்ஷணகீ பரிச***ங்***க்யாவில் மூன்று வகையான தோஷ***ங்***கள் உள்ளது. இந்த தோஷ***ங்***களானது - ஷ்ருதஹானி, அஷ்ருத கல்பனா, பிராப்தபாதம் என்பது.

**ஷ்ருதஹானி** என்பது நாம் கேட்கும் ( நம்மால் கேட்கப்படும்) ஒரு சொல்லின் பொருளை விடுப்பது ப***ங்***சப***ங்***சநகா பக்ஷ்யா என்னும் இடத்தில் ஐந்து நகமுடைய ஐந்து மிருக***ங்***களை உண்ண வேண்டும் என்னும் பொருள்படும் வாக்கியத்தில் இந்த பொருளை விட்டு (நிவிருத்தி பரமாக வாக்கியத்தின் பொருள் ஏற்பது) விடுவதே ஷ்ருதஹானி (கேட்கபடுவதை விடுவது) என்ற முதல் தோஷம் ஆகும்.

**அஷ்ருதி கல்பனா** என்பது கேட்கப்படாத பொருளை ஒரு வாக்கியத்திற்கு கற்பனை செய்வது. ப***ங்***ச ப***ங்***ச முதலிய இந்த வாக்கியத்தில் நேரடியான பொருள் ராகத்தினால் (ஆசை) அடையப்படுவதால் அதை விதிப்பதாக ஏற்க முடியாது என்கிற காரணத்தினால், கூறப்பட்ட ஐந்து நகமுள்ள இந்த ஐந்து மிருகத்தை தவிர வேறு எதுவும் உண்ணுவது கூடாது என்று பொருள் கற்பனை செய்யப்படுவது. இரண்டாம் தோஷம் ஆகும்.

**பிராப்தபாத** என்பது அடையப்படும் பொருள் நிராகரிக்கப்படுவது என்னும் தோஷம் மூன்றாவது. அதாவது ஐந்து நகமுள்ள ஐந்து மிருக***ங்***கள் உண்ணலாம் என்ற பொருள் நமக்கு கிடைக்கும் போது இது ராகத்தினாலேயே அடையப்படும் விஷயமானதால் இந்த ஐந்தை தவிர மற்ற மிருக***ங்***களும் அது

போல உண்ணப்படலாம் என்ற பொருள் நமக்கு கிடைக்கும் போது அதனை விட்டு நிவிருத்தி பரமாக பொருளை ஏற்று நேரடியாக அடையப்பட்ட பொருள் நிராகரிக்கபடுவதால் பிராப்தபாதம் என்கிற தோஷம் ஏற்படுகின்றது.

இதில் (இந்த மூன்று தோஷ***ங்***களில்) முதலி இரண்டு வகையும் (ஷ்ருதஹானி, அஷ்ருத கல்பனா) சொல்லில் உள்ளது. பிராப்த பாதம் என்னும் தோஷமோ அந்த சொல்லின் பொருளில் உள்ளது என்பதை அறியவேண்டும். அதனால் , மந்த்ர***ங்***கள் எ***ங்***கு நேரடியாக எ***ங்***கும் வினியோகம் செய்யப்படுவதாக இல்லையோ அ***ங்***கெல்லாம் அந்த மந்திரத்தின் உச்சாரனை அதிருஷ்டபலனிற்காக என்று ஏற்கப்படுகின்றது. மந்த்ரம் எல்லாம் ஒரு செயலை குறிப்பதாக இருக்கிறது ஒன்றும் பொருளற்றது இல்லை என்ற மீமாமஸை சித்தாந்தத்தினால் இப்படி இதற்கு ஒரு அதிருஷ்டபலன் கூறப்படுகிறது. இதனால் மந்திர***ங்***கள் எதுவும் பொருளற்றது இல்லை என்பது நிரூபிக்கப்பட்டது..

## **நாம தேயம்**

*नामधेयानां च विधेयार्थपरिच्छेदकतयार्थवत्त्वम्। तथा हि– 'उद्भिदा यजेत पशुकामः' इत्यत्रोद्भिच्छब्दो यागनामधेयम्, तेन च विधेयार्थपरिच्छेदः क्रियते। तथा हि–अनेन वाक्येनाप्राप्तत्वात्फलोद्देशेन यागो विधीयते। तत्र कोऽसौ यागविशेष इत्यपेक्षायामुद्भिच्छब्दादुद्भिद्रूपो याग इति ज्ञायते। उद्भिदा यागेन पशुं भावयेदि त्यत्र सामानाधिकरण्येन नामधेयान्वयात्।*

மந்த்ர பாகமான வேதமானது என்ன என்று விளக்கிய பின்பு கிரம பிராப்தியாக நாமதேயம் விளக்கப்படுகிறது. நாமதேயம் என்றால் கர்மத்திற்கு கொடுக்கப்பட்ட பெயர். நாமதேயமானது விதி வாக்கியத்தினால் போதிக்கப்பட்ட யாகம் முதலிய கர்ம***ங்***களின் தனித்தன்மையை (மற்ற கர்ம***ங்***களில் இருந்து வேறுபடுத்தி) நிரூபிக்கின்றது. ஜ்யோதிஷ்டோமம் என்னும் யாகம் தர்ஷபூர்ணமாசத்திலிருந்து வேறுபட்டது என்பது போல. உதாரணத்திற்கு **உத்பிதா யஜேத பஷுகாம:** என்ற யாகம் பசுவினை அடையும் ஆசையுள்ளவன் உத்பித் என்கிற யாகத்தினை செய்யவும் என்று கூறுவதின் பேரில் தர்ஷபூர்ணமாசம், ஜ்யோதிஷ்டோமம் முதலிய யாக***ங்***களிலிருந்து வேறுபடுத்தப்படுகின்றது. நாமதேயம் என்பதும் தர்மத்திற்கு பிரமாணம் என்பது விள***ங்***குகின்றது. இந்த உத்பித் என்கிற சொல் யாகத்தின் பெயர் என்று எடுக்கப்படவேண்டும், அப்படியில்லாமல் உத்பித் என்னும் திரவியத்தை குறிப்பிடுவதாகவும் எடுக்கமுடியும் என்பதினால் என்று கேள்வி எழலாம். இந்த வாக்கியமானது பசுவினை பலனாக அடையவேண்டிய யாகத்தை செய்ய தூண்டுகின்றது. **யாகேன**

**பஷூன் பாவயேத்** (யாகத்தினால் பசுவினை அடையுங்கள்) என்று இந்த விதியை கேட்டு நம்முடைய பிரவிருத்தி எந்த யாகத்தினை செய்ய வேண்டும் என்பதினை அறிய வேண்டி உண்டாகும், அப்பொழுது உத்பித் யாகத்தினால் என்ற பதிலானது நம்முடைய ஆக்கா*ங்*ஷையினை விளக்குகின்றது. இ*ங்*கு உத்பித் என்னும் சொல் ஒரு யாகத்தின் பெயரை குறிப்பிடுவதாக உள்ளதால் இந்த வாக்கியமானது உத்பத்தி விதி வகையை சேர்கிறது. இது மீமாம்ஸையில் உத்பித் யாகத்தினால் பசுவினை பாவனை செய்வீர்களாக என்ற பொருள் படும்படியாக ஆகிறது. இ*ங்*கு உத்பிதா மற்றும் யாகேன இந்த இரண்டு சொற்களிலும் மூன்றாம் வேற்றுமையான கொண்ட பதமாக இருப்பதால் ஒரே வேற்றுமையும், ஒரே வசனமும் (ஒருமை) உள்ளதால் இந்த இரண்டு சொற்களிற்க்கும் ஆதாரமானது ஒன்றாக உள்ளது. இதை சாமானாதிகரண்யம் என்று கூறுவர். சாமானாதிகரணம் இரண்டு சொற்கள் ஒரே ஆதாரத்தை (பொருள்) உடையதாக இருப்பதால் (இ*ங்*கு ஒரே வேற்றுமை மற்றும் வசனம்) கூறப்படுவது. இ*ங்*கு அப்படி இருப்பதால் இந்த இரண்டு சொற்களிற்கும் சம்பந்தம் உண்டாவதில் எந்த தவறுமில்லை.

*नामधेयत्वं च निमित्तचतुष्टयात्। मत्वर्थलक्षणाभयाद्वाक्यभेदभयात्तत्प्रख्यशास्त्रात्तद्व्यपदेशाच्चेति। तत्र ' उद्भिदा यजेत पशुकामः' इत्यत्र 'उद्भित्' शब्दस्य यागनामधेयत्वं मत्वर्थलक्षणाभयात् । तथा हि न तावदनेन वाक्येन फलं प्रति यागविधानम्। तं प्रति च गुणविधानं युज्यते, वाक्यभेदापत्तेः। उद्भिच्छब्दस्य गुणसमर्पकत्वे च यागस्याप्यप्राप्तवात् गुणविशिष्टकर्मविधानं वाच्यम्। उद्भिद्वता यागेन पशुं भावयेदिति विशिष्टविधो च मत्वर्थलक्षणेत्युक्तमेव।*

இந்த நாமதேயமானது நான்கு காரண*ங்*களினால் ஏற்கப்படுகிறது. மத்வர்த்த பயத்தினால், வாக்கியபேத பயத்தினால், தத்பிரக்யா சாஸ்திரத்தினால் மற்றும் தத்வ்யபதேஷத்தினால்.

## மத்வர்த்த பயத்தினால் நாமதேயத் தன்மை

உத்பிதா யஜேத பஷூகாம: என்கிற வாக்கியத்தில் உத்பித் என்கிற சொல் யாகத்தின் பெயரினை குறிக்கிறது என்று ஏற்றது மத்வர்த்த பயத்தினால்.

இ*ங்*கு உத்பிதா யஜேத பஷூகாம: என்பதில் பசு என்கிற பலனை அடைய யாகமும் யாகத்தினை நடத்த உத்பித் என்று பொருள் பட **யாகேன பஷூம் பாவயேத், உத்பிதா யாகம் ச பாவயேத்** என்ற கொண்டால், எந்தவித யாகமும் பசு என்கிற பலனை தருவதாக ஆகிவிடும் என்கிற தோஷமும், ஒரே வாக்கியத்தினால் பசு என்கிற பலனை அடைய யாகம் என்கிற விதியும் உத்பித்

யாகத்திற்கு சாதனமாக என்ற இரண்டாவது விதியும் எற்கப்படவேண்டியதாகும். இப்படி ஒரே வாக்கியம் பல விதிகளை ஏற்கப்படவேண்டியதாகும். இப்படி ஒரே வாக்கியம் பல விதிகளை கொண்டதாக இருந்தால் அது வாக்கிய பேதம் என்கிற தோஷத்திற்கு காரணமாகும்.

குணமாக ஏற்றால், அதாவது உத்பித் என்கிற குணம் திரவியத்தினால் எந்த யாகம் உண்டாகுமோ அதனால் பசு என்கிற பலனை அடையு***ங்***கள் என்று பொருள் தத்னா ஜுஹோதி யை போல கொண்டால் என்றால், இ***ங்***கு அது ஏற்கமுடியாது காரணம் ஒரு வாக்கியத்தை குணமாக ஏற்க பலனை குறித்த வேறு வாக்கியம் இருத்தல் அவசியமாகும் **தத்னா ஜுஹோதி** என்கிற குணவாக்கியத்திற்கு **அக்னிஹோத்ரம் ஜுஹுயாத் ஸ்வர்க்காம:** என்கிற சுவர்க பலனை குறிக்கும் வாக்கியம் உள்ளது. அதுபோல இ***ங்***கு வாக்கியம் வேறு ஒன்று இல்லாததால் குணமாக ஏற்கமுடியாது.

குணவிதியாக ஏற்ற வேறு பலனை குறிக்கும் வாக்கியம் இல்லாத காரணத்தினால் இந்த வாக்கியத்தையே **உத்பித்வதா யாகேன பஷூம் பாவயேத்** என்று உத்பித் திரவியம் குணமாக கொண்ட யாகத்தினால் பசுவினை அடைவீர்களாக என்ற குணம் கூடிய விஷிஷ்ட விதியாக ஏற்றால் என்றால், வேறு ஒரு வழி (பொருளினை அடைய) இருக்கும் போது மத்வர்த்த லக்ஷனை ( மதுப் என்கிற வேற்றுமை கொண்டு உத்பித்வதா என்று) ஏற்பது தோஷம் ஆகும். விதி நிரூபணத்தில் மத்வர்த்த லக்ஷணையை விளக்கும் போது இது விளக்கப்பட்டது என்பதால் மீண்டும் இ***ங்***கு விளக்கம் தேவையில்லை.

இந்த தோஷ***ங்***கள் இல்லாத உத்பித் என்கிற பெயருள்ள யாகத்தினால் பசுவினை அடைவீர்களாக என்று உத்பித் சொல்லை பெயராக்கினால் **உத்பித் நாமகேன யாகேன பஷூம் பாவயேத்** என்று மீமாம்ஸை மொழியில் ஏற்க்கப்படுகின்றது.

## வாக்கியபேத பயத்தினால் நாமதேயத் தன்மை

*'चित्रया यजेत पशुकामः' इत्यत्र चित्राशब्दस्य कर्मनामधेयत्वं वाकयभेदभयात्। तथा हि न तावदत्र गुणविशिष्टयागविधानं संभवति। 'दधि मधु पयो घृतं धाना उदकं तण्डुलास्तत्संसृष्टं प्राजापत्यम्' इत्यनेन गुणस्य विहितत्वात्तद्विशिष्टयागविध्यनुपपत्तेः। यागस्य फलसंबन्धे गुणसंबन्धे च विधीयमाने वाक्यभेदः। तस्माच्चित्राशब्दः कर्मनामधेयम्। यथा च चित्रायागेन पशुं भावयेदिति सामानाधिकरण्येनान्वयात् न वाक्यभेदः। प्रकृतेष्टेरनेकद्रव्यत्वेन चित्राशब्दवाच्यत्वोपपतिः।*

**சித்ரயா யஜேத பசுகாம:** என்கிற வாக்கியத்தில் சித்ரா என்பது யாகத்தின் பெயர் என்று வாக்கியபேத தோஷத்தில் பயத்தினால் ஏற்கப்படுகிறது. முன்பு உத்பித் யாகத்தில் குறிப்பிட்ட அதே முறையில் இங்கும் வாக்கியபேத தோஷம் உண்டாகின்றது. சித்ரா என்னும் சொல்லை குணமாக கொண்டால் பலனை குறிக்கும் வேறு வாக்கியம் இல்லாததால் இந்த வாக்கியமே அதனையும் குறிக்கும் என்று ஆவதால் இரண்டு விதிகளை கொண்ட ஒரு வாக்கியம் என்று உண்டாவதால் வாக்கியபேத தோஷம் நிவர்த்தி செய்ய முடியாததாகிறது. அதுமட்டுமில்லாமல் சித்ரா என்ற சொல்லை குணமாக ஏற்பது சரியானது இல்லை காரணம் **ததி மது பயோ க்ருதம் தானா உதகம் தன்டுலாங் தத் சம்ஸ்ருஷ்டம் ப்ராஜாபத்யம்** என்னும் வாக்கியத்தினால் தயிர், தேன், பால், நெய், யவம், நீர் மற்றும் சாதம் இவைகள் கூடிய பிராஜாபதி தேவதைக்கான யாகத்தை செய்வீர்களாக என்று திரவியம் மற்றம் தேவதையை குறிக்கும் வாக்கியம் உள்ளதால் குணம் கூடியதாக ஏற்கமுடியாது. அதனால் வாக்கியத்தில் குணம் கூடியதும் பலன் கூடியதுமாக வாக்கியபேத தோஷம் உள்ளதால் அப்படி ஏற்கமுடியாது. அதனால், சித்ரா என்பது பெயர் என்று ஏற்கப்படவேண்டும் என்றாகிறது. இதனால் **சித்ரா யாகேன பசூம் பாவயேத்** என்று சித்ரா என்ற பெயருடைய யாகத்தினால் பசுவினை அடைவீர்களாக என்ற பொருள் உண்டாகின்றது. இங்கும் சாமாணாதிகரண்யத்தினால் பொருள் எடுக்கப்படுகிறதால் வாக்கியபேத தோஷம் உண்டாவதில்லை.

## தத்பிரக்யா சாஸ்திரத்தினால் நாமதேயத் தன்மை

*'अग्निहोत्रं जुहोति' इत्यत्राग्निहोत्रशब्दस्य कर्मनामधेयत्वं तत्प्रख्यशास्त्रात्। तस्य गुणस्य प्रख्यापकस्य प्रापकस्य शास्त्रस्य विद्यमानत्वात्।, अग्निहोत्रशब्दः कर्मनामधेयमिति यावत्। नन्वयं गुणविधिरेवकुतो न? इति चेत्, —न; यद्यग्नौहोत्रमस्मिन्निति सप्तमीसमासमाश्रित्य होमाधारत्वेनाग्निरूपो गुणो विधेयस्तदा 'यदाहवनीये जुहोति' इत्यनेनैवाग्नेः प्राप्तत्वात्तद्विधानानर्थक्यम्। अग्नये होत्रमिति चतुर्थीसमासमाश्रित्य अग्निदेवतारूपगुणोऽनेन विधीयत इति चेत, — न; तद्देवतायाः शास्त्रान्तरेण प्राप्तत्वात्।*

சில வாக்கியங்கள் திரவியம், தேவதை முதலிய குணங்களை குறிப்பது போல இருந்தாலும், அவைகள் (குணம்) வேறு சாஸ்திர வாக்கியங்களினால் விதிக்கப்பட்டு விடுவதால், அந்த வாக்கியங்களை ஒரு யாகத்தின் பெயரை குறிப்பிடுவதாக எடுக்கப்படுகிறது. அப்படி ஒரு பதமானது என்ன காரணத்தினால் நாமதேயமாக ஏற்கப்படுகிறதோ அது (அந்த காரணம்) தத்பிரக்யா சாஸ்திரம் ஆகும். தத்பிரக்யா சாஸ்திரம் என்றால் **தஸ்ய பிராபகஸ்ய சாஸ்திரம்** என்ற விளக்கம் உண்டாகிறது. தஸ்ய–அதனுடைய (குணம்), பிரக்யா – அடைதலோ ஞாபகபடுத்தப்படுவதலோ, சாஸ்திரம் – சாஸ்திரத்தின் வாக்கியம், உதாரணத்திற்கு

அக்னி ஹோத்ரம் ஜுஹோதி இ***ங்***க சிந்தாந்தத்தின் படி அக்னி ஹோத்ரம் ஒரு யாகத்தின் பெயர். இதை குணத்தை குறிக்கம் வாக்கியமாக ஏற்பதனால் இந்த வாக்கியம் இருவகையாக பொருள்படும்படி ஏற்கவேண்டி வரும் முதலில் **அக்னௌ ஹோத்ரம்** (எந்த அக்னியில் ஹோத்திரம் (ஹோமம்) செய்யபடுகிறதோ) என்று **அக்னயே ஹோத்ரம்** (அக்னி தேவதைக்கு ஹோத்திரம் (ஹோமம்)) என்று முதலில் அக்னி ஆதாரமாகவும் இரண்டாவது அக்னி என்பது தேவதையாகவும் குணமாக ஏற்கப்படுகிறது. ஆனால், ஆதாரமானது யதாவஹனீயே ஜுஹோதி (எப்போது ஆவஹனீயம் என்கிற அக்னியில் ஹோமம் செய்கிறாரோ) என்பதில் மூலமாக ஆவஹனீயம் என்கிற அக்னியானது அடையப்பட்டதால் மீண்டும் அக்னிஹோத்ரம் ஜுஹோதி கொண்டு விதிப்பது பொருளற்றதாகிறது. இரண்டாவது வாக்கியத்தில் விதிக்கப்ட்ட தேவதையானதும் **அக்னிர்ஜ்யோதி : ஜ்யோதிரக்னி: ஸ்வாஹா** என்ற வாக்கியத்தால் விதிக்கப்பட்டதால் இதனை விதிப்பதாக ஏற்பதும் பொருளற்றதாகிறது. இப்படி பொருளற்ற வாக்கியமாக மாறாமல் இருப்பதற்காக அக்னிஹோத்ரம் என்பது ஹோமத்தில் பெயராக ஏற்கப்படுகின்றது.

## அக்னி தேவதையை குறிப்பிடும் சாஸ்திரத்தை குறித்த கேள்விகள்

*किं तच्छास्त्रान्तरमिति चेत्–, – 'यदग्नये च प्रजापतये च सायं जुहोति' इति केचित् । अपरेतु 'अग्निर्ज्योतिर्ज्योतिरग्निः स्वाहा' इति मन्त्रवर्ण एवाग्निरूपदेवताप्रापकः । नन्वग्नेर्मान्त्रवर्णिकत्वे प्रजापतिदेवताया बाधः स्यात्, मन्त्रवर्णस्य चतुर्थीतो दुर्बलत्वात् । यथाहुः 'तद्धितेन चतुर्थ्या वा मन्त्रवर्णेन वा पुनः । देवताया विधिस्तत्र दुर्बलं तु परं परम्' इति चेत्– न; 'यदग्नये च प्रजापतये च सायं जुहोति' इत्यत्र न केवलं प्रजापतिविधानम्, किंतु मन्त्रवर्णप्राप्तमग्निमनूद्य तत्समुच्चितोभयविधानमेव कथं नेति वाच्यम्; समुच्चितोभयविधानापेक्षयान्यतः प्राप्तमग्निमनूद्य तत्समुच्चितप्रजापतिमात्रविधाने लाघवात् । एवं प्रयाजेषु समिदादिदेवतानां 'समिधो अग्न आज्यस्य व्यन्तु' इत्यादिमन्त्रवर्णेभ्यः प्राप्तत्वात् । 'समिधो यजति' इत्यादिषु समिदादिशब्दास्तत्प्रख्यशास्त्रात्कर्मनामधेयम् ।*

இரண்டாவதாக அக்னிஹோத்ரம் ஜுஹோதி என்ற வாக்கியத்தில் உள்ள அக்னிஹோத்ர வார்த்தைக்கு எடுத்த பொருளில் அக்னி தேவதையை குறிப்பதாக உள்ளது ஏற்கப்படமுடியாது, அது வேறு வாக்கியத்தினால் கூறப்பட்டுள்ளது என்பது முன்பே கூறப்பட்டது. பூர்வபக்ஷி மீண்டும் அது எந்த சாஸ்திர வாக்கியம் என்று கேள்வி எழுப்புகிறார். சிந்தாத்தந்தில் இரண்டு வாக்கிய***ங்***கள் கொண்டு இந்த தேவதை நிர்தேஷம் உண்டாகிறது. ஒன்று முன்பு கூறிய **அக்னிர்ஜ்யோதி: ஜ்யோதிரக்னி ஸ்வாஹா** என்பதும் மற்றது **யதக்னயே ச ப்ராஜபதயே ச ஸாயம்**

**ஜுஹோதி** என்பதும் அக்னி தேவதையை குறிக்கும் வாக்கிய*ங்*களாக ஏற்கப்படுகின்றது.

தத்தித வேற்றுமை, நான்காம் வேற்றுமை, மற்றும் மந்த்ர வர்ணம் ஆகியவை மூலமாக தேவதை அறியப்படுகிறது. இதில் ஒன்று மற்றதை காட்டிலும் பலமுள்ளதாக இருக்கிறது என்பது நினைவில் கொண்டு, அக்னிர்ஜ்யோதி: முதலிய மந்திரத்தில் குறிப்பிடப்பட்ட அக்னிதேவதை யதக்னயே முதலிய மந்திரத்தில் குறிப்பிடபட்ட பிரஜாபதி தேவதையினால் பாதம் (நிராகரணம்) ஆகும். ஏனென்றால், அக்னிதேவதை முதல் வாக்கியத்தில் மந்த்ரவர்ணத்தினாலும், இரண்டாவது வாக்கியத்தில் பிரஜாபதயே என்கிற நான்காம் வேற்றுமை , மந்த்ர வர்ணத்தைக் காட்டிலும் பலமுள்ளதானதால் என்று கூறினால் (பூர்வபக்ஷி) அதற்கு சிந்தாத்தத்தின்படி பதில், யதக்னயே முதலிய வாக்கியத்தில் பிரஜாபதி தேவதையை மட்டும் குறிப்பிடவில்லை அதற்கு மாறாக அக்னிர்ஜ்யோதி முதலிய வாக்கியத்தில் குறிப்பிட்ட அக்னி தேவதையும் அனுவாதமாக ஏற்கபடுகிறது. அதனால் பிரஜாபதி என்று மட்டும் ஏற்பதனால் உண்டாகும் பாதம் (நிராகரணம்) இ*ங்*கு இல்லை, அக்னி கூடிய பிரஜாபதி தேவதையை குறிப்பிடுவதாக ஏற்பதால். முதலில் கூறப்பட்ட மந்த்ர வர்ணமான அக்னிர்ஜ்யோதி மூலமாகவே அக்னிதேவதை குணமாக குறிப்பிடபடுகிறது. இரண்டு தேவதைகளை குறிபிடும் வாக்கியம் என்று ஏற்பதை விட, அக்னி கூடிய பிரஜாபதி தேவதை என்று ஏற்பதே லாகவமாக இருப்பதால்.

அதுபோல, சமிதோ யஜதி முதலிய வாக்கிய*ங்*களிலும் சமித் முதலிய வார்த்தைகள் தத்பிரக்யா சாஸ்ததிரத்தினால் பெயராக ஏற்கப்படுகிறது. காரணம், **சமித: சமிதோ அக்ன ஆஜ்யஸ்ய வ்யந்து** முதலிய வாக்கிய*ங்*களினால் சமித் ஆகியவை மந்த்ர வர்ணம் கொண்டு சமித் முதலிய தேவதைகளை குறிப்பதாக ஏற்பதால்.

## தத்வியபதேஷத்தினால் நாமதேயத் தன்மை

*'श्येनेनाभिचरन् यजेत' इत्यत्र श्येनशब्दस्य कर्मनामधेयत्वं तव्द्यपदेशात्। तेन व्यपदेशादुपमानत्तदन्यथानुपपत्तेरिति यावत्। यथा हि– यद्विधेयं तस्य स्तुतिर्भवति। यद्यत्र श्येनो विधेयः स्यात्, तदार्थवादैस्तस्यैव स्तुतिः कार्या। अत्र 'यथा वै श्येनो निपत्यादत्ते एवमयं द्विषन्तं भ्रातृव्यं निपत्यादत्ते' इत्यनेनार्थवादेन श्येनः स्तोतुं न शक्यः, श्येनोपमानेनार्थान्तरस्तुतेः क्रियमाणत्वात्। न च श्येनोपमानत्वेन स एव स्तोतुं शक्यतेः उपमानोपमेयभावस्य भिन्नष्ठित्वात्। यदा तु श्येनसंज्ञको यागो विधीयते तदार्थवादेन श्येनोपमानेन तस्य स्तुतिः कर्तु शक्यत इति श्येनशब्दः कर्मनामधेयं तव्द्यपदेशादिति।*

நாமதேயத்தின் நான்காம் காரணமான தத்வியபதேஷம் விளக்கப்படுகிறது. **ஷ்யேனேனாபிசரன் யஜேத்** (ஷ்யேன யாகத்தினை கொண்டு அபிசரம் செய்யு***ங்***கள்), அபிசரணம் என்பது சத்ரு (எதிரி), இறப்பதற்கு அனுகூலமான ஒரு வியாபாரம், சத்ரு சம்ஹாரயாகம் ஆகும். இ***ங்***கு ஷ்யேன என்னும் சொல் யாகத்தின் பெயராகும். அதாவது ஷ்யேன என்ற பெயருடைய யாகத்தினால் சத்ருவின் சம்ஹாரம் என்கிற அபிசாரமான பலனை அடைவீர்களாக என்பது வாக்கியத்தின் பொருளாகிறது. **தத்வியபதேஷம்** என்பதின் பொருள் **தேன வ்யபதேஷாத்** என்பது தேன - அதனுடன் வ்யபதேஷாத் - உபமானமாக இருப்பதால், சமமாக இருப்பதால் என்ற பொருள் உண்டாகிறது. இப்படி ஏற்க்காவிட்டால் வாக்கிய பொருள் உண்டாவதில்லை என்பதால் ஷ்யேன யாகம் என்பது சோம யாகத்தின் விகிருதி யாகம் ஆகும். இ***ங்***கு பூர்வபக்ஷி, ஷ்யேனம் (பருந்து) என்கிற திரவியம் கொண்டு யாகம் செய்து பலன் (எதிரி சம்ஹாரம்) அடைவீர்களாக என்ற பொருள் கொண்ட குணவிதியாக ஏற்க கூறுகிறார். ஆனால் இப்படி ஏற்பது சிந்தாந்தத்திற்கு விரோதமானது காரணம், ஷ்யேன (பருந்து) என்கிற பறவையின் உதாரணத்தை கண்டு கொண்டு இந்த கர்மத்தினை அர்த்தவாத வாக்கியத்தினால் பெருமைபடுத்தி கூறப்பட்டதால், அர்த்தவாத வாக்கியம் **யதாவை ஷ்யேனோ நிபத்யாதத்தே ஏவமயம் த்விஷந்தம் ப்ராத்ருவ்யம் நிபத்யாதத்தே** (எப்படி பருந்தானது தன்னுடைய இலக்கை சீக்கிரமாக அடைகிறதோ, அப்படி இந்த யாகமும் சீக்கிரமாக எதிரியை கொல்கிறது) என்பது. இதனால் உபமேயமான ஷ்யேன யாகம் வேறு என்றும் உபமானமான ஷ்யேன பக்ஷி (பறவை) வேறு என்றும் தெரிகிறது. ஒரே பொருள் உபமானமாகவும் (உதாரணமாகவும்) உபமேயமாகவும் (உதாரிக்கப்பட்டதாகவும்) இருக்க முடியாது. என்ற காரணத்தினால் இவை இரண்டும் வேறுவேறு என்பது முடிவாகிறது.. இதனால் இந்த வாக்கியத்தை (ஷ்யேனோ..) குணத்தை விதிப்பதாக ஏற்க முடியாது என்பதால் ஷ்யேன யாகம் தத் வியபதேஷத்தினால் பெயராகிறது.

## ஐந்தாவது வகையான நாமதேயம் பற்றிய விசாரம்

*कर्मनामधेयत्वे उत्पत्तिशिष्टगुणबलीयस्त्वम् उत्पत्तिशिष्टगुणबलीयस्त्वमपि 'पमं नामधेयनिमित्तमिति केचित। यथा 'वैश्वदेवेन यजेत' इत्यादौ। अत्रोत्पत्तिशिष्टग्न्यादीनां बलीयस्त्वाद्वैश्वदेवशब्दस्य विश्वदेवदेताभिधायकत्वं न संभवतीति कर्मनामधेयत्वम्। वस्तुतस्तु तत्प्रख्यशास्त्रादेवास्य कर्मनामधेयत्वं प्रकृतयागे विश्वदेवरूपगुणसंप्रतिपन्नशास्त्रस्यार्थवादरूपस्यैव सत्त्वात्। 'यद्विश्वेदेवाः समयजन्त तद्वैश्वदेवस्य वैश्वदेवत्वम्' इति।*

மேற்கூறிய நான்கு வகை காரணத்தை தவிர ஐந்தாவது வகையையும் சிலர் நாமதேயத்திற்கு ஏற்கின்றனர். இது உத்பத்தி விதி வாக்கியத்தில் உள்ள குணத்தின் (திரவியம், தேவதை முதலிய) பலத்தைக் கொண்டு உண்டாவது உதாரணத்திற்கு, **சாதுர்மாஸ்ய பிரகரணத்தில்** உள்ள **வைஷ்வதேவோ யஜேத** என்கிற வாக்கியம். இ*ங்*கு வைஷ்வதேவம் என்கிற தேவதையின் பெயர் (குணம்) யாகத்தின் பெயராக ஏற்கபடுகிறது. இப்படி ஏற்பதற்கு காரணம், உத்பத்தி விதியில் குணம் நமக்கு விதிக்கப்பட்ட பிறகு, குணத்தை குறிக்கும் வேறோரு வாக்கியத்தை ஏற்பது புனருத்தி (மீண்டும் கூறுவது) என்கிற தோஷம் உண்டாகிறது. இதற்கு உத்பத்தி விதியில் உள்ள குணமானது மற்ற வாக்கியத்தில் உள்ள குணத்தை பாதனை செய்து அதுவே யாகத்தின் பெயராகவும் ஆகிறது என்பது லாகவமாக இருக்கும்.

இ*ங்*கு வைஷ்வதேவேன யஜேத வில் எட்டு யாக*ங்*கள் படிக்கப்பட்டுள்ளது. இவை அக்னிதேவதைக்கான எட்டு கபால யாகம், சோம தேவதைக்கான சரு யாகம். சவித்ரு தேவதைக்கான பன்னிரெண்டு கபால யாகம், சரஸ்வதிக்கான சரு யாகம், பூஷன் தேவதைக்கான சரு யாகம், மருத் தேவதைக்கான ஏழுகபால யாகம், வைஷ்வதேவனுக்கான ஆமிக்ஷாயாகம், மற்றும் த்யாவாபிருத்விக்கான ஒரு கபால யாகம் ஆகம். இந்த இடத்தில் பூர்வபக்ஷி கூறுவது. **ஆக்னேயம் அஷ்டகபாலம் நிர்வபதி** (அக்னி தேவதைக்கு எட்டு கபாலம் எடுத்து வைக்கிறார்) முதலிய உத்பத்தி விதி வாக்கியத்தினால் ஆக்னேயம் முதலிய எட்டு யாக*ங்*களும் கிடைக்கும் போது வைஷ்வ தேவன் என்பதை அனுவாதமாக ஏற்று யாகத்தின் பெயராக ஏற்கவேண்டும். அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு உத்பத்தி வாக்கியத்திலும் தேவதையின் பெயர் குறிப்பிடபட்டதால் வைஷ்வதேவம் என்பது யாகத்தின் பெயராக ஏற்கவேண்டும். இல்லாவிட்டால் பொருளற்ற வாக்கியமென்ற தோஷம் உண்டாகும், மூன்றாவதாக, முன்பே **வைஷ்வதேவீம் ஆமிக்ஷாம்** என்பதில் வைஷ்வதேவ தேவதைக்க ஆமிக்ஷா திரவியம என்று கூறபட்டதால் இ*ங்*கு கூறப்பட்டத்தை அது பாதனை செய்யும் என்பதால்,. குணத்தின் பிரபலத்தினை கொண்டு வைஷ்வதேவம் என்பது யாகத்தின் பெயராக ஏற்க வேண்டும். இப்படி ஐந்தாவது காரணமாக குணத்தின் பலத்தை (உத்பத்தி விதியில்) ஏற்பது பொருந்தும் என்று கூறினால்.

சிந்தாந்தத்தில், உத்பத்தி விதியில் உள்ள குணத்தின் பலத்தினை கொண்டுள்ள நாமதேயதன்மை மற்ற நான்கு காரணத்தில் மூன்றினில் சேர்க்கமுடியுமாகையால், தத்பிரக்யா சாஸ்த்திரத்தின் காரணமாக ஏற்படும் நாமதேயமாகவே ஏற்கபடுகிறது. ஆகவே, வைஷ்வ்தேவம் என்பது யாகத்தின் பெயராக ஏற்கப்படுவது குணத்தின் பிரபலத்தினால் இல்லை, மாறாக பிரகிருதி யாகத்தினை குறித்த ஒரு அர்த்தவாத வாக்கியம் இருப்பதால் **யத்விஷ்வேதேவா: சமயஜந்த தத்வைஷ்வதேவஸ்ய வைஷ்வ தேவத்வம்** (எந்த விஷ்வேதேவர்கள் யஜனம் செய்கிறார்களோ அது அந்த வைஷ்வதேவனின் வைஷ்வதேவதன்மை) என்பது அதனால் இ*ங்*கு வைஷ்வதேவம் என்பது தத்பிரக்யா சாஸ்த்திரத்தினால் நாமதேயதன்மை அடைகிறது.

இதனால் ஐந்தாவது வகையான நாமநேயம் இல்லை என்பது தெளிவாகிறது.

## நிஷேதம்

*पुरूषस्य निवर्तकं वाक्यं निषेधः, निषेधवाक्यानामनर्थहेतु क्रियानिवृत्तिजनकत्वेनैवार्थवत्त्वात् । यथा हि यथा विधिः प्रवर्तनां प्रतिपादयन्स्वप्रवर्तकत्वनिर्वाहार्थ विधेयस्य यागदेरिंष्टसाधनत्वमाक्षिपन्पुरूशं तत्र प्रवर्तयति, यथा 'न कलञ्जं भक्षयेत्' इत्यादिनिषेधोऽपि निर्वतनां प्रतिपादयन्स्वनिवर्तकत्वनिर्वाहार्थं निषेध्यस्य कलञ्जभक्षणस्य परानिष्टसाधनत्वमाक्षिपन्नपुरूषं ततो निवर्तयति ।*

நான்காவதாக கிரமபிராப்தமான நிஷேதம், விதி, மந்த்ரம் மற்றும் நாமதேயத்தை தொடர்ந்து விளக்கப்படுகிறது. நிஷேதம் புருஷனை ஒரு செயலிலிருந்து விலக்கும் வாக்கியத்திற்கு பெயர். எப்படி விதியானது ஒரு புருஷனை புண்ணியம் தரும் (சுவர்கம் முதலிய பலன்கள் தரும்) கர்மத்தில் (யாகம், தானம் முதலிய) பிரவிருத்திக்கின்றதோ அது போல நிஷேதம் புருஷனை பாப கர்ம***ங்***களில் பிரவிருத்தி செய்வதில் இருந்து தடுக்கின்றது. உதாரணத்திற்கு, **ந கலஞ்ஜம் பக்ஷயேத், நஸ்தேயாத்** முதலிய வாக்கிய***ங்***கள் புருஷனை கல**ஞ்**ஜம் (விஷம் தீண்டப்பட்ட உணவு) உண்பதிலிருந்தும், திருடுவதிலிருந்தும் தடுத்து. அதனால் உண்டாகும் தீய வினைகளான நரகம் முதலியவைகளிலிருந்து தடுக்கிறது. எப்படி விதியானது ஒருவன் நன்மையையடையக்கூடிய கர்ம***ங்***கள் குறித்து கூறி அவனுடைய அறியாமையை விளக்கி, உற்சாகப்படுத்தி அந்த கர்ம***ங்***களில் பிரவிருத்திக்கிறதோ அதுபோல நிஷேத வாக்கிய***ங்***கள் ஒருவன் தீமையிலிருந்து தப்பிக்க அந்த தீமையான கர்ம***ங்***களை செய்யாமல் இருக்க அவனுக்கு அதன் அறிவினை புகட்டி அந்த கர்ம***ங்***களில் பிரவிருத்திக்காமல் செய்கிறது. பாவனா விசாரணையில் கண்டதுபோல, வேதமானது அபௌருக்ஷயமானதால் அதன் லி***ங்*** முதலிய வாக்கிய***ங்***களை கேட்டதும் இது என்னுடைய பிரவிருதிக்கு அனுகூலமான செயல் என்பது அறிந்து ஒருவர் அந்த கர்மத்தில் பிரவிருத்திக்கிறார். அதுபோல, ந கல***ங்***ஜம் பக்ஷயேத் முதலிய வாக்கிய***ங்***களிலும் பிரவிருத்தி செய்யாமலிருக்க அதன் அதிஷ்ட சாதனதன்மையும் (இஷ்டமான பலனை தரும் தன்மை) பலவதனிஷ்டானுபந்தித்வம் (பலமுள்ள அனிஷ்டமான விஷயம் உள்ளது) முதலிய காரண***ங்***களை சுட்டிக்காட்டி அதன் அறிவை உண்டாக்குவதின் மூலம் நிஷேதமானது பிரவிருத்திக்கின்றது. (அதாவது, புருஷனை அந்தந்த கர்ம***ங்***களிலிருந்து நிவிருத்திகிறது என்று பொருள்).

*ननु निषेधावाक्यस्य कथं निवर्तनाप्रतिपादकत्वमिति चेत्— उच्यये— न तावदत्र धात्वर्थस्य नञर्थेनान्वयः, अव्यवधानेऽपि तस्य प्रत्ययार्थभावनोपसर्जनत्वेनोपस्थितेः। न ह्यन्योपसर्जनत्वे नोपस्थितमन्यत्रान्वेतिः अन्यथा राजपुरूषमानयेत्यादावपि राज्ञः क्रियान्वयापत्तेः। अतः प्रत्यायार्थस्यैव नञर्थेनान्वयः। तत्रापि नाख्यातत्वांशवाच्यार्थभावनायास्तस्या लिंङंशवाच्य प्रवर्तनोपसर्जनत्वेनोपस्थितेः, किंतु लिंङंशवाच्यशब्दाभावनायाः, तस्या सर्वापेक्षया प्रधानत्वात्।*

இ***ங்***கு ஒரு கேள்வி எழலாம் (பூர்வ பக்ஷமாக) அதாவது, **ந பலஞ்ஜம் பக்ஷயேத், பிராஹ்மனோ ந ஹந்தவ்ய** முதலிய வாக்கிய***ங்***களில் லி***ங்*** முதலிய வேற்றுமைகளில் சக்தி பிரவிருத்தி செய்விப்பதிலும், ந***ஞ்*** வேற்றுமையின் (எதிர்பதமாக்கும்) சக்தியானது அதன் இல்லாமையை போதிப்பதிலும் உள்ளதால், பக்ஷ என்கிற மூல சொல்லின் பொருளான உண்ணுதல், அதன் எதிர்பதமான உண்ணாமை என்பதுடன் ஆவாதால், யாகம் முதலிய இட***ங்***களில் உண்ணாமை என்பதே பொருளாகஏற்க முடியும். காரணம் இந்த நிஷேத வாக்கிய***ங்***களில் நிவர்தனையை போதிக்கும் சொல் இல்லாததால் என்று கூறினால், சிந்தாந்திகளுக்கு இது இஷ்டமில்லை, காரணம், இ***ங்***கு ந***ஞ்*** ஆனது மூல சொல்லின் பொருளுடன் சம்பந்தப்படுவதில்லை. இ***ங்***க பிரிவு உண்டானாலும் இல்லையென்றாலும் (ந***ஞ்*** மற்றும் வினைச் சொல்லுடன்) அந்த மூல சொல்லுடன் கூடிய வேற்றுமையுடனேயே அதன் பாவனை, அதனுடைய சம்பந்தப்படும். காரணம், வேரொன்றோடு விசேஷமாக கூடியுள்ள ஒரு பொருள் அதனுடன் வேறாக உள்ளதோடு சம்பந்தப்படுவதில்லை. இது எப்படியென்றால், **ராஜபுருஷம் ஆனய** (ராஜ புருஷனை கொண்டு வா) என்பதில் ராஜவுடன் சம்பந்தப்பட்ட ஒரு செயல் ஆகிவிடும். கொண்டு வா என்கிற செயல் புருஷனுடன் உண்டாகிறது. ராஜாவுடன் இல்லை. இ***ங்***கு ராஜா என்பது புருஷனுக்கு விசேஷனம் மாத்திரமே . அதுபோலவே, பக்ஷயேத் என்பதிலும் பக்ஷ என்னும் மூல சொல்லுடன் சேர்ந்துள்ள லி***ங்*** வேற்றுமையின் இரண்டு பிரிவுகளான பாவனாவில் கண்ட ஆக்யாதத்வமும், லி***ங்***த்வமும் உள்ளதால், ஆக்யாத்தன்மையுடன் கூடாமல் ( ஆர்த்தீ பாவனா) அதன் லி***ங்***தன்மையுடன் கூடுகிறது. (ஷாப்தீ பாவனை), காரணம் அதுவே பிரவிருதியில் ஈடுபடுத்தும் தன்மையுடையது என்பதால் ( பிரவிருத்தி என்பது இ***ங்***கு நிவிருத்தி என்பதாக கொள்ளவேண்டும்). அதனால் செய்ய வேண்டும் என்கிற லி***ங்***கின் லி***ங்***தன்மை (பிரவர்தனா)யுடன் ந***ஞ்*** சேர்ந்து செய்ய வேண்டாம் என்று பொருள்படுவதாகிறது. ஷாப்தீ பாவனையின் சாத்யாகா***ங்***க்ஷா இதனால் தீருகிறது (ந***ஞ்***ஜினால்) ஏனென்றால், ஷர்ப்தீ பாவனையே எல்லாவற்றை காட்டிலும் முக்கியமானதால்.

## **நஞ்ஜின் ஸ்வபாம்**

*नञश्चैष स्वभावो यत्स्वसमभिव्याहृतपदार्थविरोधिबोधकत्वम्। यथा घटो नासतीत्यादौ अस्तीतिशब्द समभिव्याहृतो नञ् घटसत्त्वविरोधि घटासत्त्वं गमयति, तदिह लिङ्समभिव्याहृतो नञ् लिङ्र्थप्रवर्तनाविरोधिनी निवर्तनामेव बोधयति। विधिवाक्यश्रवणेऽयं मां प्रवर्तयतीति प्रतीतेः। तस्मान्निषेधवाक्यस्थले निवर्तनैव वाक्यार्थः। यदा तु प्रत्ययार्थस्य तत्रान्वये बाधकं तदा धात्वर्थस्यैव तत्रान्वयः।*

எல்லாவற்றிலும் முக்கியமானதாக லீ***ங்***கர்தத்துடன் ந***ஞ்***சர்தம் ஷாப்தீ பாவனையினால் சம்பந்தப்படுகிறது என்பது நிரூபிக்கப்பட்டது. இதில் நிவர்தனையின் அறிவானது இந்த நிஷேத வாக்கிய***ங்***களில் எவ்வாறு உண்டாகிறது என்று கேள்வி எழுகிறது. அதற்கு விடை ந***ஞ்***ஜானது எதனுடன் சேர்ந்துள்ளதோ அதன் பொருளுக்கு விரோதமான பொருளை போதிப்பதாகிறது என்பது. அதாவது நாஸ்தி (இல்லை) என்பது இருத்தலின் இல்லாமையை போதிக்கின்றது என்பது போல, இ***ங்***கும் ந பக்ஷயேத் என்பதிலும் , பக்ஷயேத் என்பது பிரவிருத்தியினை குறிக்கும் செய்யவேண்டும் என்கிற லி***ங்***கர்த்துடன் ந***ஞ்***சர்தமானது சேர்ந்து நிவிருத்தியை குறிப்பதாகின்றது. இதனால் ந***ஞ்***ர்த்தமே நிவர்தனையை போதிப்பதாக உள்ளது. அதில் லி***ங்***கானது அதன் செயலின் பொருளை விளக்குவதாக இருக்கிறது என்பது நிரூபணமாகிறது. எப்படி ஒரு விதி வாக்கியம் கேட்டதும் யஜேத முதலியவை **அயம் மாம் பிரவர்த்தயதி** (இது என்னை பிரவிருத்தியில் ஈடுபடுத்துகிறது) என்ற அறிவை தந்து. பிரவிருத்தியில் ஈடுபடுத்துகிறதோ அது போல ந பக்ஷயேத் முதலியவைகளை கேட்டதும் **அயம் மாம் நிவிருத்தயதி** இது என்னை நிவிருத்தியில் ஈடுபடுத்துகின்றது என்ற அறிவை தந்து. செயலில் இருந்து நிவிருத்திக்கிறது. ஆனால் ஏதாவது காரணத்தால் இப்படி வேற்றுமையின் பொருளோடு (லி***ங்***கர்த்துடன்) ந***ஞ்***சர்த்தம் சம்பந்தப் படாமலிருந்தால் அ***ங்***கு மூல சொல்லின் பொருளோடு ந***ஞ்***சர்தம் சம்பந்தபடுவதாக, தடையில்லாமலிருந்தால், வேறு வழியில்லாததால் ஏற்கவேண்டும்.

*तच्च बाधकं द्विविधम्–तस्य ब्रतमित्युपक्रमो विकल्पप्रसक्तिश्च। तत्राद्यं 'नेक्षेतोद्यन्तमादित्यम्' इत्यादौ 'तस्य ब्रतम्' इत्युपक्रम्यैतद्वाक्यपाठात्। तथा चात्र पर्युदासाश्रयणम्। तथा हि–ब्रतशब्दस्य कर्तव्यार्थे रूढत्वात्तस्य ब्रतमित्यत्र स्नातकस्य ब्रतानां कर्तव्यत्वेनोपक्रमात्। किं तत्कर्तव्यमित्याकाङ्क्षायां 'नेक्षेतोद्यन्तम्' इत्यादिना कर्तव्यार्थ एव प्रतिपादनीयः। अन्यथा पूर्वोत्तरवाक्ययोरेकवाक्यत्वं न स्यात्। तथा च नञर्थेन न प्रत्ययार्थान्वयः कर्तव्यार्थनवबोधात्। विध्यर्थप्रवर्तनाविरोधिनिर्वतनाया एव*

*तादृशनञा बोधनात्, तस्याश्च कर्तव्यार्थत्वाभावात्। तसमात् 'नेक्षेत' इत्यत्र नञा धात्वर्थरोध्यनीक्षणसंकल्प एव लक्षणया प्रतिपाद्यते; तस्य कर्तव्यत्वसंभावात्।*

அதற்கு இரண்டு காரணம் உண்டு **உபகிரமம்** மற்றும் **விகல்பபிரசக்தி** இந்த இரண்டு வகையான பாதக வாக்கய***ங்***களினால் பர்யுதாசத்தினை சாரவேண்டியதாகின்றது. இந்த இரண்டு பாதக***ங்***களும் (தடைகளும்) இல்லையென்றால் அ***ங்***கு அது நிஷேதமாகவே ஏற்கப்படும். பர்யுதாசம் என்பது நாம் விரும்பும் பொருள் தருவதாக ஏற்பது (இஷ்டார்த்த ப்ரதீதி) முதல் வகைக்கு உதாரணம் **நேக்ஷேதோத்யந்தமாதித்யம்** (உதயமாகும் சூரியனை காணக்கூடாது) இ***ங்***கு இது பிரிதிஷேதிக்கின்றது. அதாவது இது **தஸ்ய வ்ரதம்** (அந்த ஸ்னாதகனை, படித்து முடித்த, பிரம்மாச்சாரி செய்ய வேண்டியது) என்ற பிரகரணத்தில் இது செய்யவேண்டும், இது செய்ய வேண்டும் என்று கூறும் போது இது செய்யக்கூடாது என்று வருகிறது. இதற்கு பொருள் எப்படி எடுக்கவேண்டும் என்ற கேள்வி எழும்போது, உபகிரமம் (தொடக்கம்) எப்படி செய்யப்பட்டதோ அதை அனுசரித்து உபசம்ஹாரம் (முடிவு) செய்யவேண்டும் என்பது நியாயம், அதனால் இ***ங்***கு ஆகா***ங்***க்ஷையை (எதிர்பார்ப்பு) அனுசரித்து அ***ங்***கு அந்தந்த வாக்கிய***ங்***களின் பொருள் எடுக்கப்படவேண்டும் . அதாவது, செய்யவேண்டும் வாக்கிய***ங்***களின் பொருள் எடுக்கப்படவேண்டும். அதாவது, செய்யவேண்டும், என்பதற்கிடையில் என்னென்ன என்பதை கூறும்போது, நேக்ஷேந்தம் என்று கூறும்போது அ***ங்***கும் செய்யவேண்டும் என்ற பொருள்படும் படியாகவே கொள்ளவேண்டும். அதாவது, உதயமாகும் சூரியனை காணுதல் கூடாது என்பதை செய்யவேண்டும் என்ற பொருள்படும்படியாக இப்படி இல்லாமல், செய்யவேண்டும் என்பதனை பொருள் கூறப்பட்ட இடத்தில் வேறு பொருள்படும்படியான வாக்கியம் கூறினால் **அர்த்தாந்தரம்** என்கிற தோஷம் உண்டாகும். இதனால் ஆரம்ப வாக்கியத்திற்கேற்ப முடிக்கப்படாததால் முன்பு கூறி வாக்கிய***ங்***களில் பிரமாணமில்லாதன்மை உண்டாகிறது. முதலில் செய்யென்றும் பின்பு கூடாது என்றும் கூறப்படுவதால் எல்லா வாக்கிய***ங்***களும் சம்பந்தமில்லாது ஆகிறதான பொருளை கூறுவதாக ஆகும். இது **ஏகவாக்யதா** இல்லை என்கிற தோஷம் ஆகும். அதனால் , சாமான்யமாக ஒரு ஸ்னாதகர் என்னென்ன அனுஷ்டானம் செய்யவேண்டும் என்று கூறும்போது நேக்ஷேத எனும் வாக்கியமும் செய்யவேண்டும் என்ற பொருள்படும்படியாக இருந்தாலே ஏகவாக்யதன்மை உண்டாகும். இ***ங்***கு, நேக்ஷேத வில் வரும் ந***ஞ்***ஜானது லி***ங்***கர்த்துடன் சம்பந்தப்படுத்தினால் ஏகவாக்கியதன்மை வராது என்பதால், அது மூல சொல்லுடன் சம்பந்தப்படுத்தப்படுகின்றது. இப்படி செய்வதினால் ந***ஞ்*** சாமான்யமாக செய்யும் எதிர்பதமாக அதன் பொருள் ஆகாமல் இருக்கும் பெயர் சொல்லுடனும், மூல சொல்லுடனும் சேரும் ந***ஞ்*** எதிர்பதமாக அதன் பொருளை ஆக்காது என்பது நியமம். உதாரணத்திற்கு, பிராமணன் என்பதுடன் ந***ஞ்*** சேர்வதால் அப்பிராமணன் என்ற சொல் உருவாகிறது இது பிரம்மணன் அல்லாத பொருளை தருகிறதே ஒழிய பிராம்மணனை எதிர்பதாக இல்லை. அதுபோல, ஈக்ஷத எனும் வேர்சொல்லுடன் ந***ஞ்*** சேரும் போது ஈக்ஷன

விரோதமான ஒரு பொருளையே தருகிறது. அதனால் இ***ங்***கு நேக்ஷேத என்ற வாக்கியத்தினால் ந***ஞ்***சானது மூல சொல்லுடன் சேர்ந்து பார்க்காத என்ற பொருள்படும் படியான வகையில் நிரூபிக்கப்பட்டள்ளது. காரணம் அப்பொழுதே அ***ங்***கு செய்ய வேண்டும். என்பது சரியாக பொருந்தும்

*आदित्यविषयकानीक्षणसंकल्पेन भावयेदिति वाक्यार्थः। तत्र भाव्याङ्क्षायाम् 'एतवाता हैनसा वियुक्तो भवति' इति वाक्यशेषावगतः पापक्षयो भाव्यतयोन्वेति। एवं च पूर्वोत्तरयोरेकवाक्यत्वं निर्वहत्येव। न चात्र धात्वर्थाविरोधिनः पदार्थान्तरस्यापि संभवात्कथमनीक्षणसंकल्पस्यैव भावनान्वय इति वाच्यम्; तस्य कर्तव्यताभावेन प्रकृते भावनान्वयायोग्यत्वात्। द्वितीयं 'यजतिषु येयजामहं करोति नानुयाजेषु' इत्यादावत्र विकल्पप्रसक्तौच पर्युदासाश्रयणात्।*

இதனால், உதயமாகும் சூரியனை பார்காத காரியத்தை (பாவனையை) செய்யவேண்டும் என்று பொருள்படும்படியாகிறது. இ***ங்***கு எதனை பாவிக்கவேணடும் என்ற கேள்வி (சந்தேகம்) வரும்போது, **ஏதாவதாஹைனசா விமுக்தோ பவதி** (இதனால் அவன் பாப***ங்***பளிலிருந்து விடுதலை அடைகிறான்) என்பதினால் அவன் பாவ***ங்***களிலிருந்து விடுதலை அடைவதையே பாவனையாக கொள்ளவேண்டும். என்பது தீர்மானமாகின்றது. இப்படி ஏற்பதால் முன்பு கூறப்பட்ட வாக்கிய***ங்***களும் இதவும் ஒன்றுபோல செய்யவேண்டும் என்கிற பொருளை தருவதாக இருந்து ஏகவாக்யதா (ஒரு வாக்யதன்மை) அடைகின்றது. இ***ங்***கு ஈக்ஷன என்கிற மூல சொல்லுக்கு வேறு பொருளும் இருக்கும் வாய்ப்பு உள்ளதால் (**தாதூனாம் அனேகார்தத்வாத்** மூல சொல்லிற்கு பல பொருள் உடையதானதால் ) ஏன் பார்காத என்ற பொருளை மட்டும் ஏற்க வேண்டும் அப்படி ஒரு பொருள், செய்ய வேண்டும் என்ற அர்த்ததுடன் இல்லாததால் இ***ங்***கு அது பாவனையுடன் சம்பந்தம் ஆவதில்லை.

## விகல்பப்ரசக்தி – இரண்டாம் தடை

*तथा हि यद्यत्र वाक्ये नञर्थेन प्रत्ययार्थान्वयः स्यात्तदा अनुयाजेषु 'येयजामहे' इति मन्त्रस्य प्रतिषेधः स्यात्, अनुयाजेषु येयजामहं न कुर्यादिति। स च प्राप्तिपूर्वक एव, प्राप्तस्यैव प्रतिषेधात्। प्राप्तिश्च 'यजतिषु येयजामहं करोति' इति शास्त्रादेव वाच्या। शास्त्राप्राप्तस्य च प्रतिषेधे विकल्प एवं, न तु बाधः। प्राप्तिमूलरागस्येव तन्मूलशास्त्रस्य शास्त्रान्तरेण बाधायोगात्। न च 'पदे जुहोति' इति विशेषशास्त्रेण 'आहवनीयते जुहोति' इति शास्त्रस्येव 'नानुयाजेषु' इत्यनेन 'यजतिषु येयजामहं करोति' इत्यस्य बाधः स्यादिति वाच्यम्; परस्परनिरपेक्षयोरेव*

*शस्त्रयोर्बाध्याबाधकभावात्। पदशास्त्रस्य हि स्वार्थविधानार्थमाहवनीयशास्त्र अनपेक्षणान्निरपेक्षत्वम्। प्रकृते तु निषेधशास्त्रस्य निषेध्यप्रसक्त्यर्थ 'यजतिषु येयजामह' मित्यस्यापेक्षणान्न निरपेक्षत्वम्।*

இரண்டாவது பாதகமான (தடை) விகல்ப பிரசக்தி, உபக்ரம தடை நன்கு விளக்கப்பட்ட பிறகு, விளக்கப்படுகிறது. இந்த வகைக்கு உதாரணமாக **யஜாதிஷு யேயஜாமஹம் கரோதி நாநுயாஜேஷு** (யாகத்தில் யேயஜாமஹம் என்கிற மந்திரம் கூறப்படுகிறது. அனுயாஜயாகத்தில் இல்லை) என்கிற மந்திரத்தில் இரண்டு வாக்கியங்கள் உள்ளன. **யஜாதிஷு யேயஜாமஹம் கரோதி, அனுயாஜேஷு யேய யஜாஹம் ந கரோதி** என்னும் அதாவது சாமன்ய யாகத்தில் யேயஜாதிஷ் என்கிற மந்திரம் சொல்லப்படுகிறது. அனுயாஜயாகத்தில் யேயஜாதிஷு எனகிற மந்திரம் சொல்லப்படுவதில்லை என்பது பொருள். இங்கு முதலி வாக்கியத்தில் கரோதி என்பது க்ரு-கரனே என்கிற மூல சொல்லின் செயலில் என்கிற பொருளில் பிரவிருத்தியில் ஈடுபடுத்துகின்றது. இரண்டாம் வாக்கியத்திலோ லிங்கத்துடன் நஞ்சர்த்த்தை சேர்க்கும் போது நிவிருத்தியில் செய்யாத என்கிற பொருள்படும்படி வருகிறது. இதனால் முதல் வாக்கியத்தில் கூறப்பட்டது தடைபடுகிறது. **பிராப்தே சத்யாம் நிஷேதஃ** (பிராபிதி ஆவதே, அடையபடுவதே தடைசெய்யப்படுமாதலால் ) என்கிற நியாயப்படி இங்கு நிஷேதிக்கப்படுகிறது. ஆனால் மீமாம்ஸ சிந்தாந்தத்தில் ஒரு சாஸ்திர வாக்கியத்தினால் பிராப்தி ஆனது இன்னொரு சாஸ்திர வாக்கியத்தினால் தடைபடுகிறது என்று ஏற்பதில்லை. மாறாக, அது விகல்பமாக அதாவது ஏதாவது ஒன்று அனுசரிக்கும்படியாக ஏற்கபடுகிறது. இந்த நியமம் ராகத்தினால் அடையப்பட்ட கலஞ்ஜம் பக்ஷனம் முதலிய இடத்தில் செயல்படுத்தப்டுவதில்லை காரணம், ராகத்தினை (ஆசை) காட்டிலும் சாஸ்திரம் பலமானதால், சக்திவாய்ந்ததால், ஆனால், விகல்பமாக ஏற்பது என்பது ஒரு தோஷமாகும், இதனை நீக்கவே இங்கு பர்யுதாசம் ஏற்கப்படுகிறது.

*तस्माच्छास्त्रविहितस्य शास्त्रान्तरेण प्रतिषेधे विकल्प एव स च न युक्तः। विकल्पे शास्त्रस्य पाक्षिकाप्रामाण्यापातात्। न ह्यनुयाजेषु येयजामहमित्यस्यानुष्ठाने नानुयाजेष्वित्यस्य प्रामाण्यं संभवति, व्रीहियागानुष्ठाने यवशास्त्रस्येव द्विरदृष्टकल्पना च स्यात्, विधिप्रतिषेधयोरपि पुरूषार्थत्वात्, अतो नात्र प्रतिषेधस्याश्रयणम्, किंतु नञेऽनुयाजसंबन्धमाश्रित्य पर्युदास्यैव। इत्थं चानुयाजव्यतिरित्तेषु यजतिषु येयजामह इति मन्त्रं कुर्यादिति वाक्यार्थबोधः, नञोऽनुयाजव्यतिरिक्त्ते लाक्षणिकत्वात्। एवं च न विकल्पः। अत्र च वाक्ये येयजामह इति न विधीयते, यजतिषु येयजामहमित्यनेनैव प्राप्तत्वात्। किंतु सामान्यशास्त्रप्राप्त येयजामह इत्यनुवादने तस्यानुयाजव्यतिरित्तिविषयत्वं विधीयते। यद्यजतिषु येयजामहं करोति तदनुयाजव्यतिरित्तेष्विति।*

ஆனால் இப்படி விகல்பமாக ஏற்பது சரியில்லை, எப்படி **பதே ஜுஹோதி** (மாட்டின் ஏழாவது கால் தடத்தில் ஹோமம் செய்ய கூறுவது) என்கிற வாக்கியம் **ஆஹவனீயே ஜுஹோதி** ( ஆஹவனீய அக்னியில் ஹோமம் செய்ய கூறுவது ) என்கிற வாக்கியத்திற்கு பாதகமாக ஆகிறதோ அதுபோல இ***ங்***கும், யஜாதிஷு வாக்கியத்திலும் ஏற்கவேண்டும் என்று கூறினால் (பூர்வபக்ஷியின் வாதம்) அது சரியல்ல (சிந்தாந்தியின் வாதம் ) இரண்டு இட***ங்***களிலும் வித்தியாசம் இருப்பதினால், பதே ஜுஹோதியும் ஆஹவனீயே ஜீஹோதியும் ஒன்றை மற்றோன்று சாராத தனித்தனியான சாஸ்திரம் ஆனால் யஜாதிஷுவில் நானுயாஜேஷு என்கிற வாக்கியத்திற்கு யேயஜாமஹம் கரோதி என்கிற வாக்கியத்தினை சார்ந்ததாக உள்ளதால், முன்பே கூறிய பிராப்தே சத்யாம் நிஷேத: என்பதினால், சாராத வாக்கியமாக இல்லாததால்,

அதனால் எ***ங்***கெல்லாம் ஒரு சாஸ்திர வாக்கியம் வேறொரு சாஸ்திர வாக்கியத்தினால் பாதனம் செய்யப்படுகிறதோ அ***ங்***கெல்லாம் விகல்பமே ஏற்கபடுகின்றது. இந்த விகல்பமானது ஒரு தோஷம் என்றாலும் வேறு வழியில்லாததால். இ***ங்***கும் ஏற்க்கப்படவேண்டும். எப்படி வ்ரிஹி வாக்கியத்திலோ என்று கூறமுடியாது. அதாவது இ***ங்***கு கூறப்படும் விஷயம், சாஸ்த்திரத்தில் **வ்ரிஹிபிர் யஜேத** என்றும் **யவைர்வா யஜேத** என்றும் இரண்டு வேறு சாஸ்திர வாக்கிய***ங்***கள் உள்ளது ஒன்று வ்ரிஹியினை திரவியமாகவும் மற்றொன்று யவத்தினையும் உபயோகிக்க கூறுகிறது. இ***ங்***கு இரண்டும் ஒரு யாகத்தில் உபயோகப்படுத்த முடியாததால் , விகல்பம் ஏற்கப்படுகிறது. விகல்பம் என்பது ஒரு தோஷம், எப்படியென்றால், வ்ரிஹியை விதிக்கும் சாஸ்திரத்தை ஏற்றால் யவத்தினை விதிக்கம் சாஸ்திரமானது பிரமாணமில்லாததாகவும் ஆகும். அதுமட்டுமல்லாமல் இரண்டிற்கும் வேறுவேறான இரண்டு அதிருஷ்ட***ங்***கள் கற்பனை செய்யவேண்டியதாகும். ஒன்றை செய்வதால் அதிருஷ்டம் உண்டாவது என்று. ஆனால் இ***ங்***கு யஜாதிஷுவில் அப்படி ஒரு நிலை (விகல்பத்தை ஏற்க) இல்லை. எ***ங்***கு ஒரு அதிருஷ்டம் மாத்திரம் ஏற்று செய்ய முடியுமோ அ***ங்***கு இரண்டு அதிருஷ்டம் ஏற்பது கௌரவம் என்கிற மற்றொரு தோஷத்தினை உண்டாக்கு். அதனால் இ***ங்***கு இரண்டு அதிருஷ்டம் ஏற்காமல், பர்யுதாசத்தினை சார்ந்து விகல்பம் ஏற்காமல் லாகவத்தை அடைகிறோம்.

இப்படி ஏற்பதினால் வாக்கியத்தின் பொருள், அனுயாஜத்திற்கு வேறான யாகத்தில் யஜாதிஷு யேயஜாமஹம் என்கிற மந்திரம் படிக்கப்படவேண்டும், என்று ஆகிறது. காரணம் இ***ங்***கு ந**ஞ்**சானது அனுயாகத்திலிருந்து வேறான என்கிற பொருளை லக்ஷனையினால் குறிப்பதாகிறது. என்பதால் விகல்பம் இல்லாதாகிறது. இந்த வாக்கியத்தில் யேயஜாமஹே என்கிற மந்திரம் விதிக்கப்படுவதில்லை. காரணம் அது இதற்கு முன்பு கூறிய வாக்கியத்தினால் (யஜாதிஷு யேயஜாமஹம் கரோதி) கூறப்பட்டதால். அ***ங்***கு விதிக்கப்படுகிறது. சாமன்ய சாஸ்திர வாக்கியத்தினால் அடையப்படும் யேயஜாமஹம் என்கிற மந்திரம்

அனுவாதத்தினால் இரண்டாவது வாக்கியத்தில் அனுயாஜத்திற்கு வேறான யாகத்தில் படிக்கபட வேண்டும் என்று பொருள் தருவதாகிறது.

## பர்யுதாசம் மற்றும் உபசம்ஹாரத்தின் வேறுபாடு

*नन्वेवं सामान्यशास्त्रप्राप्तस्य विशेषे संकोचनरूपादुपसंहारार्त्पयुदासस्य भेदो न स्यादिति चेन्न उपसंहारो हि तन्मात्रसंकोचार्थः। यथा पुरोडाशं चतुर्धा करोतीति सामान्यप्राप्तचतुर्धाकरणम् 'आग्नेयं चतुर्धा करोति' इति विषादाग्रेयपुरोडाशमात्रे संकोच्यते। पर्युदासस्तु तदन्यमात्रसंकोचार्थ इति ततो भेदात्। कुत्रचिद्विकल्पप्रसक्तावप्यनन्यगत्या प्रतिषेधाश्रयणम्। यथा 'नातिरात्रे षोडशिनं गृह्णाति' इति शास्त्रप्राप्तषोडशिग्रहणस्य निषेधाद्विकल्पप्रसक्तावपि न पर्युदासाश्रयणम्, असंभवात्। यथा हि– यद्यत्र षोडशिपदार्थेन नञर्थान्वयस्तदातिरात्रे षोडशिव्यतिरिक्तं गृह्णातीति वाक्यार्थबोधः स्यात्, सोऽपि न संभवति; तद्विधिविरोधात्। अतोऽत्रानन्यगत्या शास्त्राप्राप्तषोडशिग्रहणस्यैव निषेधः। न च विकल्प प्रसक्तिस्तस्याप्यपेक्षणीयत्वात्।*

**நானுயாஜேஷு** என்கிற வாக்கியத்தில் பர்யுதாசத்தினை ஏற்றால் அதற்கும் உபசம்ஹாரத்திற்கும் எந்த வேறுபாடும் இல்லாமல் போகும் என்றால் சாமான்யமான விதிவாக்கியத்தினால் அடையப்பட்ட பொருளானது விக்ஷேமாக அடையப்பட்டதில் சேர்க்கப்படுவது, உபசம்ஹாரம் அதற்கும் பர்யுதாசத்திற்கும் எந்த வேறுபாடும் இருக்காது என்பது இ***ங்***கு பூர்வபக்ஷியின் சந்தேகம்.

இந்த சந்தேகத்திற்கு இடமில்லை, உபசம்ஹாரமானது தன்னிலும் தன்னுடன் வேறானதிலுமுள்ள ஒரு கர்மத்தினை வேறானதிலிருந்து பிரித்து தன்னில் சேர்த்து கொள்வது உபசம்ஹாரம் ஆகும். உதாரணத்திற்கு, தர்ஷபூர்ணமாச பிரகரணத்தில் **புரோடாஷம் சதுர்தா கரோதி** (புரோடாஷத்தை நான்கு பாகம் ஆக்குகின்றார்) என்கிற வாக்கியம் பிரதான ஹோமத்தில் மீதமுள்ள புரோடாஷத்தை அத்வர்யு, பிரம்மா, ஹோதா, மற்றும் ஆக்னீத்ர (ஹோதாவின் உதவியாளர்) இவர்கள் உண்ண வேண்டி நான்காக பிரிக்க கூறுகிறது.. சாமன்யமாக கூறப்பட்ட புரோடாஷத்தினால் பௌர்ணமாசியில் செய்யபடும் ஆக்னேயம் மற்றும் அக்னீஷோமீயம் ஆகியவையில் உள்ள புரோடாஷத்தினையும் இப்படி நான்காக பிரிக்க கூறும்போது **ஆக்னேயம் சதுர்தா கரோதி** (ஆக்னேய புரோடாஷத்தை நான்காக பிரிக்கிறார்) என்று விஷேசமாக அடையப்பட்ட பொருளினால் ஆக்னேயத்தில் மாத்திரம் செய்யப்படவேண்டும் என்று ஏற்பது உபசம்ஹாரம் ஆகும். ஆனால், யேயஜாமஹம் மந்திரம் நானுயாஜம் வாக்கியத்தில் தன்னிலிருந்து பிரித்து, தன்னிலிருந்து வேறான மற்றவைகளில் விதிக்கின்றது. இப்படி தன்னில் அடையப்பட்ட ஒரு கர்மத்தை தன்னிலிருந்து

வேறாக்கி வேறொன்றில் விதிப்பது பர்யுதாசம் ஆகும். இதுவே இவற்றின் வேறுபாடு ஆகும்.

சில இட***ங்***களில் விகல்பம் ஏற்கும் நிலையிருந்தும் வேறு வழியில்லாமல் அ***ங்***கு பிரதிஷேதத்தை சாரவேண்டியுள்ளது. உதாரணத்திற்க அதிராத்திரம் என்னும் யாகத்தில் உபயோகப்படுத்தப்படும் . ஒரு பாத்திரத்திற்கு ஷோடசி என்று பெயர். **நாதிராத்ரே ஷோடசினம்க்ருஹ்ணாதி** (அதிராத்திரத்தில் ஷோடசி பாத்திரம் ஏற்கப்படுவதில்லை) என்பதில் . இது **அதிராத்ரே ஷோடசினம் க்ருஹ்ணாதி** என்கிற வாக்கியத்தினால் அடையப்பட்ட ஷோடசி பாத்திரத்தினை ஏற்பதினை நிஷேத்திக்கின்றது என்பதால் இ***ங்***கு விகல்பம் ஏற்கப்படும்நிலை ஏற்படும்போது இ***ங்***கு பர்யுதாசத்தினை ஏற்பதில்லை. காரணம் என்னவென்றால், இ***ங்***கு பர்யுதாசத்தினை ஏற்பது முடியாதாகிறதால்.

ஏன் முடியாதாகிறது என்று விளக்கமாக காண்போம், ந***ஞ்***சர்தத்தினை ஷோடசியினுடன் சேர்த்தால் (சம்பந்தப்படுத்தினால்) வாக்கியத்தின் பொருள், அதிராத்திர ஹோமத்தில் ஷோடசிக்கு வேறான பாத்திரம் ஏற்கபடுகின்றது. என்று பொருள் ஆகிறது. இது ஏற்க முடியாதாகிறது. காரணம், விதிவாக்யமான அதிராத்ரம் ஷோடசினம் க்ருஹ்ணாதி என்பது இதற்கு விரோதமானதாக இருப்பதால் சரி இப்படியில்லாமல் ந***ஞ்***சர்தத்தினை அதிராத்ரத்துடன் சேர்த்தால், அப்பொழுது வாக்கியத்தின் பொருள், அதிராத்திரத்திலிருந்து வேறான ஹோமத்தில் ஷோடசி பாத்திரம் ஏற்கப்படுகின்றது என்கிற பொருள் உண்டாகும். இதுவும் பிரத்தியக்ஷமாக உள்ள விதி வாக்கியமான அதிராத்ரம் ஷோடசினம் கிருஹ்ணாதி என்பதுடன் விரோதமாகின்றது என்பதால் இதுவும் ஏற்கமுடியாததாகிறது. இதனால், வேறு வழியில்லாமல் இ***ங்***கு சாஸ்திர வாக்கியத்தினால் நமக்கு கிடைத்த ஷோடசி பாத்திரத்தினை ஏற்பதினை நிஷேதிப்பதாக உள்ள பொருளே சிந்தாந்திகளால் ஏற்கப்படுகின்றது. விகல்பத்தினை ஏற்கும் நிலையிருந்தும் பர்யுதாசத்தினை அனுசரிக்காமல் இ***ங்***கு பிரிதிஷேதமே ஏற்கபடுகிறது. வேறு வழியில்லை என்பதால்

## **விகல்பத்தில் நிஷேதத்தினால் தோஷம் உண்டாவதில்லை**

*इयांस्तु विशेषः – यद्विकल्पादेकप्रतिषेधेऽपि प्रतिषिध्यमानस्य नानर्थहेतुत्वम्, विधिनिषेधोभयस्यापि क्रत्वर्थत्वात्। यत्र तु न विकल्पः, प्राप्तिश्च रागत एव, प्रतिषेधश्च पुरूषार्थः तत्र प्रतिषिध्यमानस्यानर्थहेतुत्वम्, यथा 'न कलञ्ज भक्षयेत्' इत्यादौ न कलञ्जभक्षणदेः तत्र भक्षणनिषेधस्यैव पुरूषार्थत्वात्। न च 'दीक्षितो न ददाति न जुहोति' इत्यादौ शास्त्रप्राप्तदानहोमादीनां निषेधाद्विकल्पापत्तिरिति वाच्यम्। स्वतःपुरूषार्थभूतदानहोमादीनां निषेधस्य पुरूषार्थत्वाभावेऽपि*

*निषिध्यमानास्यानर्थहेतुत्वात्, यथा क्रतौ स्वस्त्रीगमनादेः, तन्निषेधस्य क्रत्वर्थत्वेन तस्य क्रतुवैगुण्यसंपादकत्वात् ।*

சாதாரணமாக விகல்பத்தில் ஒன்றை ஏற்பதில்லை மற்ற சாஸ்திரமானது பிரமாணமில்லாமல் ஆகிறது என்பது காண்டோம். ஆனால், இந்த இடத்தில் ஷோடசி பாத்திரம் ஏற்கப்பட்டாலும், ஏற்கப்படாவிட்டாலும் அது எந்தவித தோஷத்தையும் உண்டு செயவதில்லை. தோஷமானது சந்த்யாவந்தனத்தை போல அகரனே ப்ரத்யவாய என்கிற வாக்குபடி ப்ரத்யவாய தோஷம் செய்யாமிலிருந்தால் உண்டாகும். அது இ***ங்***கு உண்டாவதில்லை என்பது பொருள். காரணம் இ***ங்***கு செய்வதும் செய்யாததும் (ஏற்பது, ஏற்காதது ஷோடசி பாத்திரத்தை) யாகத்திற்காகவே என்பதால், செய்வதினால் ஒரு அதிருஷ்டமும் செய்யாமலிருப்பதினால் ஒரு அதிஷ்டமும் என்று இரண்டு அதிருஷ்ட***ங்***கள் கற்பனை செய்யப்பட்டதால், ஆனால் ந கல***ஞ்***சம் பக்ஷயேதி முதலிய இட***ங்***களில் இந்த விகல்பம் இல்லாததால் கல***ஞ்***ஜம் முதலியது ராகத்தினால் (ஆசையினால்) உண்ணபடுவதாலும், சாஸ்திர நிஷேதத்தை ஏற்காமலிருந்தால் கல***ஞ்***ஜத்தினால்(விஷமுள்ள மாமிசம்) விபரீதம் ஏற்பட வாய்ப்பு உள்ளதாலும், இ***ங்***கு பிரதிஷேதமே புருஷனால் செய்யபடவேண்டியது.

ஜ்யோதிஷ்டோமத்தில் எஜமானனுக்கு தீக்ஷை தரும் கர்மம் உள்ளது. அப்படி தீக்ஷை பெற்ற எஜமானன் தானம், ஹோமம், சமைத்தல் முதலியவை செய்ய கூடாது என்று **தீக்ஷிதே ந ததாதி, நஜுஹோதி** முதலிய வாக்கியம் விதிக்கிறது. ஆனால் தானம் முதலியவை வேதத்தில் புருஷனால் செய்யபடகூடிய புருஷார்தமாக கூறப்பட்டுள்ளதால் அதை அவர் செய்ய முற்படலாம் அப்பொழுது இந்த விதி தீக்ஷை அடைந்த எஜமானன் அப்படிப்பட்ட கர்ம***ங்***களை செயயாமலிருக்க கூறுகிறது. அதனால், புருஷனுக்காக விதிகப்பட்டாலும் கர்மத்திற்காக நிஷேதிகப்பட்டுள்ளது. ஆகையால் இரண்டும் சமமானது இல்லை என்பதால் விகல்பம் இல்லை.. விகல்பமில்லாததால் நிஷேதிக்கபட்ட தானம் முதலியவை விரும்பதகாத பலனை தருவதில்லை. இதற்கு காரணம் இவை ராகத்தினால் செய்யப்படுவதில்லை ஆனால் சாஸ்திர விதியினால் செய்யப்படுவது.

சாஸ்திரத்தினால் விதிக்கப்பட்ட புருஷார்த்தத்தில் நிஷேத வாக்கியமானது வந்து அந்த கர்மத்தை செய்வதில் இருந்து விளக்குவது போல். ராகத்தினால் உண்டான புருஷார்த்தத்திலும் சில இட***ங்***களில் விலக்கும். இவை இரண்டும் கர்மமானது நன்றாக நடக்க வேண்டி செய்யப்பட்ட நிஷேதம் ஆகும். உதாரணத்திற்கு, தர்ஷ பூர்ணமாச பிரகரணத்தில் வந்துள்ள **ந ஸ்திரியமுபேயாத்** (மனைவியுடன் கூடாதீர்) என்கிற வாக்கியம் ராகத்தினால் உண்டாகும் கூடல் முதலிய செயலிலிருந்து, யாகமானது நன்றாக நடக்க வேண்டி நிஷேதிக்கிறது. இது அந்த கர்மம் செய்யும் காலம் வரையிலேயே நிஷேதிக்கப்படுகிறது. கர்மம் முடிந்ததும் இந்த நிஷேதத்தின் பிரவிருத்தி இல்லை. ஆனால், ராகத்தினால்

ஒருவர் யாக காலத்தில் பெண்ணை அடைந்தால் (மனைவி) அது யாகத்தில் எந்த ஒரு மாற்றத்தையும் உண்டு செய்வதில்லை. மாறாக, நிஷேத கர்மத்தை செய்த காரணத்தால் பிரத்யவாய தோஷம் மாத்திரம் உண்டாகும். காரணத்தால், இந்த பிரத்யவாய தோஷமும் பிராயஸ்சித்த கர்மத்தினால் தீர்க்கப்படுகிறது. எப்படி இது யாக பலனில் எந்த மாற்றம் உண்டாக்காது என்றால், யாகமானது, விதிக்கப்பட்ட கர்ம***ங்***கள் சரியாக செய்யப்படாவிட்டாலோ அல்லது செய்யப்படாவிட்டாலோ மாத்திரம், பலன் தருவதில் தகுதியற்றதாக ஆகிறது.

ஆகையினால் ராகத்தினால் உண்டான புருஷார்தமானது தடை செய்யபடும் போது (நிஷேத வாக்கியத்தால்) அதை மீறுவது நரகம் முதலிய விரும்பத்தகாத பலனை அளிக்கின்றது. ஆனால், கர்மத்தினால் உண்டான புருஷார்த்தமானது தடைசெய்யப்படும்போது அதை மீறினால் நரகம் முதலிய விரும்பதகாத பலனை தருவதாக இல்லாவிட்டாலும் பிரத்யவாய தோஷத்தை மாத்திரம் தருவதாக ஆகின்றது. விதியானது எப்படி புருஷார்த்தமாக இருக்கிறதோ அப்படியே நிஷேதமும் புருஷார்தமாக இருக்கிறது.

## **அர்த்தவாத நிரூபணம்**

*प्राशस्त्यनिन्दान्यतरपरं वाक्यमर्थवादः। तस्य च लक्षणया प्रयोजनवदर्थपर्यवसानम्। तथा हि अर्थवादवाक्यं हि स्वार्थप्रतिपादने प्रयोजनाभावाद्विधेयनिषेध्यायोः प्राशस्त्यनिन्दितत्वे लक्षणया प्रतिपादयति। स्वार्थमात्रपरत्वे आनर्थक्यप्रसङ्गात। आम्नायस्य हि क्रियार्थत्वात्। न चेष्टापत्तिः; 'स्वाध्यायोऽध्येतव्यः' इत्यध्ययनविधिना सकलवेदाध्ययनं कर्तव्यमिति बोधयता सर्ववेदस्य प्रयोजनवदथ्रपर्यवसायित्वं सूचयतोपात्तार्थत्वेनानर्थक्यानुपपत्तेः।*

வேதத்தின் பிரிவுகளாக கூறப்பட்ட விதி, மந்த்ரம், நாமதேயம் நிஷேதம் மற்றும் அர்த்தவாதத்தில் மற்ற நான்கும் விலக்கமாக கண்டபின் அர்த்தவாதம் இப்பொழுது ஆரம்பிக்கப்படுகின்றது. அர்த்த வாதத்தின் லக்ஷணம் **பிராஷஸ்த்ய நிந்தான்தரபரம் வாக்யம்** பிராஷஸ்த்ய - போற்றிக் கூறுதல், நிந்தா - குறைகூறுதல் அன்யதரபரம் - இவை இரண்டில் ஏதாவது ஒரு வகை குறிக்கும் வாக்கியம் அர்த்த வாதம் ஆகும்.

பெருமைபடுத்தி கூறுதல் விதிக்கப்பட்ட கர்மத்தில் நம்மை பிரவிருத்தியிலும் குறை கூறுவதினால் நிஷேதிக்கப்பட்ட கர்மத்திலிருந்து நம்மை நிவிருத்தியிலும் ஈடுபடுத்தும் வாக்கியம் அர்த்த வாத வாக்கியம். முன்பே நிரூபிககப்பட்ட ஒரு விஷயத்துடனேயே சம்பந்தப்படும் என்பது முடியாத ஒன்று என்றாகிறது காரணம் இந்த அர்த்தவாத வாக்கியமானது ஒரு லக்ஷியத்தினை அடைய தனியாக ஒரு சாதனமாகாததினால் இது ஒரு பொருளற்ற வாக்கியமாக

ஆகும். போற்றியும் தூற்றியும் கூறுவதால் பிரவிருத்தியும் நிவிருத்தியும் செய்வதால்.

ஆனால், முன்பே கண்டது போல் வேதவாக்கியம் எல்லாம் ஒரு கர்மத்தை நிச்சயிக்கும் வாக்கியமானதால் வேறாக ஒரு பொருள் எடுப்பது சரியல்ல என்று. இ***ங்***கும் அதுபோல பொருளற்றதாக ஏற்பது சரியல்ல. என்பது இ***ங்***கும் அதுபோல பொருளற்றதாக ஏற்பது சரியல்ல. என்பது மட்டுமல்லாமல் அது விருப்பமுமல்ல. அத்யயன விதியாக கண்ட ஸ்வாத்யாயோ அத்யேதவ்ய: என்னும் வாக்கியத்தினால் வேதம் முழுவதும் படிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடபட்டதாலும். வேதம் முழுவதும் தர்மத்திலேயே (தர்மத்தை நிரூபிப்பிலேயே) குறியாக இருப்பதாலும் விதி, மந்த்ரம் முதலிய வாக்கிய***ங்***கள் போல அர்த்தவாத வாக்கியமும் பொருளற்றதாக இல்லாததால் அர்த்தவாத வாக்கியம் லக்ஷணையால் பிரவிருத்தி அல்லது நிவிருத்தி செய்வதால் பிரமாணமாகின்றது

*स द्विविधः– विधिशेषो निषेधशेषश्चेति। तत्र 'वायव्यं श्वेतमालभेत् भूतिकामः' इत्यादिविधिशेषस्य 'वायुर्वै क्षेपिष्ठा देवता' इत्यादेर्विधेयार्थप्राशस्त्यबोधकतयार्थवत्त्वम्। 'बर्हिषि रजतं न देयम' इत्यादिनिषेधशेषस्य, सोऽरोदीद्यदरोदीत्तद्रुदस्य रूद्रत्वम्' इत्यादेर्निषेध्यस्य निन्दितत्वबोधकतयार्थवत्त्वम्। न च प्राशस्त्यादिबोधस्य निष्प्रयोजनत्वेन नार्थवादस्यार्थवत्त्वमिति वाच्यम्ः आलस्यादिवशादप्रवर्तमानस्य पुंसः प्रवृत्यादिजनकत्वेन तद्बोधस्वरूपयोगात्।*

இந்த அர்த்தவாதம் இரண்டு வகைப்படுகிறது. **விதிசேஷம்** மற்றும் **நிஷேத சேஷம்** என்றும், விதிபாகத்தின் மீதமாக (பூர்த்தி செய்வதாக) உள்ள அர்த்தவாத வாக்கியம் விதிசேஷம். அதுபோல நிஷேத வாக்கியத்தினை பூர்த்தி செய்வதாக உள்ள அர்த்தவாத வாக்கியம் நிஷேத சேஷம். உதாரணத்தின் மூலம் காண்போம் **வாயுர்வை க்ஷேபிஷ்டா தேவதா** (வாயு சீக்கிரமாக உள்ள தேவதை ) என்னும் அர்த்தவாத வாக்கியம் **வாயவ்யம் ஷ்வேதமாலபேத் பூதிகாம:** (வாயு தேவதைக்கு வெள்ளை நிறமுள்ளதை கொண்டு யாகம் செய்யவும் சொத்து அடைய ஆசையுள்ளவர் ) என்கிற விதி வாக்கியத்தின் மீதமான வாக்கியம் ஆகையால் இது விதிசேஷ அர்த்தவாதமாகின்றது. இ***ங்***கு வாயுவானது சீக்கிரம் செய்யக்கூடியது என்பதை மீண்டும் நிரூபித்தல் உபயோகமற்றதால், இ***ங்***கு வாயுயாகத்தினை போற்றி அதனை அனுஷ்டிக்க வேண்டும் என்று கூறுவதாக பொருள் கொள்ளவேண்டும்.

அதுபோல, **பர்ஹிஷி ரஜதம் நதேயம்** (பர்ஹி யாகத்தில் வெள்ளி தக்ஷிணையாக கொடுக்கப்படகூடாது) என்கிற வாக்கியம் வெள்ளியை தக்ஷிணையாக தருவதை நிஷேத்திக்கின்றது . இதனை பலப்படுத்த இந்த

வாக்கியத்தின் மீதமாக வருவது **ஸோ அரோதீத் யதரோதீத் தத் ருத்ரஸ்ய ருத்ரத்வம்** (அவர் அழுததால், எதனால் அவர் அழுதாரோ அதுவே ருத்ரனின் ருத்ர தன்மையாகும்) என்று இந்த வாக்கியம் அழுகையினால் உண்டான கண்ணீரினால் வெள்ளி உண்டானதால், அது தக்ஷிணையாக கொடுக்க தகுதியற்றதாக ஆகிறது என்று கூறுகிறது. அப்படி மீறி தருபவர்கள் வீட்டில் அழுகையே இருக்கும் என்று கூறுவதால் நிஷேதிக்கப்பட்ட ரஜத தானத்தை நிந்தித்து (குறை) கூறுவதால் இது நிஷேத சேஷ அர்த்தவாத வகையை சேர்ந்ததாகின்றது.

பெருமை மற்றும் குறை கூறி அமையும் இந்த அர்த்த வாத வாக்கியத்தினால் எந்த பிரயோஜனமும் இல்லை என்று பூர்வபக்ஷி கூற முடியாது . காரணம் சோம்பேரிதனம் முதலான காரண***ங்***களால் பிரவிருத்தி செய்யாமலும் நிவிருத்தி அடையாமலும் உள்ள ஒருவனை இந்த அர்த்தவாத வாக்கியமானது உற்சாகம் மற்றும் உற்சாகத் தடையோ செய்து பிரவிருத்திக்கும் நிவிருத்திக்கும் காரணமாவதால் இது உபயோகமானதே.

## அர்த்த வாதத்தின் மூன்று வகை

*स पुनस्त्रेधा। तदुक्तम्–'विरोधे गुणवादः स्यादनुवादोऽवधारिते। भूतार्थवादस्तद्धानादर्थवादस्त्रिधा मतः' इति। अस्यार्थः– प्रमाणान्तरविरोधे सत्यर्थवादो गुणवादः, यथा 'आदित्यो यूपः' इत्यादिः । यूप आदित्याभेदस्य प्रत्यक्षबाधितत्वादादियत्यवदुज्ज्वलत्वरूपगुणोऽनेन लक्षणया प्रतिपाद्यते। प्रमाणान्तरावगतार्थबोधकोऽर्थवादोऽनुवादः, यथा अग्निर्हिमस्य भेषजम्' इति, अत्र हिमविरोधित्वस्याग्नौ प्रत्यक्षावगतत्वात्। प्रमाणान्तरविरोधतत्प्राप्तिरहितार्थबोधकोऽर्थवादो भूतार्थवादः, 'यथा इन्द्रो वृत्राय वज्रमुदयच्छत्' इत्यादिः।*

இந்த அர்த்தவாத வாக்கியமானது சில இட***ங்***களில் மூன்று வகையாக பிரிக்கப்படுகின்றது. இது குணவாதம், அனுவாதம் மற்றும் பூதார்த்த வாதம் என்று. இது ஒரு ஸ்லோகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கூறப்பட்ட விஷயம் வெறு பிரமாணத்தினால் விரோதமானால் குணவாதம், வேறு பிரமாணத்தினால் கூறப்பட்ட விஷயம் அறியப்பட்டிருந்தால் அனுவாதம், இரண்டும் இல்லாமலிருந்தால் பூதார்த வாதம் என்று.

**குணவாதம்** - **ஆதித்யோ யூப:** (யூபமானது - யாகத்தில் நடப்பட்ட கம்பம், சூரியன்) என்று, இ***ங்***கு பிரத்யக்ஷமாக அறியப்படும் சூரியனுக்கும் யூபத்திற்க்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லாத போது, இதற்கு பொருள் சூரியனை போன்று பிரகாசமான கம்பம் என்ற குணத்தை குறிப்பதாக ஏற்கப்படுகின்றது. அதனால் இது குணவாத அர்த்த வாதம்.

**அனுவாதம்** - **அக்னிர் ஹிமஸ்ய பேஷஜம்** (நெருப்பு குளிருக்கு மருந்து) என்று இ**ங்**கு கூறப்பட்ட நெருப்பு குளிரின் எதிரி அதாவது குளிரில் நெருப்பானது குளிரைபோக்கி உஷ்ணத்தை தரும் மருந்து என்பது நமக்கு பிரத்யக்ஷ பிரமாணத்தினாலேயே அறியப்படுவதால் இ**ங்**கு அதனை கூறப்பட்ட வாக்கியம் அனுவாதம் (மறுபடி மொழிதல்) என்கிற அர்த்த வாத வகையை சேர்ந்ததாகின்றது.

**பூதார்த்தவாதம்** - **யதா இந்த்ரோ வ்ருத்ராய வஜ்ரமுதயச்சத்** (இந்திரன் வ்ருத்ரனை கொள்ள வஜ்ரத்தினை உயத்திய போது) இ**ங்**கு வ்ருத்ராசுரனை கொள்ள இந்திரன் தன்னுடைய ஆயுதமான வஜ்ரத்தினை உயர்த்தி பிடித்தது நமக்கு வேறு எந்த பிரமாணத்தினாலும் அறியப்படமுடியாதது என்பதால் இது குணவாதமோ அனுவாதமோ இல்லாததால் மூன்றாவது வகையான பூதார்தவாதத்தினை சார்கிறது. பூத- கடந்த காலம் என்பதால் கடந்த காலத்தை பற்றிய அறிவை தரும் அர்த்தவாதம் பூதார்த்தவாதம் ஆகும்.

## முடிவுரை

*एवं च 'यजेत स्वर्गकामः' इत्यादिनिखिलवेदस्य साक्षात्परम्परया वा यागादिधर्मप्रतिपादकत्वं सिद्धमं। सोऽयं धर्मो यदुद्दिश्य विहितस्तदुद्देशेन क्रियमाणस्तद्धेतुः ईश्वरार्पणबुद्ध्या क्रियमाणस्तु निःरेयसहेतुः। न च तदर्पणबुद्ध्यानुष्ठाने प्रमाणाभावः 'यत्करोषि यदश्नासि यज्जुहोषि ददासि यत्। यत्तपस्यसि कौन्तेय तत्कुरूष्व मदर्पणम्' इति भगवद्गीतास्मृतेरेव प्रमाणत्वात्। स्मृतिचरणे तत्प्रामाण्यस्य श्रुतिमूलकत्वेन व्यवस्थापनादिति शिवम्।।*

இதனால் **யஜேத ஸ்வர்க்காம:** முதலிய வாக்கிய**ங்**கள் அமைந்த வேதமானது முழுவதும் நேரடியாகவோ அல்லது பரம்பரையாகவோ (ஏதாவது ஒரு சம்பந்தத்தினாலேயோ) யாகம் முதலிய தர்மத்தினை நிரூபிப்பதாக இ**ங்**கு முடிவு ஆகிறது. அப்படிப்பட்ட இந்த தர்மமானது எதற்காக விதிக்கப்பட்டதோ அதற்கான காரணமாகின்றது அதாவது ஸ்வர்கம் என்னும் பலனை அடைய விதிக்கப்பட்ட கர்மத்திற்கு யாகமானது காரணமாகின்றது.

இ**ங்**கு முடிவுரையில் மீமாம்ஸகர்களின் முடிவான எல்லா கர்ம**ங்**களிலும் ஏதாவது ஒரு காரணம் இருக்கும் என்பதும் அப்படி ஆசை இல்லாமல் செய்யப்படும் நிஷ்காம கர்மத்தினால் மோக்ஷம் என்பது கிடைக்க முடியாது என்பதும் . ஆனால் இ**ங்**கு லௌகாக்ஷி பாஸ்கரர் வேதாந்தத்தின் அடிப்படையில், பலனில் ஆசையில்லாமல், அதனை பகவானுக்கு அர்பணம் செய்யும் புத்தி கொண்டு செய்யப்படும் எல்லா கர்ம**ங்**களும் மோக்ஷம் அடைய உதவும் என்று கூறுகிறார்.

அப்படியென்றால் , இ***ங்***கு தர்மமாக போதிக்கப்பட்ட யாகம் முதலியவை ஆசையுள்ளவர்க்கு மாத்திரம் தர்மமா என்று கேள்வி எழலாம். அது அப்படி அல்ல. மோக்ஷம் அடைய விரும்பும் முமுக்ஷுகள் செய்யப்படும் கர்மத்தின் பலனை ஈஷ்வரார்பணம் செய்வதின் மூலம் சித்தத்தினை சுத்தம் செய்வதினால், விருப்பு – வெறுப்பு முதலியவைகளை நீக்கி மோக்ஷம் அடைய உதவும் என்பது முடிவு. இதற்கு பிரமாணம் ஏதாவது இருக்கிறதா என்றால் உண்டு. வேதம் அபௌருஷேயம் என்று கூறப்பட்ட போது அ***ங்***கு கொடுக்கப்பட்ட ய:கல்ப: ஸ கல்ப பூர்வ: (இந்த கல்பம் பூர்வகல்பத்தை அனுசரித்து செய்யப்பட்டது) என்பது போன்ற வாக்கிய***ங்***களினால் ஈஷ்வரன் பழைய கல்ப***ங்***கள் போன்றே இந்த கல்பத்தையும் உண்டாக்கினார் என்பது விள***ங்***குவதாலும் அந்த ஈஷ்வரனை கிருஷ்ண பரமாத்மாவின் இதழ்களில் இருந்து உதித்த கீதை சாஸ்திரமானது இதற்கு பிரமாணம் . எந்த வாக்கியம் என்றால்.

**யத்கரோதி யதஷ்னாதி யஜ்ஜீஹோஷி ததாஸி யத்**
**யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மதர்பணம் – கீதை 9-27**

என்று, எது செய்கிறாயோ, எது உண்ணுகிறாயோ, எது ஹோமிக்கிறாயோ, எது தானம் செய்கிறாயோ, எது தபஸாக செய்கிறாயோ, அர்ஜுனா (கௌந்தேய – குந்தியின் மைந்தா) அது எல்லாம் எனக்கு அர்பிப்பாயாக, கிருஷ்ணன் கூறிய வாக்கியம் பிரமாணமாகும்.

ஆனால், கீதையானது ஸ்மிருதியானதால், ஷ்ருதியை காட்டிலும் பலமில்லாததாலும் என்று கூறமுடியாது, ஷ்ருதியே எல்லா ஸ்மிருதிகளிற்க்கும் மூலம் என்று சூத்திரத்தில் ஜைமினி முடிவு செய்து உள்ளதாலும் அதுபடி இதனை பிரமாணமாக ஏற்பதில் எந்த தோஷமும் இல்லை என்பது உறுதி.

*बालानां सुखबोधाय भास्करेण सुमेधसा।*
*रचितोऽयं समासेन जैमिनीयार्थसंग्रहः।।१।।*
*इतिश्रीमहामहोपाध्यायलौगाक्षिभास्करविरचितपूर्वीमांसार्थसंग्रहनामकं प्रकरणं समाप्तिमगात्।।*

**பாலானாம் சுகபோதாய பாஸ்கராய சுமேதஸா /**
**ரசிதோயம் சமாசேன ஜைமினியார்த்த ச*ங்*க்ரஹ: //**

பாலர்கள், பூர்வமீமாம்ஸை சாஸ்திரத்தை படிக்காதவர்கள், சுலபமாக புரிந்து கொள்ள வேண்டி, கற்றறிந்த பாஸ்கரனான என்னால் சுருக்கமாக இந்த ஜைமினியின் சூத்திர பொருள் க்ரஹித்து எழுதப்பட்டது.

பூர்வமீமாம்ஸையின் சிந்தாந்தத்தை சுரு*ங்*க கூறி விள*ங்*க வைத்த இந்த அர்த்த ச*ங்*கிரகம் எனும் கிரந்தமானது முடிவு பெறுகின்றது.

## அர்த்த சங்கிரகம் நிறைவுற்றது

## அர்ததலஹரி நிறைவுற்றது